Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆவணி ௴ 06 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 26 (22-08-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-33

## கருத்துக் கலசம்

மயூரா

### திருவிழாவும் பக்தியும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும் சொல்லப்படுவதுஉண்டு.

மனிதனுல் ஆகாத காரியம் இறைவனுல் ஆகும். இறைவன் நாமத்தைச் சொல்வதால், அவனை அனுதினமும் துதிப்பதால், அவனது அனுக்கிரகத்தைப் பெற்று வினை போக்கி, நல்வாழ்வு பெறலாம் என்பது சமய நம்பிக்கை. மனிதர்களுக்கு உள்ள நம்பிக்கை.

ஆண்டவன் அனுக்கிரகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் அவன் அருளை நம்புகிருர்கள். அதனுல் அவனை வணங்குகிருர்கள். அதனுல் தமக்கு தொல்லைதரும் வினையை அகற்றலாம்என எண்ணுகிருர்கள்.

கடவுளை வணங்குவோருக்கு இதயசுத்தி அவசியம். இதயசுத்தி இல்லாத வழிபாட்டால் பயனில்லை. தனது சக மனிதனுக்கு உதவும் உணர்வு அவசியம். ஆலயம் சென்று வணங்குபவர்கள் எல்லாரும் உண்மையான இறைபக்தர்கள் ஆகமுடியாது.

அதுவும் திருவிழாக் காலங்களில் மட்டும் ஆலயம் சென்று வழிபடுவோரைப் பக்தர்களாகக் கொள்ள முடியாது: ஏனெனில் திருவிழாக்கள் இப்போது பக்திபூர்வமானவையாக அமைவதில்லை. வெறும் களியாட்ட விழாக்களாகவும், சந்தைப்படுத்தும் விழாக்களாகவும் மாறிவிட்டன.

பக்திபூர்வமாக வழமையாக வழிபடுபவனையும் குழப்பிவிடும் குணும்சம் திருவிழாக்களுக்கு வந்துவிட்டன. இந்த நிலையை உருவாக்கியவர்களும் மக்களே.

இந்த நிலை நீக்கப்பட வேண்டும். ஆலயங்களின் பரிசுத்தத் தன்மை பேணப்பட வேண்டும்.

பிரசித்தி பெற்ற ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் அதிக மக்கள் கூடுகிருர்கள். அது தவறல்ல. தவிர்க்க வேண்டியதும் அல்ல.

உற்சவங்கள் — திருவிழாக்கள் களியாட்ட விழாக்களாக, சந்தைப் படுத்தும் விழாக்களாக அமையாமல் பக்தி உணர்வு தரும் விழாக்களாக அமைவதே முக்கியம். அதற்கு ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகிகளின் ஒத்துழைப்புத் தேவை. மக்களின் மனமாற்றமும் தேவை. இவை எப்போது நடக்கப்போகின்றன? ஆலயங்களின் மகத்துவம் உரிய முறையில் பேணப் படுவது எப்போது?

### 4 பொலீஸாரும் காவலில்

நாடாளுமன்றக் கட்டட கிரனேட் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 4 பொலீஸார் உட்பட எட்டுப்பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கொழும்புப் பேச்சுக்கள்

# போராளிகள் சார்பில் சட்டத்தரணிகள் குழு

## இந்திய சட்ட அறிஞருடன் ஆலோசனை நடத்த விரைவு

— எம். பேரின்பநாயகம், கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 22

போராளிகளின் சார்பில் சட்டத்தரணிகள் குழு கொழும்புக்கு விரைந்தது.

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட இருக்கும் அதிகாரங்களுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்காகக் கொழும்பில் இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன அல்லவா? இந்தியக் குழுவில் உள்ள சட்ட ஆலோசகர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்காகவே போராளிகள் குழு சார்பில் சட்டத்தரணிகள் குழு ஒன்று கொழும்புக்கு விமானத்தில் விரைந்திருக்கிறது.

போராளிகள் இயக்கம் ஒன்றின் சார்பில் சென்ற பிரஸ்தாப சட்டத்தரணிகள் குழுவுடன் அந்த இயக்கத்தின் அரசியல் பிரிவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரும் சென்றிருக்கிருர்.

மற்றெரு போராளிகள் இயக்க சார்பில் வழக்கறிஞர் குழுவும் நேற்று இந்திய அதிகாரிகள் குழுவைச் சந்திக்கக் கொழும்பு செல்ல இருப்பதாக அறியவந்தது.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும் இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுக்கள் இன்று சனிக்கிழமை முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுக்களில் திருப்திகர முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக கொழும்பு இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னெரு சுற்றுப் பேச்சுக்கள் பின்னர் நடைபெறும் என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்பேச்சுக்கள் கடந்த புதன்கிழமை கொழும்பு ஜனுதிபதி செயலகத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் பாதுகாவலர் மீது கடும் விசாரணை

கொழும்பு, ஆக. 22

எல்லா அமைச்சர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் வைத்திருந்த துப்பாக்கிகள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனுதிபதியை நோக்கிச் சுடப்பட்டரவை எந்தத் துப்பாக்கியில் இருந்து வந்தது என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே அவை பரிசோதனை செய்யப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் நடந்த தினம் நாடாளுமன்றத்துக்கு பொதுமக்கள் வருவது தடைசெய்யப்பட்டிருந்தது.

அமைச்சர்கள், எம். பிக்கள், நாடாளுமன்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

ஜனுதிபதி கொலை முயற்சி

## ஸ்கொட் சி. ஐ. டிகள் விசாரணைக்கு உதவுவர்

ஸ்கொட்லந்து பொலீஸ் துப்பறியும் கோஷ்டி ஒன்று இன்று கொழும்பு வந்து சேரும்.

நாடாளுமன்றக் சட்டடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு, துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பாகத் துப்புத் துலக்குவதில் இக் கோஷ்டி இலங்கைப் பொலீஸாருக்கு உதவும்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா இத் தகவலை நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

## பொது நிகழ்ச்சிகளில் ஜனுதிபதி பங்குபற்ருர்

பொது நிகழ்ச்சிகளில் ஜனுதிபதி ஜெயவர்த்தன சில காலம் கலந்து கொள்ளமாட்டார்.

பாதுகாப்பு காரணமாக இப்படித் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று சனி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் ஜனுதிபதி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டு விட்டது. (உ-எ)

## மணி ஓடர் தேவையில்லை

கொழும்பு, ஆக. 22

வடபகுதி ரயில் நிலையங்களில் இனிப் பணம் கொடுத்து டிக்கட் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவு வடபகுதி ரயில் நிலையங்களுக்கு ரயில்வே திணைக்களம் அனுப்பி உள்ளது

இதுவரை காலமும் மணி ஓடர் கொடுத்தே பயணிகள் டிக்கட் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ எ)

### அன்பான வாசகர்களே!

இன்று தொடக்கம் சஞ்சீவியின் விலையை இரண்டு ரூபா ஐம்பது சதமாக உயர்த்தியுள்ளோம் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

அதே போல பக்கங்களையும் பத்தாக அதிகரித்துள்ளோம்.

வாரத்துக்கு வாரம் வண்ணமிகு கருத்தோவியங்கள், புதிய உலகை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் புதிய அம்சங்கள் என்பனவற்றைச் சஞ்சீவியில் நீங்கள் படிக்கலாம். வாரம் முழுவதும் வைத்துப் படிக்கக்கூடியதாக சஞ்சீவி கனதியாக இருக்கும்.

சஞ்சீவிக்கு இன்று தொடக்கம் இரண்டு ரூபா ஐம்பது சதத்தை மட்டுமே கொடுத்து வாங்குங்கள்.

—நிர்வாகிகள்

## செல்வச்சந்நிதி முற்றுக இடிக்கப்பட்டு புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 22

இராணுவக் கெடுபிடிகளினுல் சேதமடைந்த செல்வச் சந்நிதி ஆலயம் முற்றுக இடிக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

பெரும்பாலும் எதிர்வரும் 24ஆம் திகதி இந்த வேலைகள் ஆரம்பிக்கப் படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கு இப்பொழுது தீவிரமாக நடைபெற்று வரும் கண்ணிவெடி அகற்றும் வேலைகள் முடிவடைந்ததும் இதன் கட்டட வேலைகள் ஆரம்பமாகும்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு முடியும் வரை எவரையும் அந்த பகுதிக்கு செல்லவேண்டாம் என யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளையில் கோவிலின் வேல், திருவாசி, எழுந்தருளி விக்கிரகம் போன்ற சொத்துக்கள் காணுமல் போயுள்ளன.

சேதமடைந்த கோவி

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கிற்கு ஜேர்மன் அரசு உதவும்

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றம், புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்கு மேற்கு ஜேர்மன் அரசு உடனடி நிதி உதவி வழங்கும்.

—இப்படி மேற்குஜேர்மன் தூதுவர் நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.

ஒரு கோடி முப்பத்திரண்டு லட்சம் ரூபாவை மேற்கு ஜேர்மன் அரசு வழங்கும்.

இதுபற்றிய விவரங்களை இலங்கை அரசுடன் பேசித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க மேற்கு ஜேர்மன் அரசுக் குழு விரைவில் கொழும்புவர உள்ளது.

—இப்படி மேற்கு ஜேர்மன் தூதர் தெரிவித்தார். (உ-எ)

மக்கள் நலன் கருதி

# கூட்டணி உட்பட சக இயக்கங்கள் அனைத்துடனும் இணையத் தயார்!

## பத்மநாபா அறிவிப்பு

மட்டக்களப்புச் செய்தியாளர்:- உதயசாரதி -

மட்டக்களப்பு,ஆக.22

சக இயக்கங்களுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றேம். கூட்டு முயற்சியில் செயலாற்ற விரும்பும் கூட்டணி உட்பட எந்த அமைப்புடனும் இணைய தயாராக உள்ளோம். மக்கள் நலன்கருதி எந்த அமைப்பு செயல்பட்டாலும் சேர்ந்து கொள்வோம். ஒத்துழைப்பும் வழங்குவோம்.

மேற்கண்டவாறுசென்னையிலிருந்து மட்டக்களப்புக்கு நேரடியாக வருகை தந்துள்ள ஈ பி. ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் கே பத்மநாபா செய்தியாளருக்கு பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது இயக்கத்தின் இலட்சியம் நிறைவு பெறும் வரை போராட்டம் தொடரும்.போராட்ட வடிவம் தான் மாற்றமடைந்துள்ளது. போராட்டம் ஓயவில்லை. தொடரவிருக்கும் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை இலங்கை அரசு மதிக்காமல் ஆயுதம் மூலம் அடக்க முயலுமானுல் மீண்டும் நாம் ஆயுதப்போராட்டம் தொடருவோம்.

இலங்கை-இந்திய அரசு உடன்படிக்கை மூலம் எமது சுயநிர்ணயஉரிமை பூர்த்தியாகுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தற்போதைய தீர்வு எமக்குத் திருப்தியளிக்கவில்லை. இது முழுமையான தீர்வு அல்ல. இடைக்கால தீர்வாக இருக்கிறது. இருப்பினும் இந்திய அரசு வழங்கிய

(10ஆம் பக்கம் பார்க்க

## நேரடியாகக் கூட்டணி கலந்து கொள்ளாது

சென்னை, ஆக. 22

இந்திய, இலங்கை அரசுகளின் அதிகாரிகள் கொழும்பில் நடத்தும் பேச்சுக்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி நேரடியாகக் கலந்து கொள்ளாது.

இப்படி கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

கொழும்புப் பேச்சுக்கள் இரண்டு அரசாங்கங்களுக்கு இடையேதான் நடைபெறுகின்றன.

தேவையான ஆலோசனைகளை இந்தியத் தூதுக் குழுவுக்கு வழங்கவே திரு.சிவசிதம்பரமும்திரு. சம்பந்தனும் கொழும்பில் தங்கியுள்ளனர். இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (எ)

## கல்விப் பகுதிக்கு ரூ. 12, 1/2 கோடி நஷ்டம்

பலாலி, ஆக. 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட இராணுவ வன்செயல் நடவடிககைகளினுல் கல்விப்பகுதிக்கு சுமார் 12 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

கட்டடங்களுக்கு மட்டும் சுமார் 10 கோடி ரூபாவும் தளபாடங்களுக்கு ஒரு கோடி 10 லட்சம் ரூபாவும் ஏனைய சொத்துக்களுக்கு ஐந்தரை லட்சம் ரூபாவும் சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்விப் பகுதிக்கு ஏற்பட்டுள்ள இவ்விழப்புக்கள் திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஊடாகவும், கல்வி அமைச்சின் ஊடாகவும், வெளிநாட்டு நிதி உதவி மூலமும் அடுத்த ஆண்டின் முன்பு ஈடு செய்யப்படும் என கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் நம்பிக்கை தெரிவித்தார்,

(உ-119)

## துரையப்பா அரங்கில் விமான ஒடுபாதை

### மிகவிரைவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ் கோட்டைக்கு அருகாமையில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் சிறிய விமான ஓடுபாதை ஒன்று மிகவிரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ் குடாநாட்டின் சகலபகுதிகளிலும்இந்திய அமைதிப் படையினர் சேவையில் ஈடுபட்டிருப்பதால் அவர்களுக்காக உணவுப் பொருள்கள், ஏனைய பொருள்கள் போன்றவற்றை ஒரே தரத்தில் அதிகளவில் விமானங்கள் மூலம் கொண்டு வந்து இறக்க இந்த ஓடுபாதை அமைக்கப்படவுள்ளது. (உ-10)

### சுபநேரம்

22-8-1987
சனிக்கிழமை

சுபநேரம்:- 3.05 முதல் 4.35வரை
ராகுகாலம்:- 9 05 முதல்- 10.35வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

பழநி செல்லும் அதிர்ஷ்டசாலி யார்?

விரையுங்கள்

அதிர்ஷ்டப் பயண போட்டி
முடிவு திகதி: 25-08-1987

நிரப்பிய கூப்பன்களை உடனடியாகவே கீழ்க்கண்ட இடங்களில் ஒன்றில் சேர்ப்பியுங்கள்.

1. லியோ சாவடி - நல்லூர்
2. நல்லை ஆதீனம்
3. வேல்முருகன் ஸ்ரோர்ஸ்- நல்லூர்

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**விற்பனைக்கு**

இரண்டு HP சக்தி கொண்ட திறீபேஸ் புத்தம் புதிய இங்கிலாந்து மோட்டர் விற்பனைக்கு உண்டு. எலெக்ரோ போட்டோ, 117, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (1487)

சோவியத் சமாதான முயற்சிகளைப் பற்றி அறியவும், சோவியத் நாட்டைப்பற்றி அறியவும், நம் நாட்டு சமாதான இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், உலக சமாதானக் கவுன்ஸில் உறுப்பினரும், சட்டத்தரணியுமாகிய த. துரைசிங்கம் எழுதிய 'லெனினும் ஆசியாவும்'' என்ற நூலைப்படியுங்கள். இந்நூலின் தமிழ்' சிங்கள, ஆங்கில பதிப்புக்கள் புத்தகசாலைகளில் கிடைக்கும். விலை ரூபா 10/- சோஷலிஸ ஆய்வுக் கழகம், 31, வில்சன் வீதி, கொழும்பு-12. (676)

**சேவை**

உங்கள் தேவைகளை உடனுக்குடன் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் செய்து கொள்ளயாழ் நகரின் முதன்மை நிறுவனம் கிளீன் கட். எங்களிடம் சகல அளவுகளிலான போட்டோஸ்ரட், தெளிவான ஜேரனியோ பிரதிகளையும், தமிழ் ஆங்கில ரைப்பிங், வேலைகளையும் எவ்வேளையிலும் பெற்றுக்கொள்ளலாம். உங்களின் திருப்தியே எமது சேவை. 'கிளீன்கட்' இல. 239, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (763)

**தேவை**

தையலுக்கு நன்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் எதிர்வரும் 23.8.87 ஞாயிற்றுக்கிழமை நேரில் சமுகமளிக்கவும். மாஸ்ரர் அருளானந்தம் 27/10 நாகராஜா ஒழுங்கை, புங்கங் குளம் ரோட் கணக்கர் சந்தி, யாழ்ப்பாணம். (1559)

**கல்வி**

ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு வகுப்புகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அருகாமையில் தகுதிவாய்ந்த ஆசிரியரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- M. கனகசிங்கம், நீச்செட்லேன், கோப்பாய். (1500)

Sun Star Engineering Centre, Radio, T.V Typing (இருபாலாரும்) Welding, Wiring, Re-Winding. ஆரம்பம் 5-9-87 Theory S. C. Emmauvel B.sc (Cey) Practical:- K. Sritharan. இரு சான்றிதழ்கள் வசதியற்றவர்களுக்கு சலுகை உண்டு. விபரங்களுக்கு:-Director M.Ganash, Jegajothy Engineering Works, 41, Bazzar Lane, Jaffna. (1556)

# சவூதியை பலப்படுத்த றேகன் பிடிவாதம்

## 100 கோடி டாலர் ஆயுத விநியோகம் நெருக்கடிக்கு மேலும் தூபமிடுமா?

சவூதி அரேபியாவுக்கு 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ''எப்-15'' குண்டு வீச்சு விமானங்களையும் ''மாவெரிக்'' டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் வழங்குவது குறித்து றேகன் நிர்வாகம் ஆலோசித்து வருகிறது.

'சவூதி அரேபியா அமெரிக்காவின் ஒரு சிறந்த நட்புநாடு. இந்த ஆயுத விற்பனைக்கும் வளைகுடா யுத்தத்துக்கும் தொடர்பு இடையாது என்று அமெரிக்கா சார்பில் சமாதானம் கூறப்பட்டிருக்கிறது.

ஈரானுக்கான ரகசிய அமெரிக்க ஆயுத விற்பனை அதில் பெறப்பட்ட இலாபத்தை நிக்கராகுவா கிளர்ச்சிக்காரர்களுக்குக் கொடுத்தது ஆகிய சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸில் பெரும் எதிர்ப்பைத் தேடிக்கொண்ட அதிபர் றேகன், சவூதி அரேபிய ஆயுத விற்பனைப் பிரச்சினையிலும் நெருக்கடியை எதிர்நோக்கலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கு முன்னரும் சவூதி அரேபியாவுக்கு ஆயுதங்களை விற்கும் முயற்சி காங்கிரஸின் முட்டுக்கட்டை காரணமாகக் கைகூடாமற் போனது.

1986 ஆம் ஆண்டும் சவூதி ஆயுத விற்பனையை காங்கிரஸ் தடுத்து நிறுத்தியபோது அதற்கு எதிராக றேகன் தனது வீட்டோஅதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

கடந்த ஜூன் மாதமும் 1600 ''மாவெரிக்'' டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை சவூதி அரேபியாவுக்கு விற்க றேகன் நிர்வாகம் முயன்றது.

ஆனால் அப்பொழுது வளைகுடாவில் அமெரிக்க யுத்தக் கப்பலான ''யு.எஸ்.எஸ். ஸ்ராார்க்'' ராக்கின் ஏவுகணையால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த ஆயுதவிற்பனைக்கும்தடை ஏற்பட்டது.

சவூதி அரேபியாவுக்கு ஆயுதம் விற்பதற்கு காங்கிரஸில் எதிர்ப்பு இருந்து வருவதற்கு அமெரிக்காவில் உள்ள யூதர்களும் காரணம் ஆவர்.

இஸ்ரவேலில் உள்ள யூதர்களைவிட அமெரிக்காவில் உள்ள யூதர்கள் அதிகம்.

இவர்கள் அரசியலிலும், சொத்துடைமையிலும் அமெரிக்காவில் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர்.

இஸ்ரவேலுக்கு எதிராக ''யுத்தத்தில்'' ஈடுபட்டுள்ள ஒரு நாடாகவே சவூதி அரேபியா இஸ்ரவேலைக் கருதுகிறது. அதுமட்டும் அல்ல யஸிர் அரபாத்தலைமையிலான பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளில் சவூதிஅரேபியாவே இன்று முன்னணியில் நிற்கிறது.

வளைகுடா யுத்தத்தில் சவூதி அரேபியா உட்பட அண்டை நாடுகளும் இழுபடும் ஆபத்து இருந்து வருவதும் அமெரிக்க ஆயுத விற்பனைக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வளைகுடா யுத்தத்தில் ஈராக் தோற்கடிக்கப்பட்டு ஷியா முஸ்லிம்களின் ஆதிக்கம் வேரூன்றுவதை எதிர்க்கும் முன்னணி நாடுகளில் சவூதி அரேபியாவும் ஒன்று ஆகும்.

முஸ்லிம்களின் புனித நகரான மக்காவில் ஹஜ் கடமைகளுக்குச் சென்ற ஈரானியர்களில் 300 க்கும் அதிகமானோர் கொலைசெய்யப்பட்டதை அடுத்து சவூதி அரேபிய - ஈரானிய உறவு அடிமட்டத்துக்கு இறங்கி உள்ளது.

அதுமட்டும் அல்ல வளைகுடாவில் கடல் கண்ணிகளை அகற்றும் சர்ச்சைக்குரிய நடவடிக்கையில் சவூதி அரேபியக் கப்பல்களும் ஈடுபட்டிருக்கின்றன.

தற்போது கடல் கண்ணிகளை அகற்றும் பணியில் பத்து அமெரிக்க, சோவியத், சவூதி அரேபிய கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

கடல் கண்ணி அகற்றும் கப்பல்களைக் கொடுத்து உதவ ஆரம்பத்தில் மறுத்த பிரிட்டன் பின்பு அதற்கு இணங்கியது.

சர்வதேச கடல் பிராந்தியத்திலும் கடல் கண்ணிகள் வைக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

சர்வதேச கடல் பிராந்தியத்தில் கடல் கண்ணிகள் வைக்கப்பட்டதற்கு ஈரான் அமெரிக்காவைச் சாட்டுகிறது. அமெரிக்கா ஈரானைச் சாட்டுகிறது.

ஈரான் நினைத்தால் சர்வதேச எண்ணெய் விநியோக கடற்பாதை முழுவதிலும் கண்ணி வெடிகளை விதைத்து முழு எண்ணெய் விநியோகத்தையும் நாசமாக்கி விட முடியும் என்று ஈரானிய சபாநாயகர் அக்பர் ரப்சன்யானி எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே லண்டனின் ஸ்கொட்லாந்து துறைமுகத்தில் இருந்து 4பிரிட்டிஷ் கண்ணி அகற்றும் கப்பல்களும் ஒரு உதவிக் கப்பலும் 6ஆயிரம் மைல்



றேகன்

தூரப்பயணத்தை வளைகுடாவை நோக்கி ஆரம்பித்து விட்டன.

3 பிரெஞ்சு கண்ணி அகற்றும் கப்பல்களும் ஒரு உதவிக் கப்பலும் மத்தியதரைக் கடலில் உள்ள தவுலொன் துறைமுகத்தில் இருந்து வளைகுடாவை நோக்கி இரண்டு வார கால பயணத்தை ஆரம்பித்துள்ளன.

பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கப்பல்களும் வளைகுடாவைச் சென்றடையும் பட்சத்தில் அங்குள்ள கண்ணி அகற்றும் கப்பல்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்து விடும்.

சர்வதேச கடல் பிராந்தியத்தில் கடல் கண்ணிகளை விதைத்ததுக்குத் தான் பொறுப்பு அல்ல என்று ஈரான் அறிவித்திருப்பதால் இந்தக் கண்ணி அகற்றும் பணி மோதலில் முடிவடையும் சாத்தியம் இல்லை, ★

உலக உலா

ஏன்.பி.சீலன்

# கல்கியின் ஆசிரியர் தலையங்கம்

இந்தியா-இலங்கை ஒப்பந்தம் வெற்றி பெற்று, அந்நாட்டில் பூரண அமைதி திரும்புமானால் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியது அந்த ஒப்பந்தம் அல்ல; பிரபாகரனின் பெருந்தன்மையே!

நாம்தமிழ்ஈழக்கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கவில்லை; அதனை அடைய விடுதலைப்புலிகள் கையாளும் முறைகளும் நமக்கு உடன்பாடானவை அல்ல. ஆயினும் இதற்காக விடுதலைப் புலிகளின் வீரத்தை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அதனைப் போற்றுகிறோம். அந்த வீரத்தை விட அதிகமாக, இப்போது ஆயுதங்களை ஒப்படைத்து விட்ட தீரத்தைப் போற்றுகிறோம்; வாழ்த்துகிறோம்.

இதில் என்ன வீரதீர பராக்கிரமம் இருக்கிறது? இந்தியஇராணுவமும் யுத்த தளபாடங்களும் ஏராளமான அளவில்யாழ்ப்பாணப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காமல் இருக்க முடியுமா? அவர்கள் இந்திய இராணுவத்தை எதிர்ப்பதுதான் சாத்தியமா? என்று கேட்பவர்கள் விடுதலைப்புலிகளின் இயல்பை அறியாதவர்கள்.

விடுதலைப்புலிகள் ஸயனைட் மாத்திரையைப் பல்லிடுக்கில் கடித்துக் கொண்டு போராடுகிறவர்கள். உயிர், அவர்களுக்கு ஊதித் தள்ளும் விஷயம். லட்சியமே முக்கியம். அதனை அடையத்தலைவன் இடும் கட்டளை எதுவானாலும் நிறைவேற்றத் தயாராய் இருப்பார்கள். எனவே, பிரபாகரன் ஜாடை காட்டியிருந்தால் போதும். அவர்கள் இந்தியத் துருப்புகளுடன் மோதியிருப்பார்கள்; போரிட்டு மடிந்துமிருப்பார்கள். தங்கள் குறிக்கோளுக்காக உயிர்த்தியாகம் செய்து வீரசொர்க்கம் அடைந்திருப்பார்கள்.

அப்படி நேர்ந்திருந்தால் பாரதத்தைத் தீராத அவமானம் வந்தடைந்திருக்கும். சொல்லி முடியாத துயரம் தமிழக மக்களைச் சூழ்ந்திருக்கும். இந்திய ராணுவமோ ஒரு தர்ம சங்கடத்தைத் தொடர்ந்து, ஒரு தீராப் பழியைக் காலமெல்லாம் சுமக்க நேரிட்டிருக்கும். இந்தத் தலைகுனிவை நிமிர்த்தவே முடியாமலும் போயிருக்கும்.

நல்லவேளை, இறைவன் அருளால் பிரபாகரன் சரியான முடிவெடுத்தார். 'இந்தியாவை நாங்கள் விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை; அதனால் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்று கூறி அவ்வாறே செய்தார். இந்த ஒப்பந்தத்தைப் பிரபாகரன் ஏற்கவில்லை; ஆனாலும் ஆயுதங்களைத் துறந்திருக்கிறார்! இந்திய அரசு அவரிடம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை; ஆயினும் இந்தியாவைக் கைவிடாமல் ஆயுதங்களை ஒப்புவித்திருக்கிறார்!

இந்த ஒப்பந்தநகலைக் கூட பிரபாகரனிடம் காட்டாமல், அவரைக் கலந்தாலோசிக்காமல் இந்தியா செயல்பட்டிருக்கிறது; ஆயினும் பிரபாகரன் விடுதலைப்புலிகள் அமைப்பின்இராணுவப் பிரிவையே கலைத்துவிட்டிருக்கிறார்! 'இனி அரசியல் பிரிவு மட்டுமே செயல்படும் என்று அறிவித்திருக்கிறார். இந்தப் பெருந்தன்மைக்கு ஈடு இணை இல்லை.

இந்திய அரசு நடந்து கொண்டிருக்கும் விதத்தைப் பாருங்கள்! சண்டை சச்சரவு எல்லாம் விடுதலைப் புலிகளுக்கும் ஜெயவர்த்தன அரசுக்கும் இடையில் தான். மத்தியஸ்தம் செய்யப் புகுந்த இந்தியாவோ, இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரபாகரனிடம், ஆயுதங்களை ஒப்படை; அல்லது இந்திய இராணுவத்தை எதிர்கொள்! என்று கூறியிருக்கிறது.

இந்த நம்பிக்கைத் துரோகம் எவ்வளவு ஆத்திரத்தையும் மனவேதனையையும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருக்கும்? இருந்தபோதிலும் பிரபாகரன், 'இந்தியாவை நாங்கள் விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை என்று கூறி ஒப்பந்தத்தை மதித்து ஆயுதங்களை ஒப்படைத்திருக்கிறார்.

அப்பட்டமாகச் சொல்லப் போனால், இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய அரசு பகடைக்காய் உருட்டியது! அதன் அதிர்ஷ்டம், பிரபாகரனின் பெருந்தன்மை என்ற ஈராறு விழ, ஜெயித்துவிட்டது!

'இனி ஈழத் தமிழரைக் காப்பது இந்தியாவின் பொறுப்பு; தனித்தமிழ் ஈழம் என்ற லட்சியத்தை நாங்கள் விடவில்லை; போராட்டம் வேறு வடிவமெடுக்கும்; இந்த ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கவில்லை; சிங்கள அரசையும் நம்பவில்லை' என்றெல்லாம் கூறியுள்ளார் பிரபாகரன்.

அவரிடம் இப்போது காட்டிய பெருந்தன்மையைத் தொடர்ந்து காட்டுங்கள்' என்று கேட்டுக் கொள்கிறோம். ஆயுதங்களை மிச்சம் மீதி இன்றி ஒப்படைத்து விட்டு, அடுத்து வரப்போகிற அரசியல் தீர்வுக்கும் அவர் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொண்டு உழைக்க வேண்டும். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும் முஸ்லிம்களும் உண்டு. அவர்களுடைய மனங்களை வென்றால் தான் வாக்கெடுப்பின் முடிவில் ஒரே தமிழ் மாநிலம் உருவாக முடியும்.

'முதல்வர் பதவி எனக்கு வேண்டாம்' என்கிறார் பிரபாகரன். நல்லது; ஆனால் அமைதி அனைவருக்கும் தேவை. கசப்புணர்வை விழுங்கி விட்டு, இனி அமைதிக்குப் பாடுபடுங்கள்' என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம். ★

# ★★★★★★★★★★ வாசகர் தராசு ★★★★★★★★★★

## தனியிடம்

ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கூடிய ஆக்கபூர்வமான அரசியல் விஞ்ஞான விமர்சனங்கள் தொடர்ந்தும் வெளி வர வேண்டும்.

நாள்தோறும் சோர்ந்து வாழ்வில் அவநம்பிக்கை அலையால் மோதுண்டு களைத்துப் போன வர்களுக்கு அறிஞர்களின், அரசியல் விஞ்ஞானிகளின் அர்த்த புஷ்டியுள்ள அரசியல் ஆய்வுரைக் கண்ணோட்ட அறிக்கைகள் சஞ்சீவியில் தனியிடம் பிடித்து சுதந்திரக்காற்று வீசும்வரை புத்துணர்ச்சியுடன் காத்திருக்க வழி சமைக்க வேண்டும்.

ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

த. தேவராஜன்.

## அதிக பக்கம் தேவை

பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ''சஞ்சீவி'' யைத் தரமான முறையிற் காலந் தவறாது வெளியிட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

''குறுமுனி''யின் அரசியற் கட்டுரையையும் ''சிவா''வின் கடல் கடந்த கடிதத்தையும் நான் வாசிக்கத் தவறுவதேயில்லை.

இதுவரை வெளியான குறுநாவல்கள் எல்லாம் நன்றாக இருந்தன.

பக்கங்களை அதிகரித்துச் சிறுகதை, கவிதை, நகைச்சுவைக் கட்டுரை முதலியவற்றிற்கும்இடமளித்தால், இன்னும் அநேக வாசகர்களைச் ''சஞ்சீவி'' கவரும் என்பதற்கையமில்லை.

அதிபர்
வைத்தீஸ்வர வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை

## பழைய சங்கதிகள்

தினசரி வெளிவரும் பத்திரிகைகளைச் சுடச்சுட வாசிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட வாசகர்கள் ஒருபுறம் வாரவெளியீடுகளில் பிரசுரமாகும் தொடர் நவீனம், சிறுகதைகள், இலக்கியக்கட்டுரைகள் இப்படிப் பல்சுவைகள் நிரம்பிய நிகழ்ச்சிகளை விரும்பி வாசிக்கும் வாசகர்கள் மறுபுறம்;

இவ்வளவு பேர்களையும் திருப்தி செய்யவேண்டியது என்பது ஒரு மகத்தான பணியாகும்.

பழைய சங்கதிகளை வாசிக்கும் பொழுது ஏற்படும் சந்தோஷமே ஒரு அலாதியானது தான்!

சிறுகதை இல்லாத ஒரு வாரசஞ்சிகை நிச்சயமாக வாசகர்கள் மத்தியில் எடுபடாது. ஆகவே சிறுகதைக்கு நீங்கள் முக்கிய இடம் கொடுக்க வேண்டும் படைக்கவும். படைத்தவற்றை வாசிக்க வும் இங்கு நிறைய இருக்கின்றனர்.

து. வைத்திலிங்கம்.

Uduvil Girls' College
Uduvil

FURTHER EDUCATION PROGRAMME
A FULL TIME COURSE IN
Computer Programming
AND
Data Processing

Languages: Basic, Cobol and Word Processing leading to

Diploma in Computer Programming
and
Understanding Computers
(PITMAN — LONDON)
Lectures and Practicals on
Radio—Shack, Acorn Computers

Week - Daysfrom 9-00 a. m. to 4-00 p.m.
Duration 4 Months.
Commencing 1st. September 1987
((Aptitude test & Introduction)
(Course Fee Rs. 1,500/- for Each)

Director

I. A. B. — Preliminary, Intermediate, Final

Home Economics — Dress Making, Flower Making, Cake Making & Icing

National Certificate in English
Pitman London

PITMAN SHORTHAND TYPING
(Hostel Facilities Available)
Starts:- 1-9-87.

Director

புத்தகசாலை இடம் மாற்ற

அறிவித்தல்

இதுவரை ஸ்ரான்லி வீதியில் தற்காலிகமாக இயங்கி வந்த எமது ஸ்தாபனம் மீண்டும் கே. கே. எஸ். வீதியிலுள்ள பழைய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையளா அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்-

உங்கள் புத்தகத்தேவை எதுவானாலும் எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்.

All Ceylon Distributors
1191/1, K. K. S. Road,
JAFFNA,
(1558)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

முருங்கன் களிமண்புலத்தில் களிமண் ஏற்றிவந்து
தொழிற்சாலையில் பறிப்பதற்கான
கேள்விப் பத்திரம்

காங்கேசன்துறையில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு முருங்கன் களிமண்புலத்திலிருந்து லொறிகளில் களிமண் ஏற்றிப் பறிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் சனிக்கிழமையில் பகல் 12-00 மணி வரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1987-08-26 ஆம் திகதி மாலை 2-00 மணிவரை விநியோகிக்கப் படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப் பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987 - 08 - 27 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப் பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

இங்ஙனம் உண்மையுள்ள
தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
1987-08-20 காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிழந்தவர்கள் கவலைப்படத் தேவையில்லை

# இருக்கவே இருக்கிறது "ஜெய்ப்பூர் கால்"

மங்கையராகப்
பிறப்பதற்கே-நல்ல
மாதவஞ் செய்திட
வேண்டுமம்மா-அவர்
பங்கையக் கைநலம்
பார்த்தல்லவோ-இந்தப்
பாரில் அறங்கள்
வளர்ந்தனவே.

இது கவிமணி தேசிக விநாயகம்பிள்ளைபாடல்.

யாழ்நகரில் பழைய பூங்காவின் பின்னுல் அமைந்துள்ள அன்னையர் பொறுப்பில் இயங்கும் ஜெய்ப்பூர் கால் நிறுவனத்தைப் பார்த்த போது இப்பாடல் என் மனத்தில் ஒலித்தது.

வடகிழக்கு மாகாணங்களில் வன்முறை காரணமாகக் கால் கை இழந்தவர்கள் ஒன்ரு, இரண்டா? நூற்றுக் கணக்கு. இந்த அவலம் கிராமங்கள் தோறும் நிகழ்ந்துள்ளது. இத்தகைய அவலந் தீர்க்க முன்வந்துள்ள மங்கையர்கள் நமது பாராட்டுக்கு உரியவர்கள்.

காலிழந்ததும் அவர்கள் உலகம் குறுகிவிடும். கால் இழந்தவர்களுக்குச் செயற்கைக் கால் - ஜெய்ப்பூர்கால்இணைத்து அவர்களை மீண்டும் உலாவித் திரிய உதவும் கைகள் இந்த அன்னையர்கள்.

யாழ் ஜெய்ப்பூர் கால் உற்பத்தி நிலையத்தின் முகாமைக் குழு இதோ; தலைவர்: திருமதி தேம்பா குணநாயகம், உபதலைவர்: திருமதி எட்டா மேதர், செயலாளர்: திருமதி ரீனி யோகநாதன், உபசெயலாளர்: திருமதி எம். இராஜரட்னம், நிர்வாகச் செயலாளர் வண. சகோதரி ஓட்ஸ் ஜோசப், பொருளாளர்: கலாநிதி திருமதி எஸ். தெய்வேந்திரன், உப பொருளாளர்: கலாநிதி திருமதி ஜே. கணேசமூர்த்தி.



எஸ். பிரான்சிஸ்

இந்த நிறுவனத்தின் உயிர்நாடி இங்கு குறிப்பிட்ட அன்னையர் குழாமே.

வடகிழக்கு மாகாணங்களில் காலை இழந்தவர்கள், தாம் நிரந்தரமாக ஊனமுற்றவர்கள், நிரந்தரமாகத் தம்மால் நடந்து உலாவ முடியாது — என்று நம்பி நெஞ்சம் உடைந்துள்ளார்கள்.

கொழும்பில் உள்ள ஜெய்ப்பூர்கால் பொருத்தும் நிலயத்திற்குப் பயணஞ் செய்ய இவர்களுள் பலர் அஞ்சுகின்றனர். எப்படி இந்த நிலையேற்பட்டது என்பது பற்றி விசாரணை நடத்தப்படுகிறது அங்கே. இதனைவிடக் கொழும்பு சென்று தங்குவதிலும் இவர்களுக்குக் கஷ்டம் உண்டு. அந்த நிலயத்தில் உள்ளவர்கள்- குறிப்பாகத் தொழில் நுட்பவியலாளர்களுடன் தமது நிலையை எடுத்துச் சொல்ல மொழி புரியாமை சிக்கலாகிறது. இந்த நிலையில் உருவானதே யாழ் ஜெய்ப்பூர்க் கால் நிலயம்.

உலகிலே அங்கஹீனர்கள் தொகை ஏறத்தாள 40 கோடி என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இது உலக சனத்தொகையில் 8-10 வீதம் ஆகும்.

ஆனுல் வடகிழக்கு மாகாணங்களில் இது பற்றி எவ்வித முறையான கணிப்பும் கிடைப்பதாயில்லை. வன்செயலில்பாதிப்படைந்தஇளைஞர்கள் பலர் இப்படி ஜெய்ப்பூர் கால் பெற இதுவரை பலவித பயம் காரணமாக, விசாரணை காரணமாக முன் வருகிருர்களில்லை.

'ஒரு ஜெய்ப்பூர் கால் பொருத்த ஆயிரம் ரூபா நன்கொடையாகப் பெறப்படுகிறது. கால் பெறுபவர்வசதிபடைத்தவரானுல் தானே இத் தொகையைச் செலுத்துகிருர். வசதி குறைந்தவர் ஒரு பகுதியாவது தொடுக்கிருர்.

வறுமையில் வாடுபவராயிருப்பின் இலவசமாக இதனைப் பெறுகிருர். பணம் செலுத்தவில்லை என்பதற்காக நாம் யாருக்கும் 'இல்லை' என்று கைவிரிப்பதில்லை.



ஜெய்ப்பூர் காலணிந்த ஊழியர்கள்
(புகைப்படம்: சண் ஜோண்சன்)

இப்படியான வறியவர்களுக்கு ஜெய்ப்பூர்க்கால்களைப் பெற்றுக்கொடுக்க நல்லிதயம் படைத்த செல்வந்தர்களும், சேவை அமைப்புகளும் முன்வருவது அவசியம்.

—இப்படித் திருமதி குணநாயகம் விளக்கம் கூறிக் கோரிக்கை விடுத்தார்.

## மீண்டும் சொந்தக் காலில் நிற்கலாம்

''காஸ்'' சிலின்டர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்படாமல் இருந்த காலத்தில் இங்கு ஜெய்ப்பூர்கால் உற்பத்திக்கு நெருக்கடி தோன்றியது. அப்போது இங்கு பணிபுரியும்தொழில்முகாமையாளர் திரு.எஸ். பிரான்சிஸ் ஒருபுதுமை செய்து, இவற்றைத் தயாரித்ததால் இப்பணி தடைப்படவில்லை. ஜெய்ப்பூர் கால் பொருத்துவது பற்றி திரு. பிரான்சிஸ் கூறிய தகவல்களைப் பாருங்கள்:-

கால் பொருத்துவதை இரண்டாகப் பிரிக்கலாம். முழங்காலுக்கு மேல், கீழ் என்பதே இப் பிரிவுகளாகும். இவர்கள் அலுவலகத்தில் இருந்து அனுமதிப் பத்திரம் பெற்று நிரப்பி அனுப்பவேண்டும்.

பின்னர் அவர்களுக்கு அழைப்புவரும். அதன் பின்னர் கிழமைதோறும் ஐவர் இங்கு அழைக்கப் படுவர். இவர்களுக்குத் தங்கும் வசதிகள். உணவு வசதிகள் இங்கே செய்து கொடுக்கப்படுகின்றன.

இவர்களுடைய கால் அளவு எடுக்கப்படும். பின்னர் ஜெய்ப்பூர்கால் இவர்களுக்குப் பொருந்துமா என்று பரிசோதிக்கப்படும். அவர்களுடைய காலின் துண்டிக்கப்பட்ட பகுதி ஜெய்ப்பூர் கால் பொருந்துவதற்கு ஏற்ப சரிசெய்யப்படவேண்டும்,



தேம்பா குணநாயகம்

இதனைவிட ஜெய்ப்பூர் காலணிந்து நடைபயிலவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு கால் ஊனமடைந்த மூவர், ஜெய்ப்பூர் காலணிந்து இதனைத் தொண்டெனக் கருதிப் பணிசெய்கிருர்கள்.



கால் அளவு எடுக்கப்படுவதை இங்கு காணலாம்
(புகைப்படம்: சண் ஜோண்சன்)

- வே. வரதசுந்தரம் -

பயிற்சி, மண்பொதிகள், கட்டுப்போடுதல், எண்ணெய் பூசுதல், மசாஜ் ஆகியவைமூலம் இது சாத்தியமாகிறது.

ஜெய்ப்பூர்கால் அணிந்தால் அது இயற்கையாகத் தோன்றும். காலினை இலகுவாக அசைக்கவும், புற்றரை கற்றரை எங்கேனும் சிரமமின்றி நடக்கவும் இக்கால்உதவுகிறது.

ஜெய்ப்பூர் காலின் பாதம் ரப்பரினுல் செய்யப்படுகிறது. பின்னர் அலுமினியத்திஞல் செய்யப்பட்ட காலில் இணைக்கப்படுகிறது.

இப்படி திரு. பிரான்சிஸ் விளக்கம் அளித்தார்.

மற்றவர்களால் தூக்கி வரப்பட்டவர்கள், ஊன்றுகோலுடன் வந்தவர்கள், சிரமப்பட்டு வந்தவர்கள், ஐந்து தினங்களின் பின்னர் ஜெய்ப்பூர் காலணிந்து துணிவுடன், அகத்திலும் முகத்திலும் மகிழ்ச்சி பொங்க பணிமனையில் இருந்து நடந்துசெல்லும் காட்சி இதந்தரும்.

இவர்களின் புனர்வாழ்வு, ஏனையவைபற்றி அடுத்தவாரம் பார்க்கலாம்.

(வளரும்)

---

# நன்னீர்க் குளங்களின் பொது இயல்புகள்

## பாடம் பயில்வோம் 2

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

கே. எஸ் குகதாசன்
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

நன்னீர்க் குளங்களின் பொது இயல்புகளாக, அதாவது நன்னீர்க்குளச் சூழற்றொகுதிக்காரணிகளாக, பின் வருபவை அமையும்:

பௌதிகக் காரணிகள்
இரசாயனக் காரணிகள்
உயிர்க்காரணிகள்
மண்ணியற் காரணிகள்

குறிப்பிட்ட சூழலுக்குரிய சகல இனங்களுக்குரிய தொகைகளும் ஒருங்கே சாகியம் எனப்படும். சாகியங்களுடன், அதாவது உயிர்க்காரணிகளுடன், உயிரிலிக் காரணிகளும் ஒருங்கே சூழற்தொகுதி (Ecosystem) எனப்படும். ஒரு சூழற்தொகுதியில் பல தரப்பட்ட வாழிடங்கள் (habitats) இருப்பதுடன் ஒவ்வொரு வாழிடத்திலும் பல நுண்வாழிடங்கள் (Microhabitats) காணப்படும். இவற்றிற்கு ஏற்பவே அங்கிகளின் பரம்பலும் அமையும்.

ஒளி, வெப்பம், நீரோட்டம், கலங்கற்றன்மை போன்றவை பௌதிகக் காரணிகளாகும். $CO_2$ செறிவு, $O_2$ செறிவு, கனிப்பொருட் செறிவு, PH போன்றவை இரசாயனக் காரணிகளாகும். குளப்படுக்கையின் தன்மை - மணற்பாங்கானது, களிப்பாங்கானது, சேற்றுத்தன்மையானது, கற்பாங்கானது—, மண்ணின் தன்மை போன்றவை மண்ணியற் காரணிகளாகும். நீரின் உவர்த்தன்மை, கலங்கற்றன்மை, PH, போன்றவற்றை மண்ணியற் காரணிகள் பாதிக்கும்.

ஆய்வுகளின்போது மேற்படி காரணிகளின் அளவீடுகள் பெறப்படும். அளவீடுகள், காலத்துக்குக்காலம், தொடர்ச்சியாக நிகழ்த்தப்படும். பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் குறிப்பிட்டகுளத்தின் சூழலியல் சம்பந்தமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

குளச்சூழல் பொதுவாக ஏற்றதாகவுள்ளதற்குரிய காரணங்கள்:

1. ஆழம் குறைவாக இருப்பதனுல் போதிய அளவில் ஒளிகிடைக்கும், அதனுல் தள வாழ்க்கைக்குரியதாகவும் தாவரங்கள் காணப்படும்.

2. நில மட்டத்திலும் பள்ளமாகவிருப்பதனுல் போதிய அளவில் கனியுப்புக்கள் இடைக்கும்.

3. நீரோட்டம், அலைகள் இல்லாத காரணத்திஞல் கலங்கற்றன்மை இல்லை, அல்லது குறைவாகவிருக்கும், அதாவது நீர் பொதுவாகத் தெளிவாகவிருக்கும்.

4. PHஇல் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

5 நீர்நிலையாகவிருப்பதன் காரணமாக வெப்பநிலையில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. அதாவது தரைச்சூழலைக் காட்டிலும் நீர்ச்சூழலில் வெப்பநிலை எப்பொழுதும் சீராகவிருக்கும்.

6. உயிரிகளுக்கு நீர் அவசியமானதொன்று. அதுபோதிய அளவில் கிடைக்கும்.

7. நீர்ச்சூழல் பொதுவாக ஏற்றதாக இருப்பினும் ஒரு குறைபாடு உண்டு. வளி குறைவாகவே கிடைக்கும், சிறப்பாக ஒட்சிசனின் கரைதிறன் குறைவாக இருப்பதனுல் ஒட்சிசன் குறைவாகவே கிடைக்கும். அன்றியும் [illegible] இதனுடன் [illegible] தாகவே கூடுதலாக அமையும். ★



நன்னீர்க் குளத்தில் தாவரங்கள், விலங்குகளின் பரம்பலைக்காட்டும் படத்திற்குரிய காவி விளக்கம்.

1. மிதக்கும் தாவரங்கள், உ+ம்: ஆகாயத் தாமரை (Pistia).
2. நிலையூன்றிய, அமிழ்ந்திய தாவரம், உ+ம்: வேலம்பாசி (Valirsteria).
3. தாவரங்களின்மேல் ஒட்டிவாழும் விலங்குகள். உ+ம்: ஐதரா Hydra).
4. நீரின் மேற்பரப்பிற்குரிய விலங்குகள், உ+ம்: நீர்ச்சறுக்கி.
5. நீரின் மேற்பரப்பிற்குரிய விலங்குகள். உ+ம்: நுளம்பின் குடம்பி.
6. அமிழ்ந்திய நிலையில் மிதக்கும் தாவரம். உதாரணம்: ஐதறில்லா (Hydrilla)
7. நிலையூன்றிய, மிதக்கின்ற இலைகளை உடைய தாவரம், உதாரணம்: அல்லி (Nymplicea).
8. அமிழ்ந்திய, மிதக்கின்ற, வளிக்குரிய இலைகளையுடைய; சுயாதீனமான அல்லது நிலையூன்றிய தாவரம். உதாரணம்: மீரியோவில்லம் (Myriopliyllum).
9. நீர்க் கரைக்குரிய தாவரங்கள், உதாரணம்: புற்களும், கோரைகளும் (Grasses and Sedges).
10. அலையுயிரிகள் அல்லது பிளாந்தன், உதாரணம்: தாவர பிளாந்தன், விலங்குப் பிளாந்தன்.
11. சேற்றுக்குரிய தாவரங்கள், உதாரணம்: பங்கசுக்கள், பற்றீரியாக்கள்.
12. சுயாதீனமாக நீந்தும் விலங்குகள்—நனிநீந்தி. உதாரணம்: மீன்.
13. சேற்றுக்குரிய விலங்குகள், உதாரணம்: நன்னீர்ச் சிப்பி.
14. நீர்க்கரைக்குரிய விலங்குகள், உதாரணம்: நன்னீர்ப்பாம்பு.
15. சரதாரண நிலத் தாவரங்கள் அதாவது இடைநிலைத் தாவரங்களும், அவற்றிற்குரிய விலங்குகளும்.
16. தளவுயிரிக்குரிய விலங்குகள், உதாரணம்: தும்பியின் அணங்குப் புழு,
17. குளப்படுக்கைக்குரிய கற்பாறைகள்.
18. நிலையூன்றிய; அமிழ்ந்திய நாடாப் போன்ற, மிதக்கின்ற அகலமான, வளிக்குரிய சாதாரண இலைகளை உடையது. உதாரணம்: சஜிடேறியா Sagittaria.

---

# "மறுமலர்ச்சி" கண்ட பிரச்சினை

## மறுமலர்ச்சிக் கடிதங்கள் 4

- மயிலங்கூடலூர் பி. நடராசன் -

''சென்ற ஆண்டு மகத்தான முதலாண்டு. சோதனையாண்டு. ஐந்தாம் படைக்காரர் தம் சூழ்ச்சி வலிமையை உபயோகித்து அது சாயாமைகண்டு ஒட்டெடுத்த ஆண்டு. எனவே, அது வெற்றியாண்டு.''

என 20. 9. 1944 இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். உலகம் உள்ளவரை, அழியாமல் காலனை வென்று, மறுமலர்ச்சிச் சங்கம் ஒளி வீசவேண்டும் என்ற தமது விருப்பத்தையும் அ. ந. க. அக்கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். ஆனுல், அவரது வெற்றிப் பெருமிதமும் விருப்பமும் யாழ். தமிழ் மறுமலர்ச்சிச் சங்கத்தை அவர் விரும்பியதுபோல சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்திருக்கச் செய்ய முடியவில்லை.



பஞ்சாட்சர சர்மா

கருத்து வேறுபாடு, பதவிப் போட்டி ஆகியவற்றுக்கு மறுமலர்ச்சிச் சங்கமும் விதி விலக்காகிவிடவில்லை. சிலர் சங்கத்தின் ஆட்சிக்குழுவினரோடு முரண்பட்டு, அதன் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றுள்ளனர். சங்கப் பணிகளில் நெருங்கிய தொடர்பின்றிக் கொழும்பில் வாழ்ந்த போதிலும் சங்கத்தின் வளர்ச்சியில் அ. ந. க. மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இதனுல், சங்கத்தின் வளர்ச்சியையும் சமுகமான சூழ்நிலையையும் குழப்ப முயன்றவர்கள் மீது அவர் மிகுந்த சினம் கொண்டிருந்தார். இக் கோபத்தின் படித்தரத்தை மேலே காட்டியுள்ள கடிதப் பகுதியில் 'ஐந்தாம் படைக்காரர்' என்ற தொடர் காட்டுகிறது.

1944இல் 'ஓட்டெடுத்த' அவர்கள் 1946 இல் மீண்டும் சங்க ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். சங்கம் வெளியிடவிருந்த மறுமலர்ச்சி ஏட்டின் ஆட்சியைப் பெறுவதே இப்போது அவர்களின் முயற்சியாக இருந்தது. சங்கத்தில் ஏற்பட்ட இக் குழு ஆக்கத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இது இலக்கியக் கோட்பாடு சார்ந்ததா, தனியாள் நலன் சார்ந்ததா, என்பது ஆராயத்தக்கது.

1946இல் அ. ந. க. கொழும்பில் வாழ்ந்ததால் புதிதாக எழுந்த சிக்கல் பற்றி அவர் பூரணமாக அறிந்திருக்கவில்லை. சங்கத்தின் தலைவர் ச. ப. சர்மா எழுதிய கடிதத்தின் மூலமே அ. ந. க. இதுபற்றி அறிந்து கொண்டார். இச்சிக்கல் பற்றி ஆராய நடைபெறவிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கும்படி அல்லது அவரது சார்பில் வாக்களிக்க ஒருவரை நியமிக்கும்படி அ. ந. க. தலைவரால் வேண்டப்பட்டிருந்தார் எனத் தோன்றுகிறது. வாக்களிப்புப் பற்றி முடிவு செய்யமுன் முழு விவரத்தையும் அறிய அ. ந. க. விரும்பினுர். எனவே, 27. 4. 1946 இல் அவர் அ. செ. முருகானந்தனுக்கு விரிவான ஒரு கடிதத்தை எழுதினுர்.



அ. ந. கந்தசாமி

''அன்புள்ளஅ.செ.மு. ச. ப. ச. ஒரு கடிதம் எழுதியுள்ளார்.மூர்த்தி ப. வி. பொ. அச்சு ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும் பிறக்காத - வயிற்றில் இருக்கும் குழந்தையான மறுமலர்ச்சி மீது அவர்களின் கை நீளுவதாகவும் தெரிகிறது...''

என அக்கடிதம் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து அவர் ரேவதி குப்புசாமி பற்றி எழுது

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி கவிதைக் கதம்பம்

## என்று வரும் விடுதலை?

கொல்லும் விலங்குகளைக்
கொண்டுள்ள கானகத்தில்
நல்லபடி பயில்வதற்கு
நாமடைந்த தொல்லைகளை
உள்ளபடி சொல்வதெனில்
உருவாகும் காவியமே
தெள்ளு தமிழ் வாழத்
தீயினிலே நாம் குளித்தோம்!

புள்ளிமான் போலப்
பகல்முழுதும் ஓடிவந்தோம்...
வெள்ளி நிலவிலுமே...
விழித்திருந்து குறிபார்த்தோம்..
புள்ளி உடை போட்டுப்
புழுதியிலே புரண்டெழுந்து...
துள்ளிவிழ... மூக்குடைந்து...
தொல்லை பலபெற்றோம்!

மூழங்கையை ஊன்றி
மண்மீது தவழ்ந்ததனால்...
கிழங்காகிப் போன
கைப்புண்ணின் வேதனையை...
வளமான தமிழ் மண்ணின்
விடிவுக்காய்ப் பொறுத்திருந்து
களம் கண்டோம் – வெற்றிக்
கரம் பெற்றோம்!

மண்ணின் விடுதலைக்கு
மகத்துவத்தைச் சேர்ப்பதற்கு
கண்ணை இழந்து விட்டோம்...
கால்களினை இழந்து விட்டோம்...
வண்ணக் கரத்தினையும்
விலையாகத் தந்துவிட்டோம்...
இன்னல் பல கண்டோம்...
என்று வரும் விடுதலை?

- மு. வே. யோ. -வாஞ்சிநாதன்

## அண்ணி போட்ட கோலம்

அண்ணியொரு கிண்ணியெடுத்து
அதிலே கொஞ்சம் மாவையிட்டு
தண்ணிவிட்டுக் கரைத்தெடுத்து
தரையிற் சில புள்ளியிட்டு
கண்ணியமாய்ச் சில கோட்டைக்
கருத்துடனே இழுத்தும்விட
எண்ணியெண்ணி யாம் மகிழ
எழிற்கோலம் தானுச்சே!

வண்ண வண்ணப் பூக்களாக
விரைந்து தரையில் வரைந்துவிட்டு
எண்ணம்போல அமைந்ததாலே
எழிலாய் அமர்ந்து சிரிக்கின்றாள்
அண்ணன் மனம் குளிரவைக்கும்
அழகான அண்ணியும் எம்
மண் வீட்டுக் கொட்டகையை
மாளிகையாய் ஆக்கிவிட்டாள்!

உதயவானச் சூரியனும் – நம்
உள்ளம் மகிழ் மலர்களும்
இதயவானில் நின்றுலவும்
இன்னும் இனிய காட்சிகளும்
பதமாய் அண்ணி பிசைந்தெடுத்த
பாத்திரத்து மாநீரில்
விதம் விதமாய்த் தோன்றியிங்கே
விந்தை ஜாலம் காட்டிடுதே!

அண்ணி போட்டகோலம் - அது
அழகான மாக்கோலம்
எண்ணியெண்ணி நாம் மகிழும்
எழிலான தரைக்கோலம்
வண்ணக் கரங்கள் வளையவந்தே
விரைந்துவரையும் விந்தைக்கோலம்
அண்ணி போட்டகோலம் - அது
அழகான மாக்கோலம்!

- செ. சுதாகரன் -

## விடுதலை! விடுதலை!

விடுதலை விடுதலை என்று சொல்லு-ஆன்ம
விடுதலை பிறக்கும் - தேச
விடுதலை சிறக்கும் – தமிழ்
விடுதலை அறியாக் கொள்கைகள் வீழ்ந்திட
(விடுதலை)

விடுதலை விடுதலை என்று கூவு - தெய்வ
விடுதலை விளங்கும் - அடிமை
கெடுதலை விளம்பும் - பாரின்
கொடுமைகள் ஒழிந்தே கொற்றம் பெற்றிட
(விடுதலை)

விடுதலை விடுதலை என்றுவிள்ளு - நாம்
விடுத்தவை வெல்லும் - நாம்
தொடுத்தவை செல்லும் - எமைத்
தடுத்து நிற்பது தெய்வ மேனும்
(விடுதலை)

விடுதலை விடுதலை என்றுபேசு - தமிழ்ப்
பீடுகள் தெரியும் - எம்
பாடுகள் விரியும் - தமிழ்ப்
பற்றும் விடுதலையும் பாரெங்கும் கேட்க
(விடுதலை)

- தொல்புரக்கிழார்

## காக்கைக்கும்----

கார்முகில் வண்ணமென்று
ஊரார் சொல்வார்
கார்மேக வண்ணனும் அவள் போல்
என்று நான் சொல்வேன்
காத்திருந்து அவளை
நான் முடித்தேன் - ஆதலால்
காக்கைக்கும் தன்குஞ்சு
பொன் குஞ்சன்றோ!

வார்த்தைகள் வெளிவரத்
தாமதமாகும்
பார்வையும் சற்றே குறைவுதான்
கால் ஒன்று வாதத்தால்
இயங்காது – என்றாலும்
காக்கைக்கும் தன்குஞ்சு
பொன் குஞ்சன்றே!

—சிலம்பு—

# ஊர் உறங்கும் வேளையிலே...

சஞ்சீவி சிறுகதை

விடியற்காலை!

பொல, பொலவென்று விடிந்து கொண்டிருந்தது, நாளொன்று!!

ஆதவன் மலைகளுக்கு மேலே வரலாமா, வேண்டாமா என்ற நிலையில்; பள்ளத்தாக்குகளுக்குள்ளே மறைந்தும், மறையாமலும் நிற்கின்றான்.

பனிப்படலம் இன்னும் கலையத்தொடங்கவில்லை. பனியைச் சுமந்தவாறு புகார் முகில்கள் ஒருவரையொருவர் பார்க்கா முடியாதவாறு, அசைந்து கொண்டிருந்தன.

ஹற்றன், வனராஜாத் தோட்டத்திற்குரிய அந்த லைன் ''காம்பறுக்களை''யும் அரவணைத்தவாறு இந்தப் புகார் முகில்கள் சென்று கொண்டிருந்தன.

அந்த லைனின்வீடொன்றிலிருந்து மரியாயி துடித்துப் பதைத்துக் கொண்டு, பாயை விட்டெழுந்தாள். ''எட காலைப்பொழுது விடிந்து விட்டதே!'' என்று வாய்க்குள் முணு முணுத்தவாறு தனது கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்தபோது, அந்த கயிற்றில் தொங்கிய தாலி மினு மினுத்தது. அதனை எடுத்து தலது கண்களில் ஒற்றியபடி; ''அம்மா, மரியாத்தா இன்றைய பொழுது நன்றாக முடியணும்'' என்று கூறியபடியே, தான் படுத்திருந்த பாயைச் சுற்றி ஒரு பக்கத்தே வைத்தாள்.

அவள் கணவன் மாரிமுத்து முன்னமேயே ''பாக்டரிக்கு''ப் போய் விட்டான். அவனுக்கு அங்குதான் வேலை. இனி அவன் பொழுது சாயத்தான் லைனுக்கு வருவான்.

மரியாயின் மகன் கணேசு, இரண்டு மூன்று நாளாக வீட்டிலில்லை. எனவே வீடு வெறிச்சோடிக்கிடந்தது.

மரியாயி ''பிரட்டுக்கு'' செல்வதற்கு அவசரப்பட்டாள். ''துரைதான் கவனிக்காவிட்டாலும், கங்காணி இராமசாமி, ''வேட்'' ஆக வந்தால் உயிரைப் பிய்ச்சுப்பிடுவான்'' என்று அவளுக்குத் தெரியும். எனவே தான் அவசரப்பட்டாள் மரியாயி.

★ ★ ★

மரியாயி கண்டிச்சீமையிலே வாழ்வுதேடி வந்த ஆயிரக்கணக்கான; தென்னிந்தியத் தமிழர்களின் வாரிசுகளில் அவளும் ஒருத்தி. அனுதைகளின் மறுபிறப்பான தோட்டக் கூலிகளின் பிரதிநிதி இந்த மரியாயி.

அந்தத்தோட்டத்திலே பிறந்து, அந்தத் தோட்டத்திலே வளர்ந்து, இன்று கொழுந்து பறிக்கும் கூலியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் மரியாயி.

அந்தத் தோட்டத்து மாரியம்மன் தான் அவளது— ஏன் அவள் முன்னோர்களினதும் — குல தெய்வமாகும். அந்தத் தோட்டத்தில் வாழும் எல்லோருக்குமே; மாரியம்மன் தான் கண்கண்ட தெய்வமாகும். இதன் காரணமாக அந்தத் தோட்டத்திலுள்ளோரில் பலருக்கு; மரியாயி, மாரியாத்தா, மாரியம்மன், மாரிமுத்து, மாரி போன்ற பெயர்களே சர்வ சாதாரணம்.

மாரிமுத்துவும் - அவள் கணவன் - அந்தத்தோட்டத்திலேதான் பிறந்தவன். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவன். பாக்டரியில் வேலை செய்து கிடைக்கும் சம்பளத்தை மனைவியிடம் கொடுப்பதோடு சரி. குடும்ப வண்டியைக் கட்டி இழுப்பவள் மனைவி மரியாயிதான். ஒரு அடி பிடியிலும் சேரமாட்டான் மாரிமுத்து. யூனியனுக்குப்பணம் கட்டுவதோடு சரி. அதனால் ஏதும் நன்மையுண்டாவென்பது அவனுக்குத் தெரியாது.

ஏழெட்டுப்பிள்ளைகளைப் பெற்றும் மிஞ்சியது என்னவோ நாலு பிள்ளைகள்தான்... இரண்டு பெண்களும் கலியாணம் முடித்து; நுவரெலியாப் பக்கமுள்ள தோட்டமொன்றுக்கு ''புரியன்'' மாரோடு சென்று விட்டனர். இவர்களை வளர்த்து ஆளாக்கிய பெருமை; மாரிமுத்துவை விட மரியாயிக்குத்தான் சேரும். மூத்தவன் தோட்டப்பாடசாலையில் மூன்றும் வகுப்போடு நின்றுவிட்டு, தோட்டத்திலே ''புல்லு'' வெட்டப் போய்விட, இளையவன் கணேசுமட்டும், எப்படியோ மேலே படிக்க ஹற்றன் ''ஹைலன்ட்ஸ்'' கல்லூரிக்குச் சென்று, பத்தாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சையிலும் தேறிவிட்டான்.

அந்தத் தோட்டத்து மக்களிடையே கணேசு பிரபல்யமானவன். காரணம்? எல்லோருடனும் அவன் சகஜமாகப்பழகுவதேயாகும். மாரிமுத்துவுக்கும் மரியாயிருக்கும் இதையிட்டுப் பெருமையும் கூட.

★ ★ ★

'என்ன இழவோ, இந்தப் பிள்ளை கணேசுவை இரண்டு மூணு நாளாகக் காணவில்லை. எங்கே சென்றிருப்பான்'' என வாய்க்குள் முணு முணுத்தாள் மரியாயி.

கணேசு!

இன்றைய சமுதாயத்தின் சராசரி இளைஞன். எனவே முந்திய தலைமுறைக்கு மாறுபட்டவனும் கூட. மரியாயியும் மாரிமுத்துவும் பழைய தலை முறையினர் என்றால் மிகையாகாது. தாமுண்டு தம் தொழிலுண்டு என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இருப்பினும் கூட அவர்கள் மனதில் ஒரு பிரச்சினை உறுத்திக்கொண்டுதான் இருந்தது.

'தொடர்ந்தும் இந்த நாட்டிலே வாழ்வதா அன்றேல் நாட்டை விட்டு இந்தியாவிற்குச் செல்வதா என்ற பிரச்சினைதான் அவர்களை உறுத்தி வந்தது.

'சந்ததி சந்ததியாக வாழ்ந்த எம்மவருக்கு உரிமையில்லை, ஒட்டும் இல்லை, எல்லாவற்றிற்கு மேலாக பாதுகாப்புமில்லை' என்ற எண்ணம் மாரிமுத்து மரியாயி குடும்பத்தாருக்கு மேலோங்கி நின்றதில் வியப்பில்லை. இந்தியாவிற்கு -தமிழ்நாட்டிற்கு- சென்றுவிட்டால் நிம்மதியாக -ஏன் சந்தோஷமாகக்கூட-வாழலாம் என்ற எண்ணம் மனத்திலே அன்றாடம் வலுவேறிக் கொண்டிருந்தது.

அன்றொருநாள்!

மகன் கணேசுவுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற வாதங்களை அசைபோட்டுப் பார்த்தாள் மரியாயி.

'எங்களுக்கு லைனும் வேண்டாம், தோட்டமும் வேண்டாம். ஒரேயடியாய்க் குழந்தை குட்டிகளோடு இந்தியாவுக்குப் போய்விட்டால் நிம்மதி' என்று மரியாயி சொன்னபோது, கணேசு 'உனக்கு அங்கே யாரைத் தெரியும் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே' என்றான்.

''ஏன், நம்மடை ஆக்கள் திருச்சியிலே கல்லுப்பட்டியிலேதானே இருக்காங்க, அவங்களோடே சேர்ந்து வாழ முடியாதா?' என்று மறு வினாவைப் போட்டாள் மரியாயி.

'ஆமா, உனக்குக் கல்லுப்பட்டியிலே யாரைத் தெரியும்? அப்பாவும், நீயும் இங்கே தானே பிறந்தீங்க' என்றான் கணேசு.

'நாம் பிறக்காட்டி என்ன? நம்ம மூதாதையர் அங்கே இருந்து தானே வந்தாங்களெண்டு, நம்ம ஆத்தா சொல்லியிருக்கு' என்றாள் மரியாயி.

அதற்குக் கணேசு 'உனக்கோ அப்பாவுக்கோ அங்கே ஒரு சொந்தக்காரங்களையும் தெரியாது. எங்கேதான் போய் அடைக்கலம் தேடுவாய்? என்றான்.

மேலும் கணேசு 'அம்மா நம்ம ஆட்களெல்லாம் இப்படி எண்ணி எண்ணித்தான் உரிமையுமில்லாமல் பாதுகாப்புமில்லாமல் அடங்கியொடுங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவங்க மட்டுமல்ல எங்கடை அப்பனும் ஆத்தாவும்கூட இப்படியே மனம் புழுங்கிச் சாவதா? இதற்கெல்லாம் விடிவு காலம் கிடையாதா? எங்கடை உரிமைகளையெல்லாம் நாம் போராடித்தான் பெற வேண்டியிருக்கு. இதுதான் எங்கடை நாடு, நாம் இங்கேதான் உரிமையோடு பாதுகாப்பாக வாழவேணும், இதற்கெல்லாம் நாம்தான் போராட வேண்டும்' என்று பேசித்தள்ளினான்.

இதனைக்கேட்ட மாரிமுத்து கூட விக்கித்து நின்றான். இருந்தும் கூட மாரிமுத்துவுக்கும், மரியாயிக்கும் திருப்தியில்லை. அவர்களது நாட்டமெல்லாம் இந்தியாவிற்குப் பயணமாவதே.

★ ★ ★

'புரவிடன்ற்' பணமும் வந்து கப்பலும் ஓடத் தொடங்கி விட்டால் இந்தியாவிற்குச் சென்றுவிடலாம்' எனக் கனவு கண்டு கொண்டிருந்தனர் மாரிமுத்துவும் மரியாயியும். அந்த நாளை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தனர் இருவரும். ஆனால் கணேசுவின் மனமோ வேறு விதமாக எண்ணிக் கொண்டிருந்தது. 'உரிமை பெற்று உரிமையுடன் வாழ்வதையே அவன் விரும்பினான்.

சில நாட்களுக்குப்பின் வீடுதிரும்பிய கணேசு அன்றும் பெற்றோரிடம் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தான். எல்லாம் இந்தியா செல்லும் விடயமாகத்தான். அன்றும் ஒரு தீர்மானமுமின்றி நித்திரைக்குச் சென்று விட்டனர் அனைவரும்.

மீண்டும் ஒரு காலைப் பொழுது விடிந்தது.

வழமைபோல் மரியாயி எழுந்து தேயிலைச் சாயம் தயாரித்துக் கொண்டிருந்தாள். மாரிமுத்து 'எங்க புள்ளே நம்ம தம்பி கணேசுவைக் காணவில்லை' என்று வினவ மரியாயியும் அவனது படுக்கையைப் பார்த்தாள்.

'இங்கை பாரு, அவனைக் காணவில்லை. அவன் பாயிலே ஒரு கடதாசி கிடக்கு' என்று மரியாயி துடித்துப் பதைத்தாள்.

மாரிமுத்து தனது மூன்றும் வகுப்பு அறிவைக் கொண்டு அந்தக் கடதாசியைப் படித்தான்.

'நான் உங்களோடு இந்தியாவுக்கு வரமுடியாது, எனக்குரிய முடிவைத் தேட நான் வடக்கு நோக்கிச் செல்லுகின்றேன், என்னைத் தேடவேண்டாம்' எனக் கூறியது அக்கடிதம்.

ஊர் உறங்கும் வேளையிலே கணேசு தனக்குரிய முடிவைத் தேடிக் கொண்டான்.

நாட்டைவிட்டுப் போக மாட்டேனென்று கூறியவன் இன்று வீட்டைவிட்டு, ஏன் ஊரை விட்டே சென்றுவிட்டானென்பது அவனது பெற்றோருக்கும் ஊரவர்க்கும் புரியாத புதிராக இருந்தது? ஆம் அவர்களுக்கு இது புரியாததுதான். ஏனெனில் அவர்கள் முந்திய தலைமுறையினர்.

ஆனால்!

கணேசுவோ, இன்றைய தலைமுறையின் தலைமகன்.

(யாவும் கற்பனை)

- வண்ணை. சே. சிவராஜா -

# ஓநாய் பேசிய நியாயம்

சிறுவர் அரங்கம்

ஓர் ஆட்டுக்குட்டிக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது.

கண்களில் தென்பட்ட ஓர் ஓடைக்குச் சென்று ஆவலுடன் நீரைக் குடிக்க முயன்றது.

அந்தச் சமயத்தில் ஒரு ஓநாய் அந்தப் பக்கமாக வந்தது. நன்கு கொழுத்திருந்த ஆட்டுக்குட்டியைக் கண்டதும் அதை அடித்துத் தின்ன வேண்டும் என ஆசைப்பட்டது.

அதனால் அந்த ஆட்டுக்குட்டியை, வலுச்சண்டைக்கு இழுத்தது.

''அடே ஆட்டுக்குட்டி'' என்று கூச்சல் போட்டது. ''நான் தண்ணீர் குடிப்பதற்கு முன் எதற்காகத் தண்ணீரைக் கலக்குகிறாய்?'' என அதிகாரத் தொனியில் வினவிற்று.

நடுநடுங்கிப் போன ஆட்டுக்குட்டி ''ஐயா, தண்ணீர் உங்கள் பக்கமிருந்துதானே என் பக்கம் வருகிறது. நீங்கள் அருந்தும் நீரை நான் எவ்வாறு கலக்க முடியும்'' என்று கூறிற்று.

''அதிருக்கட்டும், சற்று முன் நீ ஏன் என்னைத் திட்டினாய்?'' என ஓநாய் அதட்டியது.

''இப்பொழுது தானே நான் தங்களைப் பார்க்கிறேன். சற்று முன் எவ்வாறு திட்டியிருக்க முடியும்?'' என்று பயந்த குரலில் ஆட்டுக்குட்டி கேட்டது.

''சற்று முன் என்றால் போன ஆண்டு என்று அர்த்தம். போன ஆண்டு நீ ஏன் என்னைத் திட்டினாய்?'' என்று ஓநாய் அமர்த்தலாகக்கேட்டது.


''சென்ற ஆண்டு நான் பிறக்கவே இல்லையே'' என்று ஆட்டுக்குட்டி கூறிற்று.

''நீ பிறக்காவிட்டால் என்ன! உன் பெற்றோர் என்னைத் திட்டியிருப்பார்கள். எப்படியும் நீ குற்றவாளிதான். உன்னைச் சும்மா விடக்கூடாது'' என்று கூறியவாறு ஓநாய் ஆட்டுக்குட்டியின்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்று விட்டது.

வன்முறைப் புத்தி கொண்டவர்கள் எந்த நியாயத்துக்கும் கட்டுப்படமாட்டார்கள். தனிப்பட்ட [illegible] மட்டுமல்ல அரசாங்கத்திற்கும் [illegible] ★

தயாரிப்பு:-
'ஸ்ரீ'

# முயன்று பாருங்கள்



இடமிருந்துவலம்

1 போட்டி
5. ஒரு மாதம். (குழம்பியிருக்கிறது)
6. வீதி
8. சங்கீதத்துக்கு இது தேவை
9. கப்பல் (மாறியுள்ளது)
12. பாரம்பரியம் (மாறியுள்ளது)

மேலிருந்துகீழ்

1. நல்ல நாள் கணிப்பது
2. விளக்கை அணைப்பதை இப்படிக் கூறுவர்
3. பகுதி (மாறியுள்ளது)
4. தொழுவம்
7. மீன் பிடிப்பது (மாறியுள்ளது)
10. [illegible]
11. இது அறுபத்து [illegible]

# குர்த்தா அணிய ஆசையா
# சில ஆலோசனைகள்

சுரிதார் - குர்த்தா அணிவது இன்று பிரபலமாகி வருகிறது. கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் கூட சுரிதார் - குர்த்தா அணியத் தொடங்கிவிட்டார்கள்.

குர்த்தாவுக்கு மேலே ஜாக்கெட் அணிவதும் ஒரு வகை ஃபேஷன்,

ஆனால் எல்லோருமே இப்படி குர்த்தாவுக்கு மேல் ஜாக்கெட் அணியலாமா? எந்த சந்தர்ப்பத்தில் குர்த்தாவுக்கு மேல் ஜாக்கெட் அணிவது பொருத்தமாக இருக்கும் என்பதிலும் சிலவரைமுறைகள் இருக்கின்றன.




பொதுவாக மெல்லிய உடலமைப்பைக் கொண்டவர்கள் குர்த்தாவுக்கு மேல் ஜாக்கெட் அணியலாம். அவர்களது மெல்லிய தோற்றத்தை மறைக்க இது உதவும். ஆரம்பத்தில் குர்த்தாவுக்கு மேல் அணியும் ஜாக்கெட்டுகளுக்கு கச்சாப்பட்டுத் துணியை உபயோகிப்பதும் வழக்கமாக இருந்துவந்தது.

இப்போது பருத்தி, பொலியஸ்டர் துணிகளிலும் ஜாக்கட் தைத்து அணியும்முறை வந்துவிட்டது. உங்கள் சுரிதார் - குர்த்தா எந்தத் துணியினால் தைக்கப்பட்டிருக்கிறதோ, அதே வகைத்துணியை ஜாக்கெட்டிற்கும் உபயோகிப்பது பொருத்தமாக இருக்கும்.

உடல் பருமனானவர்கள் குர்த்தாவுக்குமேல் ஜாக்கெட் அணிவதைத் தவிர்ப்பது நலம்.

### பாதத்தை மறைக்கும் காலணி

சுரிதார் அணியும் போது பாதம் முழுவதையும் மறைக்கும்வகையில் உள்ள காலணியை அமைக்கலாமா கூடாதா?

பலரிடம் வேகமாக எழும் கேள்விஇது, இதை இரண்டு வகையிலிருந்து பார்க்கவேண்டும்.

நீங்கள் அணியும் சுரிதார் நிறைய வேலைப்பாடு உள்ளதாக, தொளதொளவென்று இருக்குமானால் பாதத்தைமூடும் காலணி, சற்று பொருத்தமாக இல்லாத மாதிரித்தான் தோன்றும். தவிர சுரிதார் உங்கள் பாதத்தைத்தொடும் விளிம்பு, படுதாவில் லேஸ், சமிக்கி, மற்றும் ஜரிகை வேலை செய்திருந்தாலும் இம்மாதிரி பாதம்பூராவையும் மறைக்கும் காலணி எடுபடாது.

பாதத்தை மறைக்காத சாதாரண காலணியே எடுப்பாக இருக்கும்.

நீங்கள் அணியும் சுரிதார் மெல்லிய அல்லது அழுத்தமான ஒரே நிறத்தில் அதிக வேலைப்பாடின்றி இருக்குமானால், பாதத்தை மறைக்கும் காலணியை அணிந்தாலும், எடுப்பாக இருக்கும்.

நன்றி சுமங்கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளை நெஞ்சின் கனிவுகள்

எட்ட - அயல் ஊரிருந்து
என்தோட்டம் வெண்காயம் நடவே வந்த
மட்டுமரி யாதைமிகு
மங்கையருள் ஒருத்திஉரு அழகிற் சொக்கி
கட்டழிந்த என்நெஞ்சம்
கனிந்தொருசொல் கதைக்காளோ என்றேங்கிப்
பட்டதுயர் கொஞ்சமல்ல
பாவிகதை பறையாத ஊமை தானோ?

கூலிக்கா வந்திட்டாள்
கொவ்வையிதழ்க் குமரியவள்? என்கை சூட்டும்
தாலிக்கும் மாலைக்குந்
தான்வந்தாள் என்றென்று தாவும் நெஞ்சில்
மேலிட்ட ஆசைக்கு
விருந்தாக 'வெண்காயம் வேண்டும்!' என்றோ,
நாலுக்கு நாம் வீடு
செலவேண்டும்' என்றோஹும் நவிலாள் ஓர் சொல்

சேற்றிற்கால் புதைத்தந்தச்
சிங்காரி குனிந்தபடி வெண்கா யப்பல்
நாற்றுக்கள் நாட்டுங்கால்
நடனமயில் சிரட்டையிலே நேநீரை நான்
ஊற்றிடவே ஏந்துங்கால்
ஒண்மதுரை உயிர்ச்சிலைகள் ஒய்யா ரந்தாள்
கூற்றுப்பெண் கூட்டத்தால்
கோதையினைக் கதைகேட்கப் பயந்தேன் நானும்!

கெட்டாலுஞ் செட்டியெனுங்
கெறுக்குடைய பரம்பரையின் கிளையாம் நானும்
தொட்டிடுதல் முடியாதச்
சுந்தரியை! தோதற்ற காதல் என்று
வெட்டிடினும் மதிகுறுக்கே
வெறிகொண்ட உள்மனமோ விட்டால் தானே?
செட்டுடனே அவள்வேறு
சென்றுளே கதைக்காமல் ஓர்சொல் தானும்?

நாளொன்றுக்(கு) ஒருதோட்டம்
நடுகைக்குச் செல்கின்ற நங்கை இந்த
ஆளொன்றுக் கேன்இந்த
அழகற்ற ஆசையென வெறுக்கா விட்டால்
தோளொன்றில் அம்மயிலைச்
சுமந்தபடி சுடுஞ்சாதித் தீக்கும் எட்டாக்
கோளொன்றில் குடியேறிக்
கூத்தாடிக் கொண்டாடி வாழ்ந்தே தீர்வேன்.

- ச. வே. பஞ்சாட்சரம்

# கந்தன் நாமம் பாடி அமைதி காண்போம்

யுகங்கள் நான்கு. அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலியுகம் நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் (4,32,000) ஆண்டுகளைக் கொண்டது. இதில் இற்றைவரை கழிந்தது ஐயாயிரத்து எண்பத்தொன்பது (5089) ஆண்டுகள் மட்டுமே.

ஒவ்வொரு யுகத்திலும் வேறுவேறு முறையான வழிபாடுகளாலும் தர்ம கைங்கர்யங்களாலும், மானுடருக்குச் செல்வ சம்பத்துக்கள் நிறைந்த வாழ்வும், உயர்ந்தபதவியும், அதிகாரமும், ஈற்றில் முத்தியின்பமும் கிட்டும் என்பது வேத சாஸ்திர நூல்களின் முடிவு.

கிருதாயுகத்தில் ஞானத்தினாலும், திரேதாயுகத்தில் தானத்தினாலும், துவாபரயுகத்தில் யாகத்தாலும், கலியுகத்தில் பக்தியினாலும், இறையருள் துணைநின்று முத்தியின்பத்துக்கு வித்திடுமென்று அவை கூறுகின்றன.

'பக்தி' என்ற வட சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் 'அன்பு'. 'அன்பே தெய்வம்' என்று பேசும் திருமந்திரம். அன்பே தெய்வமெனில், இறைவனில் உண்மை அன்பு செலுத்தும் ஆன்மாவும், தெய்வத்தின் கருணைகடாட்சத்தால், இரண்டறக் கலக்குமென்பது அதன் தத்துவம்.

இடையறாத பக்திப் பெருக்கால் கந்தவேளின் கருணைக்கடலில் மூழ்கித் திளைத்து, முத்தியின்பப் பேறுபெற்ற முதன்மையாளர் அருணகிரிநாதர். அவர் பாடிய மந்திர நூலாகிய 'கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி' என்பவற்றில் முருகப் பெருமானை விளித்து

சமயம்

விண்ணப்பம் செய்யும் போதெல்லாம் 'முருகா, குமரா, குகா, கந்தா, கடம்பா, கார்மயில் வாகனா, காங்கேயா, கார்த்திகேயா' என்றெல்லாம் அன்புடனும் தாழ்மையுடனும் அழைக்கிறார்.

நினைத்த பொழுது நினைத்த இடத்தில் முருகப்பெருமானைக் கண்டுகளிக்கும் பேறுபெற்றவர் அருணகிரிநாதர்.

'பங்கே நிரைத்த
பன்னிருதோளும்
பதும மலர்க் கொங்கே
தரளம் சொரியும்
செங்கோடைக்
குமரனென
எங்கே நினைப்பினும்
அங்கேயென் முன்வந்
தெதிர் நிற்பனே'

என்று பெருமிதத்துடன் அவர் கூறும் கந்தர் அலங்காரப்பாடல் (104) நம்மை வியக்கவும் சிந்திக்கவும் தூண்டுகிறது.

ஆகவே முருகப்பெருமானுடைய நாமங்களை அருணகிரியார் மீண்டும் மீண்டும் கூறி, ஆறுமுகக் கடவுளை, விளிப்பது தனக்காக அல்ல. இந்த நூல்களைப் பாராயணம் செய்யும் அடியார்களும் முருக நாமங்களை மனதில் நிறுத்தி, மெய்யன்புடன் ஓதி உய்வுஅடைய வேண்டும் என்ற சீரிய பரந்த எண்ணத்திலேயே என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மண்ணுலகின் மானுடராகப் பிறந்த அருணகிரியார் மட்டுமன்றி விண்ணுலக வாழ்வு பெற்ற தேவர்களும் முருகநாமத்தைச் சொல்லித் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். ★

- அழகு அருணாசலம் -

# எழுதத் தூண்டும் வேளை மட்டுமே எழுதும் மூத்த எழுத்தாளர் சிற்பி

நேர்முகம்

கல்லிலே கலைவண்ணம் காட்டித் தம் மனக் கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்துபவன் சிற்பாசாரி. இலக்கியத் துறையில் தம் எண்ணங்களை எழுத்துருவாக்கி மக்கள் மனதில் இலகுவில் பதித்துவிடும் திறமைபடைத்த 'சிற்பி' (திரு. சி. சிவசரவணபவன்) யை தமிழிலக்கிய நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவது அவசியமில்லை. தமது 14 வயதில் தொடங்கி 40 ஆண்டுகளாக எழுத்துலக சாதனை புரிந்துவரும் 'சிற்பி' என்ற திரு. சி. சிவசரவணபவன், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரும்கூட. முதுபெரும் எழுத்தாளரான சிற்பி, இலக்கியப்பணி, எழுத்துப்பணி, சஞ்சிகைப் பணி பற்றி எமக்களித்த பேட்டி இதோ:-

கேள்வி: சிறுகதை எழுதுவதில் வல்லவரான நீங்கள் சிறுகதைகளை எழுதும்போது எதனை ஆதாரமாகக் கொண்டு எழுதுகிறீர்கள். இதுவரை எழுதிய சிறுகதைகளுள் தங்களுக்குப் பிடித்தமானவை எவை?

பதில்: சுமார் ஐம்பது சிறுகதைகளை எழுதியுள்ளேன். கதையை முதலில் மனதில் முழுமையாக உருவாக்குகிறேன். அதில் பூரண திருப்தி கண்டபின் தாளில் எழுதுகிறேன். மனதில் இருந்த உருவம் அப்படியே தாளில் பதிந்துவிட்டது என்ற திருப்தி ஏற்பட்ட பின்னரே பிரசுரத்துக்கு அனுப்புகிறேன். எனவே ஒவ்வொரு கதையும் எனக்குப் பிடித்தவையே. இருப்பினும், பிறந்த மண் - ஒரே ஒருத்திக்கு- அப்பன் அருள் தெய்வீகம் - ஒரு திருட்டின் கதை என்பவைக்கு என் நண்பர்கள், அறிமுகமில்லாத பல வாசகர்கள் கொடுத்துள்ள பாராட்டுக்கள் மன நிறைவைத் தருகின்றன. வாசகர்களின் மகிழ்ச்சியும் திருப்தியும் தானே எழுத்தாளனுக்கு மன நிறைவைத் தரும்.

> இலக்கியம் என்றுமே முற்போக்குத் தன்மை உடையது. அதற்கெனத் தனியாக ஓர் அணி தேவையா?.
>
> சிறுகதை எழுத ஆரம்பிக்கும் பொழுது நான் அகிலனை மானசீக குருவாக நினைக்கிறேன்.
>
> சிற்பி

கேள்வி: உங்கள் முதல் படைப்புப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: 1948 அளவில், ஸ்கந்தவரோதயா கல்லூரி மாணவனாக இருந்த வேளையில் 'பழம் பண்பைப் பற்றிப் பகர்வதில் பயனில்லை' என்ற என் கட்டுரையே முதன் முதல் சுதந்திரன் பத்திரிகையில் வெளியாகியதும் 'மேடைதோறும் பழம் பெருமை பேசுவதை விட்டு, உருப்படியான செயலில் இறங்கினால் தான் தமிழனுக்கு வாழ்வுண்டு' என அன்று வலியுறுத்திய என் கருத்து இன்றும் பொருத்தமாயிருப்பதை உணர்கிறேன்.

கேள்வி: இலக்கியத் துறையில் வானொலித் தொடர்பும் உண்டா?

பதில்: ஏன் இல்லை. எனது பல நாடகங்கள் ஒலிபரப்பாகியுள்ளன. இலக்கிய கருத்தரங்குகளில் பங்கு பற்றித் தலைமை வகித்து நடத்தியுள்ளேன். எனது சிறுகதைகள், நாடகங்கள் மெல்லிசைகள் பல வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன.

### தூண்டல்கள்

கேள்வி: சிறுகதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது? யாரைப் பின்பற்றி எழுதுகிறீர்கள்?

- செவ்வி. வி. பி. சர்மா -

பதில்: எனது தந்தையார் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். என் தாய் மாமன் திரு. க. வைத்தீஸ்வரக் குருக்கள் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழக செயலாளராயிருந்தவர். இவ்விருவருடைய கட்டுரைக் கொப்பிகள் எம் வீட்டிலிருந்தன. அவற்றை வாசித்தேன். கம்பராமாயண வசனம் முழுவதையும் 12ஆவது வயதில் படித்து முடித்தேன். இலக்கிய ஆர்வம் ஏற்பட்ட இவையே காரணமாகின.

சிறுவயதிலிருந்து இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் சிறுகதைகளைப் படிப்பேன். கலைமகளில் திரு. அகிலன் எழுதும் சிறுகதைகளும், 'பெண்' என்ற அவருடைய பரிசு நாவலும் என்னைக் கவர்ந்தன. நானும் எழுத வேண்டும் என்ற உந்தலை அவை ஏற்படுத்தின. எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்போதெல்லாம் என் மானசிகக்குருவாக திரு. அகிலனை மனதிலிருத்தி எழுதுகிறேன்.

கேள்வி: தொடர்ந்து எழுத்துத் துறையில் ஈடுபட்டு வந்த நீங்கள் அண்மைக்காலமாக சிறிது ஒதுங்கியிருந்து ஓர் இடைவெளிய ஏன் ஏற்படுத்தியுள்ளீர்கள்?

பதில்: எந்தவொரு காலத்திலும் யான் எழுதி எழுதிக் குவித்துக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சாவு வீட்டில் தொண்டு

பட்டாளம் பாட்டாவின் பொதுப்பணிக்குப் பெரிய அறைகூவலாக அமைந்தது முருகபுரத்துக் கோளாறு கோவிந்தரின் இறப்பு. பெயருக்கு ஏற்பவாழ்ந்து மறைந்தவர் கோளாறு கோவிந்தர். கிராமத்தையே ஒரு கலக்குக் கலக்கிய கோவிந்தர் இறந்த இழவு அறிவிப்பைக் கேட்டார் பட்டாளம் பாட்டா.

''அறுவான்! அறுந்து போனான்,'' என்றார் பாட்டா. உடனே தன்னைத்தானே திருத்திக் கொண்டார்.

''சே! சே! இது என்ன பேச்சு! அடுத்த பிறப்பிலென்றாலும் கோளாறு கோவிந்தருக்கு நல்வழி காட்டுவாய் முருகா!



தமிழருவி. த. சண்முகசுந்தரம்

குருவே சரணம்'' என்றார். உடனே தன்தொண்டர் பட்டாளத்தை அழைத்தார்; பேசினார்.

''பிள்ளைகளே; கோளாறு கோவிந்தரின் ஆன்மா நல்வழி அடையவேண்டும். அவருக்குத்தான் எல்லாக் கிரியைகளையும் நல்லபடி செய்யவேண்டும். இது எமது கடமை. இதிலிருந்து தவறினால் எம்மை ஆண்டவன் தண்டிப்பான். கோவிந்தர் செய்த பாவங்கள் அளவில் அடங்கா. ஆண்டவன் அவர் மீது அன்பு காட்டவேண்டும்.'' முதலில் பாட்டாவின் சொல்லைமீற இளைஞர் சிலர் முயற்சிசெய்தனர். ஆனால் பாட்டாவின் அன்பு என்னும் காந்தம் எல்லோரையும் கவர்ந்து விட்டது.

எங்கு சாவீடு நடந்தாலும் பாட்டா முதலில் போய்விடுவார். போகும்போது தன்னுடைய பணத்தை எடுத்துச்செல்வார். நெப்போலியன் திட்டமிட்டு யுத்தம் நடத்துவது போல அவருடைய செயல் இருக்கும்.

செத்த வீட்டை ''அ'' பிரிவு ''ஆ'', ''இ'' எனப்பிரித்து வைத்திருக்கிறார். 'அ' பிரிவில் அடக்கமான செலவுத் திட்டம் இருக்கும். 'ஆ' பிரிவில் ஆடம்பரமான செலவுத்திட்டம் இருக்கும். ''இ'' பிரிவில் பொருளில்லாத குடும்பத்தின் செலவுத் திட்டம் இருக்கும். போகும்போது பேனை, கடதாசி எல்லாம் இருக்கும். காசுமடியில் இருக்கும். முதற்கடமையாகப் பாட்டா துக்கம் விசாரிப்பார். தானும் அழுவார். பின்னர் வழமைபோலத் தன் பட்டாளக் குரலில் கட்டளை இடுவார்,

''முதலாவது வேலை பிள்ளையள் உந்தக் கடையில் வெற்றிலை, பாக்கு, சுருட்டு வாங்கிவாருங்கள். கொஞ்சம்போதும். பின்னர் சந்தையில் மலிவாக வாங்கலாம். ஆட்கள் வரப்போகினம்''...

'ம்...ம்... இழவு சொல்ல நாலுபக்கமும் நாலுபிரிவாகப் போங்கள். யார் யாருக்குச் சொல்லவேண்டும் என்பதை வீட்டாரிடம் கேட்கவும். ம்...ம்... செகிடப்பண்ணுங்கள். பிரேதம்எடுக்கின்றநேரம் காலம் வீட்டு உடையவரிடம் கேட்கவும். ஒருத்தரையும் தவற விட வேண்டாம்......''

''தம்பி மணியம், நீ இப்படி வா. நீதான் படித்த பிள்ளை. வீட்டாரைக் கேட்டுத் தந்தி எழுது. செய்தித்தாள் அறிவித்தல் தேவை என்றால் கேட்டுக் கவனமாக எழுதவும்......''

''தம்பி... குஞ்சன் நீவா. கிரியைக் குருக்களுக்குப் போய் அறிவி, நேரத்தை வரையறைவாகச் சொல்லு...''

''அம்மான் கந்தையாவைச் சந்தைக்கு அனுப்பவும், சவப்பெட்டி முதல் எல்லாம் வேண்டும். இந்தா காசு...''

''எஞ்சிய பெரிசுகள் எல்லோரும் வாருங்கள். பந்தலைப் போடுவோம்... ஒண்டு மறந்து போனேன். பாய் போடுவதோ? கதிரை போடுவதோ? வீட்டாரைக்கேளுங்கள். கதிரை என்றால் அப்படியே வாடகைக்காரருக்குச் சொல்லவும்...''

''ம்......ம்...... ஒன்று மறந்து விட்டேன். தம்பி சுப்பு......எல்லாக் கணக்கையும் பதிந்து வை, இந்தா பேனை, கொப்பி...''

இப்படி ஆடி ஓடி எல்லோருக்கும் அன்புக் கட்டளை போட்டு விட்டுப் பட்டாளம் பாட்டா ஒரு மூலையிலே போய் இருந்து விடுவார். அலுவல் எல்லாம் அப்படியே மிகவும் [illegible] நடந்து கொண்டே இருக்கும். அப்படியானால் பாட்டாவிற்கு வேலை இல்லை என்பது கருத்தில்லை.

கிராமத்துச் சா வீட்டிலே தகராறுகள் எழுவது வழக்கம். எந்தத் தகராறு என்றாலும் அன்பாகப் புத்தி புகட்டுவார்; தொடர்புடைய எல்லோருடனும் பேசி எல்லாவற்றையும் நன்கு நடத்துவார். பாட்டா சவம் எடுத்த பின்னர் சாம்பல் அள்ளுதல், எட்டுச்செலவு, காய்ச்சிப் படைத்தல், முப்பத்தோராம் நாள் கிரியை, அந்தியேட்டி என்பன எல்லாம் பாட்டாவின் மேற்பார்வையில் நடக்கும்.

### நடைச் சித்திரம் 3

''ஆண்டவன் எனக்குச் சும்மா இருக்க ஆயிரம் ரூபா ஓய்வூதியம் தருகின்றார். ஊருக்கு உழைப்பது என்பது என் கடமை......'' என்பார் பாட்டா.

''பாட்டா இறந்தால் உங்களுடைய செத்த வீட்டை நன்கு நடத்துவோம்,'' என்றான் இளைஞன் ஒருவன்.

''எல்லாம் அவன் செயல். சிவன் செயல். எல்லாம் நன்கு நடைபெறும். அவன் இல்லாமல் ஏதும் நடக்காது,'' என்றார் பாட்டா.

(யாவும் கற்பனை)

# புதிய ஒப்பந்தம்; சோதிட நோக்கு

சோதிட சஞ்சீவி

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் புதன்கிழமை 29.7.87 பிற்பகல் மணி 3.37 நிமிடமளவில் இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பெற்றது இந்த ஒப்பந்தம்பற்றி நவநாயகர்களான, நவக்கிரக சக்திக்கு உட்பட்டே செயற்படவேண்டும்.

இச்சாதகத்தில் நாட்டின் நிலைமையையும், நவகோள்களின் செயலையும் ஆய்வுசெய்துபார்த்தால்—

உதய லக்கினம்தனுசு, லக்கினத்திற்கும், 4க்கும் உரியவர் குரு. இவர் செவ்வாயின் ஆளுகைக்குட்பட்ட மேட வீட்டில் 5இல் இருந்துகொண்டு சந்திர லக்கினத்தையும், உதய லக்கினத்தையும் முறையே 5,9 பார்வையால் பார்ப்பதால் லக்கினம் பலம் அடைகிறது. (குரு கேந்திராதிபத்திய தோஷமுடையவர்)

1ஆம் வீடு நாட்டுமக்கள்.
6ஆம் வீடு, சத்துரு ராணுவம், போராளிகள்.
7ஆம் வீடு, வெளிநாட்டுப் பிரச்சினை,
8ஆம் வீடு, மரணம்.
9ஆம் வீடு, ஜனாதிபதி.
10ஆம் வீடு, அரசாங்கம்.
11ஆம் வீடு, நாடாளுமன்றம்
12ஆம் வீடு, ஒற்றர், சிறைச்சாலை.

லக்கினத்திற்கு புதன் (போராளிகளைக் குறிக்கும் கிரகம்) சம சப்தமத்தில் இருப்பதும், நெப்டியூனின் நேர்ப் பார்வையில் 180பாகை புதன் பாதிப்படைகிறது. புதன் 10ஆம் இட (தொழில் ஸ்தானம்) த்திற்குரியவராதலால் [illegible] போராட்டத்தைக் [illegible]ங்கள். 10இல் ஞானியான கேது இருப்பதால் ஆயுதப் போராட்டமாக இருக்க முடியாது.

6க்கும்(சத்துரு)11க்கும் (நாடாளுமன்றம்)உரியவரான சுக்கிரன் 8இல் அட்டமத்தில் சூரியனுடன் கிரகயுத்தம். (Interplanetary-War)

9ஆம் இடம் சூரியனுக்குரிய வீடு. சூரியன் (ஜனாதிபதி) இவர் 8இல் (மரணம்) சுக்கிரன் செவ்வாயுடன் சேர்க்கை. இழப்பு, மாற்றம் முதலியவற்றைக் காட்டும். 8ஆம் வீட்டிற்குரியவர் சந்திரன். 9இல் இருப்பது பரிவர்த்தனம். பரிவர்த்தனத்தில் 8ஆம் இடம் சேர்ந்தால் அது ஒருஅவயோகம், தைநிய யோகம் மரணமும், பூர்புண்ணியமும் இடம் மாறியிருப்பதால் 9க்குரியவர் ஒதுக்கப்படுகிறார்.

11க்குரிய சுக்கிரன் (நாடாளுமன்றம்) 8இல் இருப்பதால் மதிகெட்ட அரசாங்கமாகவே இருக்கும்.

12இல் சனி 2, 3க்கு அதிபதி. நிதி வறட்சியடையும், உளவாளிகள் நடுருவல் அதிகமாகும்.

இலங்கையின் லக்கினம் கும்பம். இலங்கையில் சிங்களவரும், தமிழரும் சகோதரராகவே இருந்து வந்தவர்கள். கும்பத்திற்கு 3ஆம் இடம் செய்வாய் வீடு. (சகோதரத்தானம்) இப்போது செவ்வாய் 6 இல் நீசமாகயிருப்பதால் (சத்துருத்தானம்) இனிமேல் சிங்களவர் தமிழர் அன்னியோன்னியமாக வாழமுடியாதென்பதைக் காட்டுகிறது. 3க்குடையவன் 6 இல் இருப்பின் சகோதரன் சத்துருவாவான். அவனும் சகோதரனுக்கு அவ்விதமே. கும்ப லக்கினத்திற்கு கேது 8 இல் இருப்பதால் இலங்கையின் சுயகெளரவம் பாதிப்புக்குள்ளாகும், மேலும் பல சிக்கல்களை உண்டாக்கும்.

தமிழரின் லக்கினம் மேடம். அதிபதி செவ்வாய். இவர் மேடத்திற்கு 4இல் கடகத்தில் சந்திரன் வீட்டில் பூமிகாரகனான செவ்வாய் இருப்பது, தமிழரின் தமிழ்ப் பிரதேசங்கள் சுயமாகக்கிடைக்கும்.

இலங்கையின் குடியரசு பிரகடனம் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி பிற்பகல் மணி 12.43 நிமிஷம். அச்சாதகப்படி இப்போது செவ்வாய் மகா தெசையில் குரு புத்தி 1-10-87 இல் முடிவடைகிறது. 10-5-92 இல் செவ்வாய் திசை முடிவு. இதன் பிரகாரம் தமிழனுக்குத் தமிழகம் கிடைக்கும்.

தமிழரின் லக்கினமாகிய மேடத்திற்கு அதிபதியான லக்கினாதிபதியின் தெசை செவ்வாய் தனது தெசை காலத்திற்கு தமிழினத்துக்குப் பெரும் உதவி செய்யுமென்பதே நவநாயகர் தீர்ப்பு.

- வை. சண்முகசுந்தரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை நகர் நூல்

வடஇலக்கு மாகாணங்கள் தமிழர் தம் தாயகம். இது அங்கீகரிக்கப்பட்ட நிலைப்பாடு. இச்சூழ்நிலையில், எமது பாரம்பரியம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள், நூல்கள் காலத்தின் தேவை.

இந்தவரிசையில் குறிப்பிடத்தக்க நூல் செங்கை ஆழியானின் நல்லை நகர் நூல்.

இதுயாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல்.

கி.பி. 948ஆம் ஆண்டு புவனேகபாகு என்ற சோழ அரசப் பிரதிநிதியால் முதன்முதல் குருக்கள் வளவு என்ற இன்றுள்ள இடத்தில் கந்த சுவாமி கோயில் கட்டப்பட்டது. கி.பி. 948ஆம் ஆண்டிலிருந்து சிறப்புப் பெற்றிருந்த இந்த ஆலயம், கி.பி. 1450 ஆம் ஆண்டு, யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய செண்பகப் பெருமாள் (சப்புமல்குமரயா) என்ற சிங்கள இளவரசனின் படையெடுப்பால் அழிவுற்றது. பின்னர் அவனே ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற பெயருடன் யாழ்ப்பாண அரசின் மன்னனாக முடிசூடிக்கொண்டதும், தான் அழித்த கந்தவேள் கோட்டத்தைக் கழுவாய் தேடுவான் வேண்டி, முத்திரைச் சந்தியில் 1450ஆம் ஆண்டிற்கும் 1467 ஆம் ஆண்டிற்குமிடைப்பட்ட காலவேளையில் எடுப்பித்தான். இத்திருத்தலம் கி.பி. 1621 ஆம் ஆண்டு பிலிப்தே ஒலிவேரு என்ற போர்த்துக்கேயத் தளபதியால் அத்திவாரத்தோடு கிளறி அழிக்கப்பட்டது: அவ்விடத்தில் பின்னர் ஒல்லாந்தர் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை அமைத்துக் கொண்டனர். கி.பி. 1734 ஆம் ஆண்டளவில் கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணர், முத்திரைச் சந்தியருகில் கந்த மடாலயம்ஒன்றைப்புகழ் பெற்ற கந்தசுவாமி கோயில் நினைவாக நிறுவினார். அவ்வேளை குருக்கள் வளவில் சர்வமதத் துறவியான இக்கந்தர் என்ற யோகிக்கு முஸ்லிம்களால் அமைத்து வழிபட்ட சமாதி ஒன்று இருந்தது. அருகில் மசூதி ஒன்றும் இருந்தது. கி.பி. 1749 ஆம் ஆண்டில் கிருஷ்ணையர் சுப்பையரும் தொன் யுவான் மாப்பாணரும் சேர்ந்து அரச அனுமதியுடன் குருக்கள்வளவில், முதலாவது ஆலயம் இருந்த இன்றைய இடத்தில், இன்றைய கோயிலை முஸ்லிம்களை அகற்றிய பின்னர் அமைத்தனர்.

—இவை தாம் இந்த நூல் முன் வைத்துள்ள கருதுகோள்கள் ஆகும். ★

> நூல்: நல்லை நகர் நூல்
> ஆசிரியர்: கந்தையா குணராசா
> —செங்கை ஆழியான்
> வெளியீடு: பூபாலசிங்கம் புத்தகசாலை.
> விலை: ரூ. 15.00
> அறிமுகம்: வி.வி.எஸ்.




# நடராஜன் திருநடனத்துக்கு இலக்கணம் கூறிய "கலாயோகி"

இலங்கை ஈன்ற தவப்புதல்வர்களில் ஒருவரான கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் 110 ஆவது பிறந்த தினம் இன்று.

சேர் பொ. ன். இராமநாதனின் தாய் மாமனாரான சோ. முத்துக் குமாரசுவாமியின் மகன் இவர்.

கலையிலும் சமயத்திலும் ஆர்வமும், ஆராய்ச்சியும் மேற்கொண்ட இவர் தனதுமுதற் பட்டமாக, தாவரவியலிலும், பூகற்பவியியலிலும் தான் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றார் என்பது, பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று அருங்கலைகள் பற்றியும் தொல்பொருள்கள் பற்றியும்அறிந்துகொண்டார். இதன் காரணமாக இவரது நாட்டம் பண்டைய கலைகள் மேலும், பண்டைய பொருட்கள் மேலும் அதிகரித்தது. இதன் பொருட்டு இலங்கை இந்திய கலைகள் பற்றி மேலும் ஆழமாக ஆராய்ந்தார்.

இவர் பூகற்பவியல் இலாகாவில் கடமையாற்றியபோது "தோறியனைற்" என்னும் கதிர்ப்புச் சக்தியுள்ள கனிப்பொருளைக் கண்டு பிடித்து, அதன் மேல் செய்த ஆய்வின் காரணமாக; 1906ம் ஆண்டில் கலாநிதிப் பட்டத்தை இலண்டன் சர்வகலாசாலையில் பெற்றார்.

இவர் 1907 ல் இலங்கையைவிட்டு மீண்டும் இங்கிலாந்துசென்று குடியேறினார் இவ்வேளையில் இவரது இந்தியத் தொடர்பு அதிகரித்தது.

இந்தியாவிற்கு அடிக்கடி சென்று அங்கு தங்கி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இதன் காரணமாக இவருக்கு மகாகவி தாகூரின் நட்பும் கிட்டியது. இதனால், இந்தியக்கலைகள் கவிதைகள், கலாசாரம் என்பவற்றில் அவருக்குப் பரிச்சயமும்; ஆழ்ந்த அறிவும் கிட்டியதெனலாம்.

ஆனால்; இவருக்கும், மகாத்மா காந்திஜிக்குமிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவின. வடஇந்தியாவில், காஜுராகோகோனாரக் போன்ற இடங்களிலுள்ள இந்துக்கோவில்களில் காணப்பட்ட விரசமான நிர்வாணகோலங்களிலுள்ள சிலைகள் அகற்றப்பட வேண்டுமென மகாத்மாகாந்தி விரும்பிய போது, கலாயோகி அவைகளில்தான் இந்தியாவின் ஆன்மாவும் கலைகளும் அடங்கியுள்ளனவென்று வாதாடினார்.

இந்தியாவிலிருந்த போது காசி இந்துச் சர்வகலாசாலையிலுள்ள "இந்தியக்கலை கலாசாரம்" பீடத்திலுள்ள துறைத்தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த போது ஆனந்தக் குமாரசுவாமியை ஒரு உண்மையான இந்துவாக ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கூறி; நிராகரித்து விட்டனர்.

இருப்பினும் இந்தியாவின் இழப்பானது, இங்கிலாந்தின் லாபமாக முடிந்தது. பொஸ்டன் நூதனசாலையின் பொறுப்பாளர் பதவி இவரை நாடி வந்தது. இதன் பின்பு இவரது ஆராய்ச்சிகள் யாவும் உலகத்தின் கவனத்தை ஈர்த்தன. இதனால், இவரது புகழும் உலகளாவிய ரீதியில் பரவியது.

இந்திய இலங்கைக் கலைகளை உலகளாவிய ரீதியில் எடுத்துக்கூறிய ஆனந்தக்குமார சுவாமி அவர்கள் தனது 70ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.


அன்னாரது இறுதி ஆசையின் பிரகாரம், அவரது அஸ்தியானது, இலங்கை இந்தியநாட்டு நதிகளில் கரைக்கப்பட்

(7ஆம் பக்கம் பார்க்க)

- எஸ். எஸ். -

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 75



அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ..................
..................
விலாசம்:- ..................
..................
வயது:- ..................
ஒப்பம்:- ..................

### இடமிருந்து வலம்

(வலப்பக்கத்து மேல் மூலைச் சதுரத்தை இல. 4 ஆகக் கொள்க.)

1. சாத்தியப்படாதது 5. மேடையை மறைப்பது 6. மண்ணுக்கு முந்தியது 7. சோறுடன் சேர்த்து உண்ணப்படுவது 8. வரவேண்டியது 9. மனிதனைப் பிணித்திருக்கும் பிணிகள் இரண்டு. ஒன்று நோய், மற்றையது இது 10. இரு 11. தானே தனக்குத் தேவையான உணவைத் தொகுக்கக் கூடிய ஜீவராசி 13. நோய் 14. ஒளிர்விடு 16. ஒருவகைத் தானியம். (மாறிக்கிடக்கின்றது) 17. கொடை.

### மேலிருந்து கீழ்

1. தேரில் ஏறிப் படையைப் போருக்கு நடத்திச் செல்பவன் 2. ஒருவகைப் பாம்பு 3. மனநிறைவு 4. எமது பிரதேசத்தில் கடந்த காலங்களில் பலரது உயிரைக் குடித்த ஒருவகைக் குண்டு. (ஆங்கிலப் பெயரே தமிழிலும் பாவிக்கப்படுகிறது) 6. மகாகவி 7. அம்பிகாபதியின் காதலி 10. காளி 11. பங்காளி 12. தொடர்ந்து நீர் கிடைக்கும் இடத்தில் சூரிய ஒளி பட்டதும் படர்ந்துவிடும் 13. பாவம் 15. பார்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 73 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பகவத்கீதை 5. வீ 6. துண்டு 7. தோடு 8. சொல்லல் 9. குமிதல் 11. விதி 13. குதி 14. வசதி 17. கன்னியா 18. பெருமை 19, கச 21. திண்ணை 22. சாம்பார்.

**மேலிருந்து கீழ்**

1. பதுங்கு குழி, 2. கண், 3. வடு 4. கீறல், 5. வீடு, 7. தோல்வி, 8. சொல்வன்மை, 10. மிதி, 15. சனி, 16. தியாகம், 17. கருணை 18. பெண், 20. சபா.

### சொற்சிலம்பம் போட்டி இல. 73 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு ரூபா 50/- :-
திரு. கே. கே. அரஸ்
தாமர் லேன், புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

இரண்டாம் பரிசு ரூபா 25/- :-
செல்வி ஆரணி லோகநாதன்
64, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு ரூபா 15/- :-
செல்வி சிவரஞ்ஜனி சீவரத்தினம்
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 75, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ அடுத்து வரும் வெள்ளிக்கிழமை அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

# உலர் வலயத்தில் உருளைக் கிழங்குச் செய்கை




உலகில் உள்ள இன்றைய மனிதனின் உணவு வலககளில் மிகப் பிரதான பங்கு வகிக்கின்ற தரமான கிழங்குவகைப் பயிர் உருளைக்கிழங்கு. இது தாவரவியலில் மிக முக்கிய குடும்பமான சொலனேசிய குடும்பத்துள் அடங்கும் தாவரவியற் பெயர் சொலனம் ரியூபரோசம். இதன் தாயகம் தென்அமெரிக்கா எனினும் இன்று பின்வரும் நாடுகளில் மிகக் கூடுதலாக செய்கை பண்ணப்படுகிறது: ஜேர்மனி, பிரான்ஸ், போலந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் ஆகும்.

எமது தாய் நாடான இலங்கையில் இது 1951 - 52 ஆம் ஆண்டுகளில் முதன்முதலில் பயிரிடப்பட்டது. ஆனால் அன்றைய பராமரிப்புக் குறைபாடுகளினால் நோய் ஏற்பட்டு விளைவில் குறைவு ஏற்பட்டது. ஆனால் 1958 ஆம் ஆண்டு நல்ல பராமரிப்புடன் செய்கை பண்ணிய போதுசிறந்தவிளைவினைக் கொடுத்து இருப்பினும் இவ்விளைவு நமது நாட்டுக்குப் போதாமையால் பல வருடங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதற்கென பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. பின்னர் 1967 இல் இதன் இறக்குமதி தடை செய்யப்பட்டது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் எம் சுயதேவையைப் பூர்த்தி செய்யின் 15,000 ஏக்கருக்கும் கூடுதலாகப் பயிரிடப்படுதல் வேண்டும்.

இந்த வகையில் உலர் வலயத்தில் உள்ள யாழ் மாவட்ட விவசாயிகளினது பங்கும் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் முக்கியமாக மூன்று மாவட்டங்களில் மிகக் கூடுதலாகச் செய்கை பண்ணப்படுகிறது. நுவரேலியா மாவட்டம், பதுளை மாவட்டம், யாழ் மாவட்டம்.

முன்னர் உருளைக் கிழங்குப் பயிரானது ஈரவலயமான மலைநாட்டில் பயிர் செய்யப்பட்டது. உலர்வலயத்தில் இதனைப் பயிரிட முடியாது (Dry Zone) என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் தற்சமயம் இந்த அவநம்பிக்கை நீங்கி உலர்வலயத்திலும் பயிரிட்டு சிறந்த விளைவினைப் பெறமுடியும் என விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் சிபார்சு செய்திருக்கின்றன. இதற்கமைய இப்போது யாழ் மாவட்டத்தில் இது பயிரிடப்பட்டு நல்ல விளைவும் பெறப்படுகிறது. இருப்பினும் இப்பயிர்ச்செய்கையானது இம்மாவட்டத்தில் ஏனைய இரு மாவட்டங்களைப்போல் அல்லாது ஒரு போகத்தில் மாத்திரம் செய்ய முடியும். காரணம் இங்குள்ள காலநிலை வேறுபாடு ஆகும். இப் பயிரைப் பொறுத்தவரையில் விளைவினைப் பாதிக்கும் முக்கிய காரணி உஷ்ணம் ஆகும். மண்ணின் உஷ்ணம் 68பாகை Fலும் கூடுதலாயின் கிழங்கு உற்பத்தி குறையும். 84 பாகை F இல் உற்பத்தி முற்றாகத் தடைப்படும். 4000' க்கு உயர்வான பிரதேசங்களில் இதன் உற்பத்திக்கு ஏதுவான உஷ்ணம் காணப்படுகிறது. (உம் பதுளை, நுவரேலியா) எனவே இம் மாவட்டங்களில் இரு போகங்கள், முதல் பங்குனி மாதத்திலும் பின்னர் புரட்டாதி மாதத்திலும் செய்கை பண்ணப்படுகிறது. அத்துடன் இலேசான அமிலத் தன்மை பொருந்திய நல்ல சேதனப் பசளை நிறைந்த மண்ணிலும் இருவாட்டி மணல் இருவாட்டி வண்டல், இருவாட்டி போன்ற மண்ணிலும் கூடிய விளைவினைத் தருவதால் மேற்குறித்த இருமாவட்டங்களிலும் அதிகளவு பயிர் செய்யப்பட்டு கூடுதலான விளைவு பெறப்படுகிறது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1000'க்குக் குறைவான பிரதேசமாகவும் வருடாந்தம் 50'' — 75'' மழைவீழ்ச்சியை வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் ஐப்பசி தொடக்கம் தை மாதம் வரை பெறுவதாகவும் காணப்படுகிறது. இக்காலப் பகுதியையே காலபோகம் அல்லது பெரும்போகம் (Maha Season) என அழைக்கப்படுகிறது. இதைவிட சிறுபோகமான (Yala Season) சித்திரை தொடக்கம் ஆனி வரையிலான காலப்பகுதியிலும் சிறிதளவு மழைவீழ்ச்சியைப் பெறுகிறது. உருளைக் கிழங்குப் பயிரைப் பொறுத்தவரையில் அதன் முகிழ்விருத்திக்கு குளிர்ந்த இராக்காலமும் நடுத்தரமான பகற்காலமும் மிக அவசியமாக இருப்பதால் மேற்குறித்த காலபோக காலங்களிலேயே இதனைப் பயிரிடல் வேண்டும்.

பயிரிடுவதற்கு சிறந்த மாதம் கார்த்திகை மாதம் ஆகும். இம் மாதத்தில் பயிரிட்டு மாசி மாதக் கடைசிப் பகுதியில் அறுவடையை மேற்கொள்ளலாம். சிறந்த விளைவினைப் பெறுவதற்கு சில சிபார்சு செய்யப்பட்ட சிறந்த இனங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். யாழ் மாவட்டத்திற்கு உகந்ததும் இம் மாவட்ட விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுவதுமான இனங்கள் ஆர்க்கா, டிசைறி போன்றனவாகும். இங்கு முக்கியமாக திருநெல்வேலி, இணுவில், உரும்பிராய், கோண்டாவில் போன்ற பகுதிகளில் அதிகளவு பயிரிடப்படுகிறது. ★

- மு. சதானந்தன் -
(விவசாய அபிவிருத்தி அலுவலர்)

# எழுதத் தூண்டும் வேளை - - -

(5ஆம் பக்க தொடர்ச்சி)
கொண்டிருந்தால் அல்லவா இடைவெளி பற்றிக் குறிப்பிடலாம்? எழுதியே ஆக வேண்டும்; எழுதாமல் இருக்க முடியாது என்ற மனநிலை ஏற்படும்போது தான் நான் எழுதுவதுண்டு. பெயர் அடிக்கடி வெளிவர வேண்டும் என்பதற்காக யான் எழுதுவதில்லை. மாதத்தில் இத்தனை கதைகள் எழுத வேண்டும் என்ற வரையறையும் என்னிடம் இல்லை. சஞ்சீவியில்கூட அண்மையில் 'மறந்துக்கும் அன்பே துணை' என்ற சிறுகதை வெளியாகியதே. அப்படியிருக்க நான் ஒதுங்கியுள்ளேன் என்றோ இடைவெளி இருப்பதாகவோ கருத முடியாதல்லவா?

கேள்வி: சில ஆண்டுகளுக்கு முன் கலைச்செல்வி என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தீர்களே. அதனை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்ற எண்ணம் எப்படி உருவானது?

பதில்: எழுத்தாளனுக்குப் பத்திரிகை ஒன்றை நடத்த வேண்டும் என்ற ஒரு வெறி ஆரம்பத்தில் ஏற்படுவது சகஜம். எனக்கும் அந்த ஆசை இருந்தது. கலைத் துறையில் ஈழதேவி என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை நடத்தி வந்த திரு. தமிழ்ச்செல்வன், திரு. உதயணன் ஆகியோர் 1958 கலவரத்தின் பின் அங்கிருந்து அதனை வெளியிட முடியாத நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து அதனைத் தொடருமாறு என்னிடம் கேட்டனர். எனது ஆசைக்கு ஏற்ப இவ்வேண்டுகோளை ஏற்று ஈழதேவியை, கலைச்செல்வியாக்கி எட்டு ஆண்டுகள் வரை வெளியிட்டேன்.

கேள்வி: உங்கள் ஆசை தீர எட்டு ஆண்டுகள் கலைச்செல்வி மூலம் இலக்கியபணி புரிந்து வந்தீர்கள், தொடர்ந்து அதனை வெளியிடாது விட்டதற்கு காரணம்...?

பதில்: ஈழகேசரியில் கனக செந்திநாதன் ஈழத்து பேனா நண்பர்கள் 40 பேர்பற்றி தொடர் கட்டுரை ஒன்றை எழுதி இருந்தார். ஈழத்து எழுத்தாளரின் திறமையில் நான் வைத்திருந்த நம்பிக்கையை இக்கட்டுரைத் தொடர் மேலும் உறுதிப்படுத்தியது. வறுமை நிறைந்த தமிழ் நாட்டிலிருந்து பல பத்திரிகைகள் வெளிவரலாம் என்றால் வளம் நிறைந்த இலங்கையில் ஏன் நல்லதொரு சஞ்சிகையை வெளியிடமுடியாது என எண்ணி, கலைச்செல்வியை உற்சாகமுடன் வெளியிட்டேன். இலங்கையில் தரமான எழுத்தாளர், வாசகர்கள் கலைச்செல்விக்குப் பேராதரவு தந்தனர்' இருப்பினும் கலைச்செல்வி நிர்வாகத்தின் பலவீனம், பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே அதனைத் தொடர்ந்து வெளியிட முடியவில்லை.

கேள்வி? முற்போக்கு எழுத்தாளர் எதிரணியில் [illegible] கலைச்செல்வி தொடர்ந்து வெளிவராமைக்குக் காரணம் என்று கூறப்படுகிறதே?

பதில்: அப்படியல்ல. நண்பர் கைலாசபதிகூட ஒரு சந்தர்ப்பத்தில் முற்போக்கு இலக்கியத்தின் எதிரணியில் நின்றதனால் தான் கலைச்செல்வியைத் தொடர முடியவில்லை எனக் கூறியுள்ளார். கலைச்செல்வி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோஷ்டி மனப்பான்மையுடன் இயங்கவில்லை. முற்போக்கணி எனக் கூறப்படுபவர் பலரின் ஆக்கங்கள் கலைச்செல்வியில் வெளிவந்துள்ளதோடு, பல பரிசுகளைக் கூட அவர்கள் பெற்றுள்ளனரே தவிர, இலக்கியம் என்பதே முற்போக்குத் தன்மையுடையதுதானே அதைவிட்டு முற்போக்கு இலக்கியம் என்று புதிதாக ஒன்றைச் சொல்வது அர்த்தமற்றது என்பது கருத்து.

கேள்வி: இலக்கியத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் அல்லது திருப்தி சம்பந்தமான அனுபவங்கள் பற்றி......?

பதில்: எழுத்தாளன் வாழ்வில் ஏமாற்றமும் திருப்தியும் சகஜம் தானே. இருப்பினும் ஒன்றைக் கூறுகிறேன். "நிலவும் நினைவும்" என்ற எனது சிறுகதைத் தொகுதி சாகித்திய மண்டலப் பரிசுக்கு ஆரம்பத்தில் சிபார்சு செய்யப்பட்டது. இருந்தும் இறுதியில் அதற்கு பரிசு வழங்கப்படவில்லை. தொகுதியில் 9 கதைகள் மட்டுமே இருந்த காரணத்தால் அப்பரிசு வழங்கப்படவில்லை என பின்னர் காரணம் கற்பிக்கப்பட்டது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு தொகுதியிலே பத்துக் கதைகளுக்குக் குறைய இருக்கக்கூடாது என்ற ஒரு நிபந்தனை எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. இது எனக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் அளித்தது. சாகித்திய மண்டல உறுப்பினர்கள் எனது கதைத் தொகுதிக்குத் தாமாகவே பரிசுவழங்க முடிவுசெய்தமையும், பின்னர் தாமாகவே அப்பரிசினை வழங்காமல் விட்டமையும், ஒரு எழுத்தாளனால் மறக்கக்கூடிய நிகழ்ச்சியா?

சாகித்திய மண்டலப் பரிசுப்பணம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், பரிசுக்குரியது என்ற நிலையில் எனது கதைத் தொகுதி இருந்தது என்பது எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று எலும்புத் துண்டுகளை அடிப்படையாக வைத்து கொலையைக் கண்டுபிடித்த சட்டமருத்துவ இயல்

மூன்றே மூன்று எலும்புத்துண்டுகள்— சேர் சிட்னி ஸ்மித்திடம் பொலீஸார் ஒப்படைத்த அந்தப் பார்சலில் வேறு எதுவும் இருக்கவில்லை.

அது மனித எலும்புகள்தானு என்பதுகூட பொலீஸாருக்குத் தெரியாது. சில வேளைகளில் அவை வேறு ஏதேனும் இறந்தவிலங்குகளின் எச்சங்களாகக்கூட இருந்திருக்கலாம்.

ஒரு பாழடைந்த கிணற்றைத் துப்புரவு செய்தபோது கிடைத்த துண்டுகளே அவை. அதைத் தவிர பொலீஸாருக்கு வேறு எதுவும் தெரியாது.

★ ★

அப்போது முதலாம் உலகப்போர் நடைபெற்று முடிந்தகாலம். சிட்னி ஸ்மித் எகிப்தின் நீதி அமைச்சில், சட்ட மருத்துவ வியலில் சிரேஷ்ட நிபுணராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

பல வருடங்களாகப் பாவிக்கப்படாமல் தூர்ந்துபோயிருந்த பழம்கிணறு ஒன்றை துப்புரவு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்ட மூன்று எலும்புத் துண்டுகளையே பொலீஸார் சிட்னி ஸ்மித்திடம் ஒப்படைத்தனர்.

அந்த எலும்புத்துண்டுகள் மனிதனுடையவையா என்பதுதான் பொலீஸாரின் கேள்வி.

ஆனுல் எலும்பைச் சோதனைசெய்த சிட்னி ஸ்மித் அதற்குமேல் பல ஆச்சரியமான தகவல்களை-துப்புக்களை பொலீஸாருக்குக் கொடுத்தார்.

அவை ஒரு கொலையை இலகுவாகக் கண்டுபிடிக்க உதவின.

சேர் சிட்னி ஸ்மித் அளித்த பதில் இதுதான்:-

இருபத்தி மூன்றுக்கும் இருபத்தி ஐந்துக்கும் இடைப்பட்ட வயதுடைய மெலிந்த, கட்டையான பெண்ணின் எலும்புகள் இவை.

ஆகக்குறைந்தது மூன்று மாதத்திற்கு முன்னர் இவர் இறந்திருக்க வேண்டும்.

குறைந்தது ஒருமுறையாவது இப்பெண் தாய்மை அடைந்திருக்கின்ருள் சிலவேளை இது கூடுதலாகவும் இருக்கலாம்.

அவரது இடதுகால் வலதுகாலைவிடக் கட்டையானது. அதனுல் குறிப்பிடத்தக்க அளவு ஊனத்துடன் — காலை நொண்டி—அவள் நடந்து திரிந்திருக்கவேண்டும்.

அனேகமாகக் குழந்தைப் பருவத்தில் போலியோ நோயின் தாக்கத்துக்கு அவள் இலக்காகி இருக்கவேண்டும்.

மூன்று யார் தொலைவில் இருந்துமேல்நோக்கி தீர்க்கப்பட்ட குண்டு ஒன்றினுல் இப்பெண் காயமடைந்து. பின்னர் ஏழுதொடக்கம் பத்து நாட்களுக்கு இடைப்பட்ட ஒரு காலத்தில் உயிரிழந்திருக்கின்ருள்.

வீட்டில் தயாரிக்கக் கூடிய சாதாரணகுண்டு ஒன்று 'ஷொட்கன்'னில் நிரப்பப்பட்டு தீர்க்கப் பட்டிருக்கிறது.

கொலையாளி இப்பெண்ணுக்கு முன்பாக—பெண்ணுக்குச் சற்று இடது புறத்தில் அமர்ந்தவாறு அல்லது நின்றவாறு வேட்டுக்சளைத் தீர்த்திருக்கவேண்டும்.

சூட்டுக்காயத்தினுல் ஏற்பட்ட (SepticPeritonitis) இறப்புக்குக்காரணம்.

—இதுதான் சேர் சிட்னி ஸ்மித் அளித்த பதில்.

இறந்தவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க பொலீஸாருக்கு இந்தத் தகவல்கள் போதாதா என்ன?

தமது விசாரணையை முடுக்கிவிட்டனர் பொலீஸார்.

துப்புரவு செய்யப்பட்ட கிணற்றை அண்டியுள்ள பகுதியில் யாரேனும் நொண்டிப்பெண் காணுமற்போனுளா என்பதைப் பொலீஸார் துருவி விசாரித்தபோது நம்பிக்கையான தகவல் ஒன்று கிடைத்தது.

அருகில் உள்ள கிராமத்தில் 24 வயதுடைய மெல்லிய, கட்டையான பெண் ஒன்று சிலமாதங்களுக்கு முன்னர் காணுமல்போனது தெரியவந்தது.

ஒரு குழந்தைக்குத் தாயான அப்பெண் விவாகரத்துச் செய்த பின்னர், தனது தந்தையுடன் வசித்துவந்ததாகவும், சில மாதங்களுக்கு முன்னர் அவள்காணுமல் போனதாகவும் கூறப்பட்டது.

தந்தையைப் பொலீஸார் விசாரித்தபோது சில காலத்துக்கு முன்னர் தனது மகள் காணுமல் போனதை முதலில் அவர் ஒப்புக்கொண்டார்.

ஆனுல் மேலதிக பதில்கள் பொலீஸாருக்குச் சந்தேகத்தைத் தரவே, அவர்கள் அவரைக் கைது செய்து தொடர்ந்து விசாரித்தனர்.

உண்மை வெளியே வந்தது.

பொலீஸ் விசாரணையில் மனம் உடைந்து போன அவர் ஒப்புதல் வாக்குமூலமளித்தார் — கொலைக்கு அல்ல— தனது மகளைத் தவறுதலாகச் சுட்டுக் கொன்றதாக.

## சட்டத்துறையில் மருத்துவ இயல்

'அப்போது எனது குடிலின் வாயிலில் அமர்ந்திருந்து ஷொட்கனைத் துப்புரவு செய்துகொண்டிருந்தேன் - அதில் குண்டு நிரப்பப்பட்டிருந்தது எனக்குத் தெரியாது.

'எனது மகள் வாசற்கதவருகே நின்றிருந்தாள். திடீரெனத் துவக்கு வெடித்தது. மகள் சரிந்து விழுந்தாள்.

'நான் அவளைப் படுக்கையில் வைத்து வைத்தியம் செய்தேன். — இப்படி அவர் கூறினுர்.

'அப்படியானுல் நீர் ஒரு டாக்டரை ஏன் அழைக்கவில்லை?'— இது பொலீஸாரின் கேள்வி.

'நான் வைத்திருந்தது லைசென்ஸ் இல்லாத ஷொட்கன். ஆகையினுல் டாக்டரிடமோ பொலீஸாரிடமோ சென்று சிக்கலில் மாட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை. ஆகவே மகளை வீட்டில் வைத்து வைத்தியம் செய்வதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்கவில்லை.

'சிறிதுநாட்களில் மகள் இறந்து விட்டாள். அதனுல் நான் மிகவும் பயந்தேன். மகளின் சடலத்தை யாருக்கும் தெரியாமல் தூர்ந்துபோன அந்தக் கிணற்றில் போட்டேன்.

ஆனுல் 3 மாத காலத்தின் பின்னர் அந்தக் கிணற்றைத் துப்புரவு செய்யப் போகின்ருர்கள் என அறிந்து மனக்கிலேசமடைந்தேன்.

ஆகையினுல் ஒரு நாள் கடும் இருட்டில் ஒருவருக்கும் தெரியாமல் கிணற்றுள்இறங்கினேன். அங்கு மிஞ்சிக்கிடந்த மகளின் எலும்புத் துண்டுகள் அனைத்தையும் பொறுக்கிக் கொண்டு போய் நைல்நதியில் வீசினேன்.

—இப்படி அவர் ஒப்புக் கொண்டார்.

பாவம். அவர் விட்டுச்சென்ற மூன்று எலும்புத் துண்டுகள் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டன.

விசாரணை முடிவில் கொலைக்குற்றத்திலிருந்து அவர் தப்பிக் கொண்டாலும் விபத்து மரணம் என்பது முடிவாயிற்று.

சட்டமருத்துவவியல் ஒரு கொலையையும், அக்கொலைக்குக் காரணமானவரையும் காட்டிக் கொடுத்து விட்டது!

எல்லாம் சரி. வெறும் மூன்று எலும்புத்துண்டுகளை மட்டும் வைத்துக் கொண்டு சிட்னி ஸ்மித்தினுல் எப்படி அந்தப் பெண்குறித்து அவ்வளவு தகவல்களைத் தரமுடிந்தது?

அவர் கூறும் விளக்கத்தைப் பார்ப்போம்.



சேர். ஸ்மித்

### இறந்தவர் ஆணு, பெண்ணு

பொலீஸார் ஒப்படைத்த மூன்று எலும்புகளில் இரண்டு இடுப்பு என்புகள். மூன்ருவது முள்ளந்தண்டு என்பு (Sarcum) இம்மூன்று என்பையும் பொருத்தும்போது முழு இடுப்பு வளையம் உருவாகின்றது.

ஒரு எலும்புக்கூடு ஆணுடையதா அல்லது பெண்ணுடையதா என்பதை மிகச்சரியாகத் தீர்மானிப்பதற்குஇடுப்பு வளையத்தைத் தவிர வேறு ஏதும் ஆதாரமாக இருக்கமுடியாது.

இங்கு அது பெண்ணுடைய எலும்புகள் என்பதை இடுப்புவளையம் தெளிவாக வெளிப்படுத்துகிறது:

உடம்பின் தோற்றத்தையும் அமைப்பையும் முடிவு செய்வதிலும் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை.

எலும்புகள் சிறியனவாகவும் இலேசானவையாகவும் இருந்தால் அவை ஒன்றில் குழந்தையுடையதாக இருக்கவேண்டும் அல்லது உயரம் குறைந்த மெல்லிய ஒரு நபருடையதாக இருக்கவேண்டும்.

இடுப்பு என்புகள் வழமையாக வளர்ந்து 22வயதுக்கும் 25 வயதுக்கும் இடையில் இணையும் நிலையை அடைந்துவிடும்.

தரப்பட்ட மூன்று எலும்புகளில், இடுப்பு எலும்புகள் இரண்டும் ஏற்கனவே இணையும் நிலையை அடைந்திருப்பதால் வயதைத் துல்லியமாகக் கணக்கிட முடிந்தது.

எலும்புகளில் ஒட்டிக் கொண்டிருந்த மெல்லிய திசுக்களும் அவற்றின் நிலையும் இப்பெண் இறந்து ஆகக்குறைந்து மூன்று மாதங்களாவது ஆகியிருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்தின.

எலும்புகளில் காணப்பட்ட நீண்ட பள்ளமான தடயம் இப்பெண் ஒரு தடவையேனும் கருத்தரித்திருக்கவேண்டும் என்ற தகவலைத் தெரிவித்தது.

### இறந்தவர் நொண்டியா?

இப்பெண் நொண்டி என்பதைக் கண்டுபிடிப்பதிலும் கஷ்டம் ஏதும் இருக்கவில்லை.

வலது இடுப்பு எலும்பு, இடது எலும்பை விடப் பெரிதாகவும் பாரமானதாகவும் இருந்தது. வலது தொடை எலும்பைக் கவ்விப்பிடிப்பதற்காக வலது இடுப்பு எலும்பில் காணப்பட்ட குழியும் இடது பக்கத்திற்குரியதைவிடப் பெரிதாகக் காணப்பட்டது.

வலதுஇடுப்பு எலும்பே உடலின் பாரத்தில் பெரும் பகுதியை நீண்டகாலமாகத் தாங்கியிருந்தால் மட்டுமே இத்தகைய வேறுபாடு ஏற்பட்டிருக்க முடியும்.

குழந்தைப் பருவத்தில் அல்லது சிறுவயதில் ஏற்பட்ட நொண்டித் தன்மையே இத்தகைய நிலையை உருவாக்க முடியும். இந்த நொண்டித் தன்மைக்குக் காரணம் அனேகமாக போலியோவாகவே இருந்திருக்கும்.

இடது இடுப்பு எலும்பில் குண்டு அல்லது அது போன்ற கனமான சிறிய பொருள் ஒன்று ஆழப் பதிந்த அடையாளம் காணப்பட்டதால் இப்பெண் சூட்டுக்கு இலக்காகியிருக்க வேண்டும் எனக் கருதினேன்.

அந்தக் காயத்தின் வடிவம் ஒழுங்கற்றதாக இருந்ததால் சாதாரண உள்ளூர்த் தயாரிப்புக் குண்டு ஒன்றே இக் காயத்தை ஏற்படுத்தியிருக்கும்.

இதே எலும்பில் ஆழப் பதிந்த இன்னொரு காயமும் முக்கோண வடிவான வெடிப்பும் காணப்பட்டது. இவையும் இக் குண்டுகளினுலேயே ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்தக் காயங்களைப் பரிசீலித்துப் பார்க்கும் போது இது'ஷொட்கன்' ஒன்றினுல் ஏற்பட்டது என்பதை அனுமானிக்க முடிந்தது.

எலும்புகளில் காயம் ஏற்பட்ட இடத்தையும் காயத்தினுல் ஏற்பட்ட பள்ளங்களின் வடிவத்தையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது வேட்டு தீர்க்கப்பட்ட திசையையும் தூரத்தையும் கணக்கிட்டு அனுமானிக்க முடிந்தது.

சூடுபட்ட பின்னரும் சில நாட்களுக்கு இப்பெண் உயிருடன் இருந்திருக்கின்ருள் என்பதையும் காயங்கள் வெளிப்படுத்தின.

எலும்புகளில் காணப்பட்ட காயங்களின் கரையோரங்கள் அரிக்கப்பட்டிருக்கின்றன.

சூடுபட்ட பின்னர் ஏழு தொடக்கம் பத்து நாட்களுக்கு இக்காயங்கள் சீழ் பிடித்து அழுகியதால் இந்த அரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே சூட்டுக்காயத்துக்கு இலக்கான பின்னரும் இப்பெண் சுமார் ஏழு தொடக்கம் பத்து நாட்களுக்கு உயிருடன் இருந்திருக்கின்ருள்.

இறுதியாக, காயங்களைப் பரிசோதித்தபோது தீர்க்கப்பட்ட வேட்டுகளில் ஒன்று அப்பெண்ணின் வயிற்றையும் துளைத்துச் சென்றிருக்கிறது என்பதையும் அனுமானிக்க முடிந்தது.

இந்தக் காயத்தினுல் வயிற்றில் ஏற்பட்ட தொற்றே Septic-Peritonitis) இறப்புக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என என்னுல் ஊகிக்கமுடிந்தது.

—இப்படி சேர் ஸ்மித் விளக்கமளித்தார்.

சேர். ஸ்மித் கூறிய தகவல்களினுலேயேகொலைக்குக் காரணமானவரை பொலீஸாரால் பிடிக்க முடிந்தது.

இல்லையேல் வெறும் எலும்புத் துண்டுகளை மட்டும் வைத்துக் கொண்டு பொலீஸாரால் ஒன்றும் செய்திருக்கமுடியாது.

பொலீஸ் விசாரணையின் முடிவில் சேர்.ஸ்மித் கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்று நிருபிக்கப்பட்டன— ஒன்றைத் தவிர.

இப்பெண்ணுக்கு இடது காலிலேயே போலியோ ஏற்பட்டிருக்க வேண்டும் என சேர் ஸ்மித் கூறியிருந்தார்.

ஆனுல் விசாரணையில் அவரது இடதுகால் மட்டுமல்ல, வலது காலும் சிறிது போலியோவினுல் பாதிக்கப்பட்டது என்பது தெரியவந்தது.

சட்ட மருத்துவவியல் அறிவைக்கொண்டு சேர். ஸ்மித் வெளியிடும் தகவல்கள் நம்மை வியக்க வைக்கின்றன. ★

-ந. வித்தியாதரன் -

---

# இரவின் அமைதியைக் கிழித்துக் காற்றில் மிதக்கும் குறட்டை ஒலி!

ஒவ்வொரு மனிதனும் தன்னுல் பிறருக்கு எவ்வகையிலும் தொல்லையோ,அசௌகரியமோ ஏற்படக்கூடாது என்றே விரும்புகிருன்.

நம்மில் அநேகமானோருக்கு அப்படியான விருப்பமும், உணர்வும் இருக்கின்றன.

இருப்பினும் நாம் எங்களையும் அறியாது பிறருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தத்தான் செய்கிரும்.

இது எங்களை அறியாமல், எங்கள் உணர்வுக்கு எட்டாது நிகழ்ந்துவிடுகிறது.

நீங்கள் நன்ருக உறங்கும்போது உங்களையுமறியாது, விதவிதமான ஓசையுடன் எழும்பும் குறட்டை ஒலியானது மற்றவர்களுக்கு எவ்வளவு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றதெனத் தெரியுமா?

எனது காரியாலயத்தில் மதிய உணவு இடைவேளைக்குப்பின், ஒரு குட்டித்தூக்கம் போடுவது சகஊழியர் இராமனுதனின் வழக்கம். சாப்பிட்டபின் கதிரையில் அமர்ந்ததும் தூக்கம் வந்துவிடும்.

முதலில் மெல்லிய ஓசையுடன் ''கொர்ர்... கொர்...'' எனத்துவங்கி, பின் தாளலயத்துடன் ஓசையும் பெரிதாகி ''கொர்ரு...கொர்ர்...... என அவன் திசையில் இருந்து கிளம்பும். பின் திடீரென ஸ்கூட்டர் ஓடுவதுபோல் ஓசை எதிரொலிக்கும். காரியாலயத்தில் மற்றவர்கள் எந்தவேலையிலும் மனதை ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்படும்.

அவனை மெதுவாகத் தட்டி எழுப்பி ''கணக்காளருக்குக் கேட்கப் போகுது.குறட்டைவிடாமல் தூங்கப்பா'' என்ருல் அவனுக்குக்கோபம் பொத்துக்கொண்டு வரும். ''நானெங்கே குறட்டைவிட்டனுன்? நீ கனவு காணுதே'' என்று எரிந்துவிழுவான். அவனைத் திருத்தமுடியாது.

காரியாலயத்தில் மட்டுமா இந்தத்தொல்லை? வீட்டில் நான் படும் அவஸ்தை சொல்லில் அடங்காது.

எனது மாமா தனது மனைவியுடன் கோபித்துக்கொண்டு கடந்த ஆறுமாதகாலமாக என்னுடன் இருக்கிருர்.இரவு ஒன்பது மணியானதும் ''கண்டறியாத ரிவியை மூடுங்கடா''என்று கத்துவார். பிள்ளைகள் ரிவியை நிறுத்தியதுதான் தாமதம்; அவரின் குறட்டை ஒலி எங்கும் எதிரொலிக்கும். டிராக்டர் ஸ்டார்ட் ஆகும்போது எழும்ஓசை அவரிடமிருந்து தங்குதடையின்றி வரும். நிசப்தமான இரவின் அமைதியை கிழித்துக்கொண்டு காற்றில் மிதந்துவரும் அவரின் குறட்டைஒலி அயலவருக்குப் பயத்தையும், திகிலையும் ஏற்படுத்தும்.

### ''ஹெலிமாமா''

எனது உறவினர் வீட்டில் நிகழ்ந்த சம்பவம் மாமாவிற்கு ''ஹெலிமாமா'' என்ற பட்டத்தையே வாங்கிக் கொடுத்தது.

விடிந்தால் திருமணம். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் இரவு பல்வேறு அலுவல்களில் மூழ்கியிருந்தனர். திடீரென'' லைட்டை அணை

நகைச்சுவை

யுங்கோ'' என்று கத்திய பெண்ணின் தாயார் மணப்பெண்ணுடன் பதுங்கு குழியை நோக்கி ஓடினுர். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் ஓடினுர்கள்.

வீட்டிற்குமேல் ஹெலி வட்டமிடும் ஓசை கேட்டவண்ணம் இருந்தது. எந்நேரமும் சூடுவிழலாம் என்ற பீதி இதயத்தைக் சவ்வ எல்லோரும் அங்கும் இங்கும் ஓடினர்.

அப்போதுதான் எனது துப்பறியும் மூளை செயற்பட்டது. மாமா படுத்திருக்கும் இடத்திற்குப் போனேன். வாயை அகலத் திறந்து உறங்கிக் கொண்டிருந்தார். பயங்கரமான ஹெலியின் சத்தம் அவர் வாயிலிருந்து வெளிக் கிளம்பிக்கொண்டிருந்தது. அவரை மெல்லத் தட்டி எழுப்பினேன். சத்தம் நின்றுவிட்டது. அன்றே அவருக்கு ஹெலி மாமா என்று நாமகரணம் சூட்டப்பட்டது.

ஹெலிமாமாவின் குறட்டைஒலியினுல் திருடர்கள் பயந்து ஓடியதும் உண்டு.

ஒருநாள் மாலை என் மனைவியிடம் ''பிள்ளை எனக்குப் பசியில்லை. சாப்பாடு வேண்டாம். கொஞ்சம் ஓடியல்கூழ் காய்ச்சித்தா'' என்ருர்.

- வில்வம் பசுபதி -

அவரது அகராதியில் சாப்பாடு என்ருல் சோறுதான். அன்று இரவு வயிறு நிரம்பக் கூழ் குடித்தார். ''தம்பி வயிறு இட்டு முட்டாயிருக்கு, வெளியில படுக்கிறேனடா'' என்று [illegible] யில் படுத்தார்.

[illegible] கிட்டு எழுந்து ''ஐயோ மோட்டரைப் போட்டு விட்டு நிற்பாட்ட மறந்துட்டேன்'' என்று சொல்லியவாறு லைட்டைப் போட்டாள். எனக்குத்தெரியும் அது மோட்டர் சத்தம் அல்ல வென்று. அபஸ்வரமாக அது ''கொர்ர்...டுர்ர்... என்று இரையாது. இது எங்கள் மாமாவின் விசேட குறட்டை ஒலி பரப்பு. ஓடியல் கூழ் விசேட ஓசையை உருவாக்கியதோஎன்னவோ.

பக்கத்து வீட்டுவளவில் வாழைக்குலை வெட்டிய கள்வருக்கு மாமாவின் குறட்டை ஒலி ஸ்கூட்டர் சத்தம்போலக் கேட்டது. தொடர்ந்து வீட்டில் வெளிச்சமும் வரவே வாழைக்குலையைப் போட்டுவிட்டு மதிலால் குதித்து ஓடி விட்டார்கள்.

குறட்டை ஒலிபரப்பால் ஒரு களவு தடுத்து நிறுத்தப்பட்டது.

### விவாகரத்து

குறட்டையினுல் கணவன் [illegible] சச்சரவு ஏற்பட்டு விவா[illegible] முடிந்த சம்பவமும் உண்டு.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் விநோதமான விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தனது கணவன் குறட்டை விடுவதால் தன்னுல் அமைதியாக உறங்கமுடியாது என்றுகூறி ஒரு பெண் விவாகரத்துக் கோரி மனுச்செய்தாள். வழக்கை விசாரித்த நீதிபதி மனுவை ஏற்று விவாகரத்து வழங்கினுர்.

ஒருவர் உறங்கும்போது எவ்வாறு குறட்டை ஒலி வெளிவருகின்றது என்பதை ஆராய்ந்த மருத்துவ நிபுணர்கள்,தொண்டையில் இருக்கும் மெதுவான சதைப்பிடிப்புள்ள சவ்வு சுவாசத்தைத் தடைசெய்வதால் ஏற்படும் ஓசை எனக்கூறுகிருர்கள்.

### விசேட தலையணை

இதற்கு மருத்துவ ரீதியில் சிகிச்சை இல்லையெனினும் குறட்டை விடுபவர்கள் பாவிப்பதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட தலையணைகள் குறட்டையைத் தவிர்க்க ஏதுவாக உள்ளன. சமீப காலத்தில் இப்படியான தலையணைகள் அமெரிக்காவில் பெருமளவு விற்பனையாகியுள்ளன.

குறட்டைவிடும் கணவன்மார்களுக்கு இத்தலையணைகள் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ★

---

## மறுமலர்ச்சி கண்ட...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

கிருர்:

''...ஆனுல், என்னுல் விளங்க முடியாத தொன்று; 'ரேவதி எப்படி அவர்களுடன் சேர்ந்தார்?' ஆகவே, முழுவரலாற்றையும் நான் விரிவாக அறிய வேண்டும். அதன் பின் தான் எனது வாக்குரிமையை நான் இன்னெருவரிடம் ஒப்படைக்கலாம்...''

இங்கு குறிப்பிடப்படும் ரேவதி,ரேவதி குப்புசாமி என்ற சிற்பக் கலைஞர்; சிறந்த இலக்கியச் சுவைஞர். எழுத்தார்வம் மிக்கவர். அவரது யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல்லமே மறுமலர்ச்சிச் சங்க அலுவலகமாக இயங்கி வந்தது. மறுமலர்ச்சி எழுத்தாளர் அனைவருமே ரேவதி குப்புசாமியை இன்றும் மதித்துப் போற்றி வருகின்றனர். இதனுலே தான் 'ரேவதி எப்படி அவர்களுடன் சேர்ந்தார்?' என அ. ந. க. வியப்புடன் வினு எழுப்ப நேர்ந்தது. ★

## நடராஜன் திருநடன..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலாயோகி அவர்கள் பண்டைய சிங்கள, திராவிடக்கலைகள் பற்றி மட்டுமல்லாது; இஸ்லாமியக்கலைகள் பற்றியும், கர்நாடக சங்கீதம் பற்றியும் கூட, பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, பல நூல்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளமை யாவரும் அறிந்ததே.

கலைகள் பற்றிய இவரது படைப்புக்களில், ''இலங்கையின் கனிவளங்கள்'' ''கண்டியக் கைத்திறன்கள்'', ''பண்டைய சிங்களக்கலைகள்'' என்பன பிரசித்தமானவை.

இவரது ஆராய்ச்சியின் பின்பே, பண்டைய யாழின் உருவமும், தன்மையும் வரையறுக்கப் பட்டன. நடராஜத் தாண்டவத்தை விளக்கும் இவரது ''சிவ நடனம்'' என்னும் நூல், பல் நாட்டறிஞர்களினுலும் பாராட்டப்பட்ட தொன்ருகும்.

இந்தியக்கலைகளில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிருர் என்ருல் மிகையாகாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் - ஒரு நோக்கு

## இந்திய - சோவியத் நலன் பேணுவது

'இராட்சதத் தூண்களைத் தலையால் அடித்து விழுத்தும் முயற்சியாகப் போராட்டம் அமைந்து விட்டது'

பிரெஞ்சுப் புரட்சியின் போது ஓர் எழுத்தாளர் போராட்டத்தைப்பற்றி இப்படிக் கூறினார்:-

இன்றைய எமது போராட்டமும் அவர் கூறியவாறே அமைந்து விட்டது.

ஆயிரக்கணக்கான மக்களும், கட்டடங்களும் அழிந்து முடிந்தபின் இப்படி ஒரு அரைகுறைத் தீர்வு ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த ஒப்பந்தத்தைச் சாதாரணமாக இலங்கை அரசியலை மாத்திரம் வைத்துக்கொண்டு நோக்கக்கூடாது. இது சர்வதேச சூழல்; பிராந்திய சூழல், உள்நாட்டுச் சூழல் என்பவை காரணமாக ஏற்பட்டதொன்று. எனவே இவற்றைப் பற்றிப் பேசாமல் நாம் ஒப்பந்தத்தைப் பற்றி மாத்திரம் பேசமுடியாது.

சர்வதேசத் தன்மை, எமது நிலை, ஒப்பந்தத்தின் தன்மை, ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள எதிர்ப்புரட்சி நிலை இந்த நான்கையும் நாம் சீர்தூக்கி ஆராயவேண்டும்.

'தென்னாசியாவில் இலங்கையின் அமைவிடம் காரணமாக அது எப்போதும் சுயாதீனமற்ற ஒரு தீவாகவே இருக்கும்'—என்று நேரு ஒருமுறை கூறியிருந்தார். இலங்கையின் உண்மை நிலையும் அதுவே.

கடந்த காலங்களில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இந்தியாவுக்கு எதிரானதாகவே இருந்து வந்தது. இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையில் தமிழர் பகடைக்காய்களாக ஆக்கப்பட்டனர். இலங்கைமேல் இந்தியாவுக்குள்ள கோபத்தைத் தீர்ப்பதற்கும் மேலைத்தேய நாடுகளின் ஆதிக்கத்தை இப்பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கும் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் இந்தியா திட்டமிட்டு வந்தது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் முழுக்க முழுக்க இந்தியாவின் நலன்தான் பேணப்பட்டுள்ளது என்று கூற முடியாது. சோவியத்தினுடைய நலனும் பேணப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை அடக்குவதற்காக இலங்கை அரசு அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரவேல் ஆகிய சோவியத் இந்திய எதிர்ப்பு நாடுகளைத் துணைக்கு அழைத்தது. தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆதிக்கம் ஏற்படும் எனச் சோவியத்தும் இந்தியாவும் யோசித்தன.

தனியே இயற்கைத் துறைமுகத்தினால் தான் இந்த நிலை ஏற்படக்கூடும் என நாம் எண்ணுவது தவறு. திருகோணமலை மட்டுமல்லாமல் இலங்கையின் எந்தப் பிரதேசமும் அமெரிக்காவின் கைக்குப் போகுமாய் இருந்தால் அது சோவியத்துக்கும் இந்தியாவுக்கும் ஆபத்தே.

இவற்றின் சமநிலை பாதிப்புறும் இப்பெரும் ஆபத்திலிருந்து சோவியத்தையும் இந்தியாவையும் இந்த ஒப்பந்தம் காப்பாற்றி இருக்கிறது. எனவே தான் "இதுவரை உலகில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே பெரியது" என்று ராஜீவ் கூறினார். அது முற்றிலும் உண்மையே. இதனால் தான் நான் சொல்கிறேன் இந்த ஒப்பந்தத்திற்கு ஒரு சர்வதேச பரிமாணம் உண்டு என்று.

இந்தியாவின் அண்மைக்கால நடவடிக்கையால் அமெரிக்காகூட அச்சம் கொண்டது. மிராஜ் விமானங்களின் ஒப்பரேசன் பூமாலை, உணவுப்பொருள் விநியோகம் இவற்றுக்கு எதிரான குரல் உலகின் எந்தநாட்டிலும் ஓங்கி ஒலிக்கவில்லை.

வளைகுடாப் பிரச்சினைக்குள் அமெரிக்கா அகப்பட்டுக் கிடந்த நேரத்தில் இலங்கைப் பிரச்சினையில் முழுதாகத் தலை போடுமாறு இந்தியாவை சோவியத் வற்புறுத்தியது. இந்தியாவும் இலங்கையை வற்புறுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் பண்ணிவிட்டது.

இன்றைய துரதிர்ஷ்டத்துக்கான பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள் அறிஞர்களே.

> யாழ் பல்கலைக்கழக வணிக மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தம் பற்றிய கருத்தரங்கில் விரிவுரையாளர் திரு. மு. திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொகுப்பு.

கடந்த காலப் போராட்டங்களில் அறிஞர்கள் ஈடுபடவில்லை, போராட்டங்களைப்பற்றிய அரசியல் ஞானத்தைத் தரத்தக்க நூல்கள், பிரசுரங்கள், கட்டுரைகள் ஒன்றைத்தானும் அவர்கள் வெளியிடவில்லை.

காரணம்; அவர்கள் அரச நிறுவனங்கள் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை பார்த்தார்கள். இப்படியான பிரச்சினைகளுக்குள் தலையைக் கொடுத்தால் அது தமக்குப் பிரச்சினையாகிவிடும் என்று பயந்தார்கள். தங்கள் பதவியை நிலைநாட்டிக்கொள்ளும் சுயநலமே இதற்கெல்லாம் காரணமாய்விட்டது.

எங்கள் சமூகத்தில் அடிமைத்தனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அடிமைகளாக ஒழுங்



கோர்ப்பச்சேவ்

காக வெள்ளைக்காரர்களுக்கு வேலை செய்த சமூகம் இது. இதனால் தான் ஆங்கிலேயர் தமிழரை ஒழுங்கான வேலையாட்கள் என்றார்கள்.

இறுதிவரை காலமும் தமிழர்கள் ஒற்றுமை இன்றியே இருந்தார்கள். சிங்களவர் ஒன்றுபட்டிருந்தார்கள், சிங்களப் பிரதேசங்கள்கூட இணைக்கப்பட்டிருந்தன. தமிழர் பிரதேசங்களே இணைப்பற்றிருந்தன. வடக்கிலிருந்து கிழக்கிற்குப் போவதாக இருந்தால் சிங்களப் பிரதேசத்திற்கூடாகவே போகவேண்டும். தமிழர் பிரதேசத்துக்கூடாகச் செல்லக்கூடியதாக ஒரு பாதையும் அமைக்கப்படவில்லை.

எனவே இனியாவது வேறுபாடுகளைக் களைந்து தமிழர்கள் இணையவேண்டும். இது போராட்டத்தின் அடிப்படை. தலையிடுவதற்குக் காரணமாய்விட்டது,

அனைத்துக் குறைகளையும் களைந்து ஒற்றுமைப்பட்டு எதிர்காலத்தைச் செப்பனிட நாம் முன் வரவேண்டும். ★

தொகுப்பு: ரகுபரன்

## திருகோணமலைத் துறைமுகம் பற்றி சரத்து எதுவும் இல்லை

சிறப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினார் காங்கிரஸ் (எஸ்) எம்.பி. திரு. கே. பி. உன்னிகிருஷ்ணன்.

அவர் சொன்னதாவது;

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் எழுதப்பட்ட கடதாசியின் மதிப்புக்கூட' ஒப்பந்தத்துக்கு கிடையாது.

இது திணிக்கப்பட்ட ஒப்பந்தம். சிங்களப் பேரினவாதத்துக்கு திட்டவட்டமான வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்துள்ளது இந்த ஒப்பந்தம்.

இதன்மூலம் தமிழ் ஈழம் இயக்கத்தை இந்தியா கைவிட்டுவிட்டது.

**சர்வசன வாக்கெடுப்பு**

பிரதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை இந்தியா முன்னர் எதிர்த்துவந்தது.

ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் விதி சேர்க்கப்பட்டுள்ளது.

இது இந்தியா அரசு தனது முந்திய கொள்கையைக் கைவிட்டுவிட்டது என்பதையே காட்டுகின்றது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை இந்தியா இன்னும் எதிர்த்துவருகின்றது.

இதை இந்திய அரசுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஜவஹர்லால் நேருவும் ஏனைய பிரதமர்களும் கடைபிடித்துவந்த இந்திய நிலைப்பாடுகளை பிரதமர் காந்தியும் அவரின் அரசாங்கமும் கைவிட்டுவிட்டன.

தனது நல்லெண்ண உதவிகளையே இந்தியா முன்னர் வழங்கிவந்தது. நேரிடையாகப் பிரச்சினைகளில் இந்தியா தலையிடுவதில்லை.

**இந்திய உத்தரவாதம்**

முதன்முறையாக இப்போதுதான் இந்தியா ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது; அந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் உத்தரவாதமளிப்பவர் என்ற பொறுப்பையும் இந்தியா ஏற்றுள்ளது.

அப்பொறுப்பு இலங்கைக்கு கிடையாது.

(கிண்டலாக)

பிரதமர் காந்தி கூறியதுபோல இது ஓர் அதிசயமான ஒப்பந்தம் தான்; இதற்குச்சமமான ஒன்றுமே உலகில் கிடையாது.

நல்லெண்ணத்துடன் பிரதமர் காந்தி, திரு. ஜெயவர்த்தனவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கலாம். திரு. ஜெயவர்த்தன அந்த நல்லெண்ணத்துடன் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவார் என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

ஆகஸ்ட் 6ஆம் திகதி திரு. ஜெயவர்த்தன வானொலியில் பேசினார். ''வடக்கு-கிழக்கு இணைப்பு தற்காலிகமானது; சர்வசன வாக்கெடுப்பில் இணைப்பை எதிர்த்து பிரசாரம் செய்து ஆதரவு தேடுவேன்''— இப்படி ஜெயவர்த்தன வானொலி உரையில் தெரிவித்தார்.

இப்படி பேச்சுக்கள் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வாரத்திலேயே நிகழ்த்தப்படுகின்றன.

இதிலிருந்து ஒன்று புரிகின்றது ஒப்பந்தம் எழுதப்பட்ட கடதாசியின் பெறுமதிகூட ஒப்பந்தத்துக்குக் கிடையாது என்பதே அது.

> **இந்திய-இலங்கை ஒப்பந்தம் குறித்து இந்தியநாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறப்புவிவாதத்தின் போது இடம்பெற்ற பேச்சுக்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

ஒப்பந்தத்தின்மூலம் நாட்டின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் காந்தி கூறுகின்றார். இது ஒப்பந்தத்தில் காணப்படவில்லை.

திருகோணமலைத் துறைமுகம்பற்றி திரு. காந்திக்கும், திரு. ஜெயவர்த்தனவுக்கும் இடையேயான தனிப்பட்ட கடிதத்தில்தான் கூறப்பட்டுள்ளது.

**அமைதி**

இப்படி திரு. உன்னி கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் பேசினார்.

அவர் சொன்னதாவது;

ஒப்பந்தம் இலங்கையில் அமைதியைக் கொண்டுவந்திருக்கிறது. தமிழரின் உரிமைகளும் தீவின் ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவையும் ஒப்பந்தத்தின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தென் ஆசியா ஒரு பிராந்தியம் என்பதை இந்த ஒப்பந்தம் காட்டி இருக்கின்றது. இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் நிலவும் பிரச்சினைகள் வெளியார் தலையீடு இன்றித் தீர்க்கமுடியும் என்பதற்கு இது ஒரு உதாரணமாக அமைந்துள்ளது.

இப்பிராந்தியத்தில் இந்தியாவுக்கு முதன்மை ஸ்தானம் உண்டு என்பதை இந்த ஒப்பந்தம் அங்கீகரித்துள்ளது.

பிரச்சினைக்குத் தீர்வு காணுவார் என்று திரு. ஜெயவர்த்தனவும் தமிழ்த் தலைவர்களும் பிரதமர்மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

இப்படி திரு. தினேஷ் சிங் சொன்னார். ★

தொகுப்பு: தீபன்ராஜா

## அணிசேரா இயக்கத்தின் வெற்றி

இந்திரா காங்கிரஸ் சிரேஷ்ட எம். பி பேராசிரியர் ஜி. ஜி. ஸ்வெல் பேசுகையில் சொன்னதாவது;

இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்த பெரிய வெற்றி இந்த ஒப்பந்தம்.

பங்களாதேஷ் உட்பட அயல்நாடுகள் இலங்கையில் இனக்கொலை இடம் பெறுவதை ஏற்றுக் கொண்டன. அந்த இனக்கொலைக்கு இந்த ஒப்பந்தம் முற்றுப்புள்ளி வைத்தது.

ஜெயவர்த்தனவின் அரசாங்கம் பிளவுபடும் நிலையில் இருந்த சமயம் தான் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

தனது உயிரையும் பணயம் வைத்து திரு. ஜெயவர்த்தன இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றார். இதற்காக திரு. ஜெயவர்த்தனவை இந்தச் சபை பாராட்ட வேண்டும். நெருக்கடியான கட்டத்தில் ஒருவர் என்ன செய்கின்றார் என்பதை வைத்து மதிப்பிட வேண்டும்.

இப்படி பேராசிரியர் ஸ்வெல் தெரிவித்தார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் பகத் சொன்னதாவது;

ஒப்பந்தம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. இலங்கைத் தமிழரின் அபிலாஷைகளை இந்த ஒப்பந்தம் தீர்க்கக்கூடியதாகவுள்ளது.

அணிசேரா இயக்கத்துக்குக் கிடைத்த வெற்றி இது. அணிசேரா இயக்கத்தில் இருந்து இலங்கையை வெளியேற்றச் சில சக்திகள் முயன்றன. ஒப்பந்தம் அம்முயற்சியை முறியடித்து விட்டது.

தமிழில் தருபவர்:
**பிரசாந்தி**

இப்படித் திரு. பகத் சொன்னார்.

அண்ணா தி. மு. க. எம்.பி திரு.பி. குழந்தைவேலு சொன்னதாவது;

இந்திய-சோவியத் ஒப்பந்தத்துக்குப் பின்னர் இடம்பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த ஒப்பந்தம் இது.

இதனைச்செய்ததற்காக நோபல் சமாதானப் பரிசு பிரதமர் காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஜெய்பால் ரெட்டி (ஜனதா): எம். ஜி. ஆருக்கும் நோபல் சமாதானப் பரிசை வழங்கலாமே!

திரு. குழந்தைவேலு; ஏன் எம். ஜி. ஆருக்கு வழங்கக்கூடாது?

திரு. ஜெய்பால்ரெட்டி (ஜனதா):

ஒப்பந்தத்தில் குழப்பம்தரும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஒப்பந்தத்தை ஏற்க தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தயக்கம் காட்டுவதற்கு இதுவே காரணம். ★

## கரடு முரடான பாதை

இலங்கையில் அமைதி இலகுவில் வராது.

நான்கு வருட இனப்பிரச்சினைக்கு உடன்பாடு காணப்பட்டது. ஆனால் சிங்களப்பெரும்பான்மையினரின் ஆத்திரம் வெறியாக மாறியது.

ஆறாயிரம் பேருக்கு மேல் உயிரைப்பலி கொண்ட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காகத் தமிழருக்குக்



ராஜீவ்

கூடுதல் சலுகையை வழங்கி விட்டனர்கள்- பெரும்பான்மை பௌத்தர்கள் ஜனாதிபதியைக் குற்றஞ்சாட்டினர்.

14 அம்ச உடன்பாட்டில் கையொப்பமிட முதலாவது இலங்கை விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் ராஜீவ் காந்திக்கு அலங்கார வரவேற்பு அளிக்கப்படவில்லைத்தான். ஆனால் அடுத்த நாட் காலை அளிக்கப்பட்ட பிரியாவிடையிலும் பார்க்க வரவேற்பு நன்றாக இருந்தது என்பதைச் சொல்ல வேண்டும்.

உடன்பாட்டில் கைச்சாத்திட்ட பின்னர் இந்திய அமைதிப்படையை பிரதமர் காந்தி இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

'இலங்கை மண்ணில் இந்தியத் துருப்புக்கள் இருப்பது மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கச் செய்யும்'— இப்படி கொழும்பில் உள்ள மேற்கு ஜேர்மனி ராஜதந்திரி ஒருவர் சொன்னார்.

இது திரமிக்க, துணிச்சலான நடவடிக்கை. சிங்கள மக்களை ஆத்திரமூட்டுமானால் இது பெரிய அழிவைக் கொண்டுவரும்— அந்த இராஜதந்திரி இப்படி மேலும் சொன்னார்.

ஜெயவர்த்தன நெருக்கடியில் இருக்கின்றார், ஒப்பந்தத்தை ஏற்கும்படி இலங்கை நாடாளுமன்றத்தை ஜெயவர்த்தன தூண்ட வேண்டும்.

ஒப்பந்தத்துக்கு அரசாங்கத்தினுள்ளேயே பலத்த எதிர்ப்பு, குறிப்பாகப் பிரதமர் பிரேமதாஸா தலைமையில் உருவாகி உள்ளது.

இனப்பிரச்சினை உள் விவகாரம்; இந்தியாவுக்கு அதில் நேரடிப் பங்கு இல்லை—இது பிரதமர் பிரேமதாஸாவின் வாதம்.

நாடாளுமன்றத்தில் ஒப்பந்தத்தை நிராகரிக்க வைக்கப் பிரதமர் விரும்பினால் அதற்குத் தேவையான வாக்குகள் பிரதமரிடம் உண்டு— இப்படி பரவலாக நம்பப்படுகின்றது.

பௌத்தமதத் தலைவர்கள் பலத்த எதிர்ப்பும் ஒப்பந்தத்துக்கு உண்டு.

தென் இந்தியாவில் வாழும் 5 கோடித் தமிழரின் 'பயமுறுத்தல்' பற்றி இவர்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

ஒரு இலங்கைப் பத்திரிகையாளர் சொல்கின்றார்:

'சிங்களப் பெரும்பான்மையினரின் ஆத்திரத்தையும் விரக்தியையுமே பௌத்தபிக்குகள் பிரதிபலிக்கின்றார்கள். தமிழருடன் உடன்பாடு காண அவர்கள் விரும்பவில்லை. தமிழர்களின் இலட்சியம் சிங்களவர்களைக் கடலில் தள்ளுவதே என்று அவர்கள் எண்ணிச் செயல்படுகின்றார்கள். இந்தப் பயம் 2,000 ஆண்டுகளாக சிங்களவரிடம் இருந்து வரு

> அமெரிக்க சஞ்சிகை நியூஸ்வீக் (ஆகஸ்ட் 10) 'சமாதானத்தை நோக்கி கரடு முரடான பாதையில்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்து உள்ளது. அதன் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது.

கின்றது'— இப்படி அப்பத்திரிகையாளர் சொன்னார்.

இந்தப் பயம்தான் ஒப்பந்தம் கைச்சாத்தாகிய சமயம் தென் இலங்கையில் இடம்பெற்ற கலவரங்களுக்குக் காரணமாக இருந்தது.

1983 இன் பின்னர் இடம் பெற்ற பயங்கரக் கலவரம் அது.

கலவரம் இடம் பெற்ற சமயம் நியூஸ்வீக் பத்திரிகையாளர் ரொன்மோறி கோட்டை ரயில் நிலையத்தில் நின்று நேரிற் பார்த்ததைக் கூறுகின்றார்:

கலகக்காரர்கள் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரண்டு கூட்டாளிகளைத் தூக்கிக் கொண்டு செல்கின்றார்கள்.

அவர்களில் ஒருவர்



ஜே. ஆர்.

என்னிடம் தெரிவிக்கின்றார்: ''தான் ஒரு அரசன், சர்வாதிகாரி என்று ஜெயவர்த்தன எண்ணுகின்றார். எம்மை அவர் விற்கின்றார்''— இப்படி அந்த நபர் சொன்னார்.

திடீரென்று பொலீஸார் சுட்டனர். ஒரு சிறுவன் எனக்கு முன்னால் சில அடிகள் தூரத்தில் நிலத்தில் விழுந்தான். துப்பாக்கிச்சூடு அவனின் தலையில் பட்டிருந்தது. இரத்தம் பீறிட்டோடியது. அவன் உயிர் தப்புவான் என்பதற்கான சந்தர்ப்பமே கிடையாது.

''இதைத்தான் எமது அரசாங்கத்தினால் செய்ய முடியும்''— ஒரு பெண் விழுந்து கிடந்த சிறுவனைச் சுட்டிக் காட்டிக் கத்தினாள்.

''எம்மைப்பற்றி ஜெயவர்த்தனவுக்குக் கவலையில்லை. அவர் சிங்களவரைக் கொல்கின்றார்''- இப்படி அந்தப் பெண் தெரிவித்தாள்.

ஓர் அம்சத்தில் ஒப்பந்தம் பிரச்சினைக்குரியதாக உள்ளது. வடக்கு- கிழக்கு இணைப்புத்தான் அது. சுதந்திரமில்லாத, அரைசுயாட்சி அந்தஸ்து கொண்ட தமிழர் தாயகம் பற்றிச் சொல்கின்றது, அந்த அம்சம்.

தமிழரின் ஆதரவை உடன்பாட்டுக்குப் பெற சேர்க்கப்பட்டது அந்த அம்சம்.

ஓர் ஆண்டின் பின்னர் இணைப்பை உறுதிப்படுத்த கிழக்கு மாகாணத்தில் (தமிழர்- 40 வீதம், முஸ்லிம்-33வீதம், சிங்களவர் – 27 வீதம்) சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அப்போது இணைப்பை எதிர்த்துப் பிரசாரம் செய்யப்போவதாக ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

சிங்கள மக்களின் ஆதரவைப் பெறவே ஜனாதிபதி இப்படிக் கூறுகின்றார் என்று பெரும்பான்மையான இலங்கையர் நம்புகின்றனர்.

இறுதியில், தமிழரின் சுயாட்சிக் கோரிக்கையை இணைப்புப் பூரணப்படுத்தும் என்பது ஜெயவர்த்தனவுக்குத் தெரியும்.

தமிழர் ஆதிக்கத்துக்குப் பயந்து முஸலிம்கள் சிங்களவருடன் சேர்ந்து சர்வசனவாக்கெடுப்பில் வாக்களிக்கலாம்.

அப்படி இருந்தும் இத்திட்டத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## 'குமுதம்' சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம்

இந்தியா ஒரு மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் ஈழப் போராளிகளுக்கும் இடையில் நடந்து வந்திருக்கும் போருக்கு முடிவு ஏற்பட வழியே இல்லை போல் தோன்றிய சோர்வான கட்டத்தில், ''இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற வேண்டியது. அதே சமயம் போராளிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு விட வேண்டியது,'' என்ற சமரச ஏற்பாட்டுக்கு வழிவகுத்திருப்பது நம்பிக்கை ஊட்டுகின்றது.

தமிழருக்கு என்று ஒரு தனி மாநிலம், தனி கவர்னர், முதல்வருடன் கூடிய தனி மந்திரிசபை என்ற அரசியல் அமைப்பை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருப்பது விவேகம்.

ஜெயவர்த்தனவும் ராஜீவ் காந்தியும் துணிந்து சமரசத்திட்டத்தில் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். [illegible] ஜெயவர்த்தன மட்டும் கையெழுத்திட்டு என்ன பயன்? சிங்கள வெறியர்களைக் கட்டுப்படுத்தும் சக்தி அவரிடம் இருக்கின்றதா என்பது கேள்வி.

அட்டூழியக்காரர்களை அடக்கி வைக்க அவரால் இயலாவிட்டால் பிறகு நம் தரப்பில் விடுதலைப் புலிகளின் கைகளைக் கட்டிப் போடுவது என்பது அர்த்தமில்லாத — ஏன் ஆபத்தான— காரியம் ஆகிவிடும்—

> ''எச்சரிக்கை கலந்த மகிழ்ச்சி''— என்ற தலைப்பில் குமுதம் வார சஞ்சிகை இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கின்றது. அதுவே இங்கு தரப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவும், ஜே.ஆரும் மயிரிழையில் உயிர் தப்பினர்

# ஒப்பந்தமும் அப்படியே தப்புமா, என்ன?

வளர்த்துவிடப்பட்ட 'பூதம்' உயிரைப் பலி எடுக்கத் தயாராகி விட்டது.

அந்தப் 'பூதம்'தான் 'இந்திய எதிர்ப்பு' 'இணைப்பு எதிர்ப்பு' என்பது.

'வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கு' என்று கடந்த வாரம் பூதம் கூறிவிட்டது.

'இரத்தக்கறை' தர்மிஷ்டரின் அங்கியில் படிந்துவிட்டது.

அது அவரின் இரத்தம் அல்ல; அவருக்கு முன்னால் நின்றிருந்த ஊழியரின் இரத்தம்.

துப்பாக்கி நீட்டப்பட்டுவிட்டது. ''ஆனால் எடுத்த காரியத்தை முடிப்பேன்; துணிந்து செல்வேன்'' —இப்படி தர்மிஷ்டர் கூறிவிட்டார்.

கடந்த செவ்வாய் நாடாளுமன்றக் கட்டடத்தில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் உலகையே கலக்கிவிட்டது.

நாட்டைப் பாதுகாக்க என்று போடப்பட்ட கண்காணிப்பு மற்றும் வலயங்கள் எல்லாம் நாடாளுமன்றக் கட்டடத்தைச் சுற்றிப்போடப் படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஜூலை 29 கடதாசி ஒன்றில் வைக்கப்பட்ட கையொப்பங்கள், நிலைமையைத் தலைகீழாக மாற்றிவிட்டது.

வடக்கு, கிழக்கு என்பது இப்போது தெற்கு, மேற்கு என்றாகிவிட்டது.

இணைப்பு எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு -இப்'பூதம்' எப்படி உருவாக்கப்பட்டது?

### இணைப்பு எதிர்ப்பு

இரண்டு இனத்தவர்கள் 1957இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அதில் இந்த இணைப்பு பற்றிக் கூறப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தார் இப்போதைய தர்மிஷ்டர்.

இரண்டும் இணைக்கப்பட்டால் தமிழர் தாயகம் உருவாகிவிடும் என்பது அன்று அவர் கூறிய காரணம். அத்தமிழர் தாயகம் எப்படி அமையும் என்பதை உணர்த்த வரைபடம் ஒன்றும் அப்போது தயாரிக்கப்பட்டு மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மக்கள்எழுச்சி, அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தது.

அன்றிலிருந்து நாளும் பொழுதும் வளர்க்கப் பட்டுவந்தது 'இணைப்பு எதிர்ப்புக்'கொள்கை.

சிங்கள மக்கள் மத்தியில் மட்டும் அல்ல; ஐக்கியதேசியக்கட்சி உயர் மட்டத் தலைவர்களும் இந்த இணைப்பு எதிர்ப்புக் கொள்கையைப் 'பிரித்தெடுக்க முடியாத கொள்கையாக'க் கருதத் தொடங்கினர்.

இந்த ஒரு விஷயமே 1983இல் இருந்து 1987 ஜூலைவரை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல்லாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைக் குடித்தது.

திடீர் என்று ஜூலையில் ஒருநாள்:

இணைப்புக்கு நான் தயார்; பேச்சுக்களை நடத்துவோம் —இப்படி அரசுத் தலைமை மத்தியஸ்தரிடம் சொன்னது.

மத்தியஸ்தரின் பிரதிநிதி அதை உள்ளூர்ப் பாதுகாப்புக்குப்பொறுப்பானவரிடம் சொன்னாராம்.

அந்த இணைப்பைத் தான் இவ்வளவுநாளும் (Prestige) பிரச்சினையாகக் கருதி வந்தோமே! பின்னர் எப்படிச் சரி வரும்—இப்படி பாதுகாப்பாளர் கூறவே, மத்தியஸ்தர் பிரதிநிதி ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றாராம்.

அரசுத் தலைமையை மீண்டும்சந்தித்து ஆவணி வரை சரக்குக்கப்பல் வரும்; அதன்பின்னர்...' இப்படி பிரதிநிதி சொன்னதைத் தொடர்ந்து தான் 'இணக்கம்' ஏற்பட்டதாக ஒரு தகவல்.

சகாக்களுக்கே கூறப்படாமல் இரகசியமாகக் காணப்பட்டது 'இணக்கம்'

சகாக்கள் சிலருக்கே ஆத்திரம். இப்படிச் செய்யலாமா? சிலர் குழுக் கூட்டத்தில் நேருக்குநேர் கேட்டும்விட்டனர்.

இதற்காகவே இவ்வளவு உயிர்களைப் பலி கொடுத்தோமே! ஏற்கனவே இணங்கியிருந்தால் உயிர்ச்சேதங்களைத் தவிர்த்திருக்கலாமே— —இப்படி மனச்சாட்சியைப் பணயம் வைக்க முடியாத மந்திரிகள் சிலர் கேட்டனர்; இன்னும் கேட்கின்றனர்.

மந்திரிகள், பிரதானிகளாலேயே சிரணிக்க முடியாத ஒன்றை இனவாதத்தில் 'ஊற'வைக்கப்பட்ட சாதாரண சிங்கள மக்கள் எப்படிச் சிரணிப்பார்கள்?

அடுத்தது 'இந்திய எதிர்ப்பு'க் கொள்கை!

இது எப்படி வளர்க்கப்பட்டு வந்தது என்பதைப் பார்ப்போம்.

### இந்திய எதிர்ப்பு

1983 ஜூலைக் கலவரம் தொடங்கும் முன்னர்...

வடக்கில் தீவிரவாதத்தை அழித்து ஒழித்து விட்டுத்தான் மறுவேலை என்று அரசு சன்னதம் கொண்டு செயற்பட ஆரம்பித்த காலம் அது.

அப்போது— வடபகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மரணவிசாரணை, பிரேத பரிசோதனையின்றிஎரிக்கலாம்—என்று படையினருக்கு அரசு அனுமதி வழங்கியிருந்தது.

அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்தவர் அன்னை இந்திரா.

அவருக்கு இது தெரிய வந்தது.

இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளராக அப்போது கடமையாற்றியவர் வாஜ்பாய்.

புதுடில்லியில் இருந்த இலங்கைத்தூதரை அலுவலகத்துக்கு அழைத்து மரண, பிரேத பரிசோதனைகள் இல்லாமல் சடலங்களை எரிக்கும் உத்தரவு குறித்து இந்தியாவின் கவலையைத் தெரிவித்தார், வாஜ்பாய்.

அவ்வளவு தான். இலங்கைக்கு வந்தது கோபம். இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக இந்தியா மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

கொழும்புப் பத்திரிகைகளோ இந்தியாவைச் செய்திகள்' கார்ட்டூன் படங்கள் போட்டு தாக்கு, தாக்கு என்று தாக்கின.

இந்தியாவில் இருந்து கொண்டு இந்திரா தனது நீண்ட மூக்கை இலங்கைக்குள் விடுவது'— போன்று ஒரு கார்ட்டூன்.

இப்படி இந்தியஎதிர்ப்புக் கொள்கை பரவத் தொடங்கியது.

அதை வளர்த்து வந்தவர்கள் ஆட்சியாளர்.

1983 ஜூலை கலவரம் வந்தது. இந்தியா நேரடியாகத் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க தனது மத்தியஸ்த நல்லெண்ண உதவிகளை வழங்க முன் வந்தது.

வேறு வழியின்றி இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

அந்த ஆண்டு நவம்பரில் இணைப்பு—''சி'' உருவானது.

இணைப்பு— சி இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை கொண்ட ஒரு தஸ்தாவேஜு

இலங்கை அதனை அப்படிக் கருதவில்லை. இணைப்பு— சி('லோன்') என்றே எண்ணி அனுதையாக்கியது.

பின்னர் நாளும்பொழுதும் இந்திய எதிர்ப்பு உணர்ச்சியே சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வந்தது.

இந்தியா ஆக்கிரமிப்பின் அது இலங்கைத் தமிழரின் முடிவாக மாறும்— இப்படித் தர்மிஷ்டரே இந்தியப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்திருந்தார்.

இந்தியப் படைகள் இலங்கை வர எடுக்கும் சில நிமிடங்களுள் தமிழர் கதை முடிந்து விடும்— இப்படி எல்லாம் எச்சரிக்கப்பட்டு வந்தது.

இந்திய எதிர்ப்பு உணர்ச்சி, இந்த ஆண்டு இந்திய உணவுப் படகுகள், மிராஜ் விமானங்கள் சகிதம் மூலம் உணவுப் பொதிகள் விநியோகம் ஆகிய சம்பவங்கள் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

அது மட்டுமல்ல, இந்தியாவின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவின் எதிர்ப்பு நாடுகளின் உதவிகளை இலங்கை அரசு கோரியது.

பிரதமர், மற்றும் அமைச்சர்கள் இந்தியாவுக்கு எதிராக உதவி பெற பல நாடுகளுக்குச் சென்றனர்,

இதன் மத்தியில் இந்தியா விமான மூலம் உணவு போட்ட செயலை முட்டாள்த் தனமானது என்று தர்மிஷ்டர் கண்டித்தார்; இப்போதும் கண்டித்து வருகிறார்.

அத்தோடு இலங்கை மீது இந்தியா நடத்திய 17 ஆவது ஆக்கிரமிப்பு என்று புள்ளி விவரம் போட்டு விளக்கினார்.

தர்மிஷ்டரின் தலைமையில் நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், 'இந்தியா உணவுப் பொருள்கள் பின்னர் அனுப்பப்படப் போகும்இந்திய இராணுவத்தினருக்கா'— என்று உயர்கல்விப் பிரதி அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

இப்படி எல்லாம் இந்திய எதிர்ப்பு உணர்ச்சி பரவ மறைமுக ஆதரவு கொடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் மின்னாமல் முழங்காமல் 'இந்தியா இன்றி நாம் வாழ முடியாது; இந்தியாவின் நலன்களையும் பேணவேண்டும். அதனால் தான் இந்திய இலங்கை ஒப்பந்தம். என் அனுமதியுடன் தான் இந்திய இராணுவம் இலங்கை வந்து உள்ளது'' — என்று எல்லாம் தர்மிஷ்டர் கூறினால், ......

**1957 - 1987 காலத்தில் ஓடிய இரத்த ஆறின் நினைவுச் சின்னமாக ஜனாதிபதி அங்கியில் காணப்படும் இரத்தக்கறையை எடுத்துக் கொள்ளலாம் அல்லவா!**

### சிரணிக்க முடியாமை

இந்திய, இணைப்பு எதிர்ப்பு உணர்ச்சிகளை மக்கள் மத்தியில் பரப்பி 'உரு'க் கொடுத்து விட்டு,

திடீரென்று பல்டி அடித்து இந்திய, இணைப்பு ஆதரவுக் கொள்கையைப் பிரசாரம் செய்யத் தொடங்கினால் 'உரு'ப் பெற்றவன் ஆடித் தான் அடங்க வேண்டும்.

இந்திய எதிர்ப்பு உணர்ச்சியின் உச்சக் கட்டம்தான் கொழும்பு ஜனாதிபதி மாளிகை முன் இடம் பெற்றது.

பிரியாவிடை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட சமயம் பிரதமர் காந்தியின் பிடரியில் விழுந்த துப்பாக்கி அடி அது.

இணைப்பு எதிர்ப்பு உணர்ச்சியின் உச்சக்கட்டம் தான் கடந்த செவ்வாய் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூடு; கிரனேட் வீச்சு.

### இரத்தக் கறை

கடந்த செவ்வாய் நடந்த சம்பவத்தில் தர்மிஷ்டரின் அங்கியில் இரத்தக்கறை ஏற்பட்டு விட்டது.

பெங்களூர் சார்க் மாநாட்டில் பேசுகையில் 'எனது பிரஜைகளைக் கொல்லும் ஒவ்வொரு குண்டும் எனது இருதயத்தைத் துளைத்துக் கொண்டு செல்கின்றது' — என்று கூறி வேதனைப்பட்டவர் தர்மிஷ்டர்.

அன்று அவருக்கு நீட்டப்பட்ட துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட இன்னொரு பிரஜையின் உடலில் பாய்ந்து அவரின் அங்கியில் இரத்தக் கறையை ஏற்படுத்தி விட்டது.

இரத்தக்கறை படிந்த அங்கியை நினைவுச் சின்னமாக வைக்கப்போகின்றேன்— இப்படி தர்மிஷ்டர் கூறிவிட்டார்.

1957 ஒப்பந்தம் கிழிக்கப்படாமல் இருந்திருந்தால்...... 1958 தொடக்கம் இன்றுவரை இடம் பெற்ற இனக்கலவரங்கள் இடம்பெற்றிருக்கா.

ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் உயிரிழந்திருக்கமாட்டார்கள்.

நாட்டில் இரத்த ஆறு ஓடியிருக்காது.

1957இல் இணைப்பை எதிர்த்ததன் பலனாக ஓடிய அப்பாவி மக்களின் இரத்தம் தான்—

1987இல் இணைப்பை ஏற்றுக் கொண்ட தன் பின்னர் தர்மிஷ்டரின் 'இரத்தக் கறை' யாகப் பற்றிக் கொண்டதோ என்றும் எண்ணலாம் அல்லவா!

'இணைப்பு,க்காக சிந்தப்பட்ட இரத்தத்தின் சின்னமாக அந்த 'இரத்தக்கறை'யைப் பாதுகாப்பதே பொருத்தமானது என்று கூறுவதில் தவறு உண்டோ!

மயிரிழையில் உயிர் தப்புமா?

பஞ்சாப் பிரச்சினையுடன் தான் இலங்கை இனப்பிரச்சினையைக் கொழும்புத் தலைவர்கள் அடிக்கடி ஒப்பிட்டுப் பேசி வந்தனர்.

இந்தியா எதிர்த்த போதும் கொழும்புத் தலைவர்கள் நிறுத்தவில்லை. கொழும்புத் தலைவர்கள் ஒப்பிட்டுப் பேசியதை ஏற்றுக் கொண்டால்,......

பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வுகாணச் செய்து கொண்ட ராஜீவ் லொங்கோவால் ஒப்பந்தம் அடைந்த நிலை ராஜீவ்-ஜே.ஆர் ஒப்பந்தத்துக்கு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் ஏற்படுகின்றது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மறுநாள் இந்தியப் பிரதமர் காந்தி ஜனாதிபதி மாளிகையில் முன்னால் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இருபத்தோராவது நாள் நாடாளுமன்றக் கட்டடத்தில் தர்மிஷ்டர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரண்டு நாடுகளின் தலைவர்களும் மயிரிழையில் உயிர் தப்பி விட்டனர்.

ஆனால் ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் மயிரிழையில் உயிர் தப்புமா? என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி.

'சட்டமூலம் நாடாளுமன்றம் வரட்டும். என் கருத்தைத் தெரிவிப்பேன்— இப்படிப் பிரதமர் பிரேமதாஸ கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் கூறி விட்டார்.

மயிரிழையில் ஒப்பந்தம் தப்பிப்பிழைக்குமா? என்பது பிரதமர் கூறும் பதிலில்தான் தங்கியுள்ளது. அதுவரை எமது எண்ண ஓட்டத்துக்குத் 'தணிக்கை' போட்டுக் கொள்வோம். ★

உள்ளும் புறமும் — குறுமுனி

### கரடு முரடா...

(8ஆம் பக்க தொடர்ச்சி)

பார்ப்போம் என்று மிதவாதத் தமிழர் சொல்கின்றனர்.

''முஸ்லிம்களுடன் சேர்ந்து செயல்பட்டு சர்வசன வாக்கெடுப்பை வெல்லும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.'' இப்படிக் கூறுகின்றார் மிதவாதத் தமிழ்த்தலைவரான நீலன் திருச்செல்வம். ★

---

இவான் லெண்டில்

## டென்னிஸ் போட்டியில் நாலு தடவை வென்றவர்

செக்கோஸ்லவேகியாவின் இவான் லெண்டில் ஒப்பின் டென்னிஸ் போட்டியில் நாலாவது தடவையாக வெற்றி பெற்று சாம்பியனாகியுள்ளார்.

இந்தப் போட்டியை வென்றதன் மூலம் இவர் 375,000 கனடியன் டொலரைப் பரிசுப் பணமாகப் பெறுகிறார். உலகில் நடக்கும முதல்தர டெனிஸ் போட்டிகளில் எல்லாம் வெற்றிவாகை சூடிவரும் இவருக்கு விம்பிள்டன் தான் இன்னும் துணை கொடுக்கவில்லை.

கனடியன் டெனிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்ட இவான் லெண்டிலை எதிர்த்து ஆடித்தோல்வி கண்டவர் சுவீடன் நாட்டவர் ஸ்டீபன் எட்பேர்க். இவரை 6-4, 7-6 என்ற புள்ளி அடிப்படையில் இவான் லெண்டில் தோற்கடித்தார்.

இந்தப் போட்டிகளில் ஆட்டத்தின் மத்தியில் வரையும் வந்த ஜிம்மி கொணர்சையும், பொறிஸ் பேக்கரையும் லெண்டிலும் எட்பேக்கும் வெற்றி கொண்டனர்.

இந்த ஆட்டத் தொடரில் ஜிம்மி கொணர்ஸ் சந்தோஷப்படக் கூடிய அம்சம் அவரின் நீண்ட கால விம்பிள்டன் போட்டி இறுதி ஆட்ட எதிரியான மக்கின்ரோவைத் தோற்கடித்ததே. இது மக்கின்ரோவும் ஜிம்மி கொணர்சும் ஒருவரை ஒருவர் எதிர் கொண்ட முப்பத்தியோராவது போட்டியாகும்.

விம்பிள்டன் சாம்பியன் ஆரம்ப ஆட்டங்களி

விளையாட்டு விமர்சனம்

அடிக்கடி ஆத்திரமூறும் ஜோன் மக்கின்ரோ அனுபவசாலியான ஜிம்மி கொணர்ஸ், இளம் பொறிஸ் பேக்கர், விம்பிள்டனின் புதுமுகம் பட் காஷ் ஆகியோரும் போட்டியிட்டுத் தோல்வியடைந்தனர்.

அரை இறுதி ஆட்டம்

லேயே தரக்கணிப்பில் 112 ஆவது இடத்தைப் பெறும் வண்ட்கிரன் இடம் தோல்வி கண்டார்.

ஈசன்

கடைசியாக வெளியிடப்பட்ட கம்பியூட்டர் மூலம் தரம் கணிக்கப்பட்ட வீரர்களின் வரிசையை வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

1. இவான் லெண்டில்
2. மட்ஸ் விலண்டர்
3. ஸ்டீபன் எட்பேர்க்
4. பொறிஸ் பேக்கர்
5. மிலோஸவ் மெக்கிர்
6. ஜிம்மி கொணர்ஸ்
7. பட் காஷ்
8. அன்டிரஸ்கோமிஸ்
9. யன்னிக் நோ
10. ஜோன் மக்கின்ரோ

### ஓட்டப்பந்தய வீரர் கார்ல் லூயிஸ்

1984 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவின் சார்பில் கலந்து கொண்டு பல தங்கப் பதக்கங்களை வென்று கொடுத்த ஓட்டக்காரர் கார்ல் லூயிஸ்.

அடுத்த ஒலிம்பிக் போட்டியிலும் சாதனைகள் பல புரிவார் என எதிர்பார்க்கப்படும் வேளையில் நீளம் பாய்தலில் அவருக்குப் போட்டியாக மேலும் இருவர் தோன்றியுள்ளனர்.

கடைசியாக அமெரிக்காவில் நடைபெற்ற போட்டியொன்றில் கார்ல் லூயிஸ் தனது அதிகூடிய தூரமான 28 அடி 4½ அங்குலங்கள் தாண்டியுள்ளார். இவருடன் போட்டிக்குத் தோன்றியுள்ள மற்றவர்கள் வறிமைறிக்ஸ், மைக் கொன்றி என்ற இரு அமெரிக்கர்களே. இவர்கள் தாண்டிய தூரங்கள் [illegible] 28 அடி 3½



அங்குலங்களும் 28 அடி [illegible] லாற்றிலேயே முதல் தடவையாக இந்தப் போட்டியில் தான் மூன்று நீளம்பாயும் போட்டியாளர்கள் ஒரே போட்டியில் 28 அடிக்கு மேலான தூரத்தைத் தாண்டியுள்ளார்கள்.

ஒலிம்பிக் போட்டிகளில் நீளம் பாய்தல் சாதனை 29 அடி 2½ அங். இந்தச் சாதனை 1968 ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் நடைபெற்ற போட்டியில் சோவியத் யூனியனைச் சேர்ந்த பீமொன்ஸினால் நிலை நாட்டப்பட்டது.

சென்ற முறை ஒலிம்பிக்கில் சோவியத் யூனியன் பங்குபற்றாத காரணத்தால் சுலபமாக வெற்றி பெற்ற லூயிஸ் இம்முறை சோவியத் யூனியன் வீரர் யெம்மியன் இடமிருந்து பலத்த சவாலை எதிர்நோக்கியுள்ளார். கடந்த மாதம் ரஷ்யாவில் நடைபெற்ற போட்டியொன்றில் யெம்மியன் 29 அடி 1 அங்குலம் பாய்ந்துள்ளார். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பீமொன்ஸைத் தவிர 29 அடி தூரத்திலும் அதிகமான தூரத்தைக் கடந்த வீரர் யெம்மியன் ஒருவரே.

கார்ல் லூயிஸ் தற்போதே முயற்சி செய்து 29 அடியிலும் கூடிய தூரத்தைத் தாண்ட முயற்சிக்காவிடின் அடுத்த ஒலிம்பிக்கில் [illegible] பதக்கத்தை மட்டுமல்ல [illegible] சாம்பியன் பட்டத்தையும் இழக்க வேண்டிவரும். ★

## "இதயம் பேசுகிறது" இதழின் ஆசிரியர் தலையங்கம்

புதிய சிந்தனைகளும் புதிய கருத்துக்களும் உடனடியாக எற்றுக் கொள்ளப்பட்டதாக வரலாறு இல்லை. கால ஓட்டத்திலும் அந்த சிந்தனைகளும் கருத்துகளும் பலனளிக்க ஆரம்பிக்கும்போது, அவை உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்குமா? பல்லாண்டுகளாக அல்லலுற்றுக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்படுத்துமா?' என்ற ஐயப்பாடு ஈழப்போராளிகள் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், 'சிங்கள மக்களின் நலனுக்கு எதிரானது இந்த ஒப்பந்தம்' என்ற எரிச்சல் சிங்களத் தலைவர்கள் சிலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் மத்தியில் இலங்கையின் எதிர்காலம் குறித்த ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியோடு பாரதப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

விதை ஊன்றிய உடனேயே பலனை எதிர்பார்க்கும் மனோபாவத்துடன் இந்த ஒப்பந்தத்தைப் பார்க்காமல், உலக அரசியல் நிலைகளையும், அது சுழன்று கொண்டிருக்கும் போக்கையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் இந்தத் திட்டம் இந்தியாவின் பாதுகாப்பிற்கும், ஆசியாவின் சமாதானத்திற்கும் உத்தரவாதமளிக்கும் ஒப்பந்தம் என்று புரிந்துகொள்ள முடியும்.

உணர்வு வயப்பட்டு இந்த ஒப்பந்தத்தைப் பழிப்பவர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது கையெழுத்திட்ட ஜெயவர்த்தனாவைப் பாராட்டுகிறோம்.

இலங்கைத் தமிழர்களின் நலனில் கொண்டுள்ள உளப்பூர்வமான ஈடுபாட்டின் காரணமாக இந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்த தமிழக முதல்வருக்கும், பாரதப் பிரதமருக்கும் நமது பாராட்டுக்கள்.

ஜெயவர்த்தனாவின் கடந்த கால செயல்களையும்; பாரதப்பிரதமர் செய்து கொண்ட பஞ்சாப், அஸ்ஸாம் ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையையும் பார்ப்பவர்களுக்கு இந்த ஒப்பந்தம் வெற்றி அடையுமா என்ற ஐயப்பாடு எழும்... அதைப் போக்குவது பாரதத்தின் பொறுப்பு என்று உணர்ந்து, பிரதமர் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் வெற்றிபெற வழி செய்வார் என்று நாடு நம்புகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ!

● நல்லூரில் சகாய விற்பனை

நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூபா 15/- பெறுமதியான மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு விசேடமாக அழகிய முருகன் ஸ்ரிக்கர் ஒன்றும் மேலதிகமாக வழங்கப்படும்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

# சஞ்சீவி

22 - 08 - 1987 சனிக்கிழமை

ஓம் முருகா!

★ நல்லூரில் சகாய விற்பனை

நல்லூரில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூ. 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு விசேட பரிசாக மாணவ மாணவியர்க்குப் பயன்தரும் உலகப்படமும் இலங்கைப்படமும் மேலதிகமாக வழங்கப்படும்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## விஞ்ஞான பீடப் பரீட்சைகள் - 1987

1987ம் ஆண்டிற்குரிய முதலாவது, இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் 02. 11. 1987 முதல் ஆரம்பமாகவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23செமீ × 10செமீ அளவுடைய கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

## தபால் விநியோகம் சீராகும்

கொழும்பு, ஆக. 22

வடபகுதி தபால் விநியோகம் விரைவில் சீராகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் இணைக்களம் போதுமான வாகனங்களை இதற்காக வடபகுதிக்கு அனுப்பிவைக்கும்.

- இப்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## வரவேற்பு

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது. (உ-எ)

## செல்வச்சந்நிதி.-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லின் புனருத்தாரண வேலைகளுக்கு அரசாங்கம் 35 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது என்பது தெரிந்ததே. (உ-7)

## நல்லூர்க் கந்தன் தேர் சிறப்பிதழ்

நாளை (ஞாயிற்றுக்கிழமை) உதயன் அதிக பக்கங்களுடன், நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்பிதழாக வெளிவருகிறது.

நல்லூர் முருகனின் அழகிய வண்ணச் சித்திரம் முகப்பை அலங்கரிக்க—

பல மூத்த எழுத்தாளர்களினதும், இளம் எழுத்தாளர்களினதும் கந்தன் புகழ் பேசும் அரிய கருத்தோவியங்கள் மிளிர —

வண்ண இதழாக மலரும் ஞாயிறு உதயனை உங்கள் ஏஜண்டிடம் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

தாமதித்தால் கிடைக்காது.

விலை ரூபா 1-50 மட்டுமே.

## அமெரிக்க, ஜப்பான் பஸ்களும் இங்கு ஓடும்

கொழும்பு, ஆக. 22

200 பஸ்களை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்போவதாக அமெரிக்காவும் ஜப்பானும் அறிவித்துள்ளன.

அடுத்த இரண்டு மாதங்களினுள் இந்த பஸ்கள் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு டஸ்ஸும் 45 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதனிடையில் இந்தியாவிடம் இருந்து இலங்கை வாங்கும் 500 பஸ்கள் டிசம்பர் மாதம் கொழும்பு வந்து சேரும். இந்த பஸ் ஒன்று 6 லட்சம் ரூபா பெறுமதியானது. உ-எ)

## விபத்தில் 60 பேர் பலி

கேப்டவுன், ஆக. 22

தென் ஆபிரிக்காவில் ஜோஹன்னஸ் பேர்க்கில் நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் 60சுரங்கத் தொழிலாளர் உயிரிழந்தனர். 30 தொழிலாளர் காயமடைந்தனர். (உ-எ)

## கூட்டணி உட்பட சக......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதிகளை நம்பித் தான் ஏற்றுள்ளோம். இந்திய அரசு மீது நம்பிக்கையுண்டு ஆனால் இலங்கை அரசில் நம்பிக்கையில்லை.

இரு நாடுகளும்செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எமது ஒத்துழைப்பை இந்தியா கோரியது. ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஏற்றுக் கொண்டோம்.

தமிழ் மக்கள் சுயநிர்ணயஉரிமையைதென்னிலங்கை அரசுகள் ஏற்றுக்கொள்ள தவறிய படியினால் தான் போராட்டத்தில் ஈடுபட்டோம். எமதுசுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்படுவதென்றால் இடது சாரிகள் ஆட்சி பீடம் ஏற வேண்டும். அதற்கு இடமிருப்பதாக [illegible]

இந்நாடு நிரந்தர சமாதானம், ஜனநாயகம் கொண்டதாக விளங்க வேண்டுமென்றால் உண்மையான உத்தரவாதமாக நாட்டில் பரந்த சோஷலிச சமூகமாற்றம் தேவை. இதனால் தான் பிரச்சினைக்கு தீர்வுகிடைக்கும்.

ஆயுத ஒப்படைப்பு மூலம் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் தான் எமது இயக்க உறுப்பினர்கள் அதிகமாக உள்ளனர். ஆரம்ப காலம் முதல் எமது நடவடிக்கைகள் இடப்பெறுகிறது. மேலும் பணிகள் தொடரும்.

எமது எதிர்காலத்தை பொறுத்தவரை உடன்படிக்கை மூலம் செய்யக் கூடியவற்றை செய்வோம். மக்கள் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை முன்னெடுத்து தொடருவோம்.

எமது தோழர்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் புனர்வாழ்வுவேலைத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கு இந்தியஅரசு உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளது.

கல்வியைத் தொடர வேண்டியவர்கள் கல்வியைத் தொடருவார்கள்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கல்வி, தொழில்வாய்ப்புகள் புனர்வாழ்வுதிட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டும்.

தேர்தலில் ஈடுபடுவதா? இல்லையா?- என இதுவரை முடிவு செய்யவில்லை. தேர்தலில் போட்டியிடுவதென்றால் முழுமையாகக்கலந்து கொள்ளமாட்டோம், அதற்கென தெரிவு செய்யப்பட்ட குழுவினர் மட்டும் தான் கலந்து கொள்வார்கள்.

இடைக்கால சபையில் சகல அமைப்புகளுக்கும் சமஅளவுஅங்கத்துவம் வழங்கப்படடல் வேண்டும் இதனால் தான் சார்பற்ற அமைப்பாக செயற்படும் பொறுப்பு வாய்ந்தவர்கள் அதில் அங்கம் பெற வேண்டும். இல்லையேல் அதன் குறிக்கோள் நிறைவு பெறாது. இது பற்றி இந்திய அரசிடம் கருத்துக்களை முன்வைத்துள்ளோம்-என்றார். (உ 21)

## போராளிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகின.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட இருக்கும் அதிகாரங்கள் குறித்து போராளிகள் தரப்பின் நிலைப்பாட்டை அறிய இந்தியக் குழு விரும்பியதாம்.

அதுகுறித்து இந்திய அமைதிப்படைத் தளபதி ஹத்கிர்சிங் மூலம் போராளிகள் அமைப்புகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்தே ஓர் இயக்கத்தின் சார்பில் இரண்டு சட்டத்தரணிகளும், இயக்கத்தின் அரசியல் பிரிவுப் பிரமுகரும் இந்திய விமானத்தில் கொழும்பு விரைந்தனர்.

மற்றொரு இயக்கச் சார்பில் சட்டத்தரணிக் குழு ஒன்று நேற்றுக் கொழும்பு பயணமாகலாம் என எதிர்பார்க்கப் பட்டிருந்தது.

இதேவேளை கொழும்பு சென்றிருக்கும் குழு போராளிகள்—இலங்கை அரசு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கான ஆலோசனைகளையும் நடத்துமாறு கேட்கப்படலாம் என அறியவந்தது. (அ-ஒ-10)

## அமைச்சர்களின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ஒரு இடத்துக்குச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரே அவரின் பாதுகாப்பு அதிகாரிகள் சென்று பரிசோதனை செய்வர். அன்றும் அப்படி நடந்தது.

துப்பாக்கிச் சூடு, கிரனேட் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் எவரும் நாடாளுமன்றக் கட்டடத்தை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அப்படியான நிலையில் இத்தாக்குதலை நடத்தியவர்கள் உள்ளே இருந்தவர்களில் ஒருவராகவே இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே பொலீஸ் விசாரணை நடைபெறுகின்றது. (உ-எ)

## பிரசைகள் கூட்டம்

பலாலி, ஆக 22

யாழ் வலிகாமம் வடக்கு, மயிலிட்டி தெற்கு பிரசைகள் குழுவின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிறன்று காலை 9 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறும்.

குரும்பசிட்டி கிராமம் தவிர்ந்த ஏனைய கிராமங்களது இழப்பீடுகள் அழிவுகள், நஷ்டஈடு நடவடிக்கை ஆகியவைபற்றிய விடயங்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப் படவுள்ளதாக கூட்ட அமைப்பாளர் திரு. அனு. வை. நாசராஜன் தெரிவித்தார். (உ 119)

## ராஜீவ் பிறந்த தினம்

புதுடில்லி, ஆக. 21

பிரதமர் ராஜீவ் காந்தி வெள்ளி தனது 44ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

ஜனாதிபதி வெங்கடராமன், முப்படைத் தளபதிகள், அரசியல் தலைவர்கள் பிரதமரை நேரில் சந்தித்து வாழ்த்தினர் (அ-எ.

## முக்கிய அறிவித்தல்

வாடிக்கையாளர் நண்பர்கள் யாழ் மக்கள் யாவருக்கும் உங்கள் மனதில் இடம் பிடித்துவிட்ட

# R.S.R. Green Peking Palace

இப்பொழுது புதிய மெருகுடன் குறைந்த விலையில் சுவை, தரம் இவற்றுடன்

★ Lunch Parcels
★ Fried Rice
★ Buriyani
★ Chinese Fried Noodles

Etc, Etc, Etc.

ALSO Sat, Sun Evening Special

Beer with Meat Omelette Rs.35/-

நாடுங்கள்

R. S. R. GREEN PEKING PALACE

4th Cross Street. JAFFNA.

( சின்னக்கடை மார்க்கட் முன்பாக)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு உதயன் நடத்தும்

## அதிர்ஷ்டப் பயணப் போட்டி

பெயர் ____________________

முகவரி ____________________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

## யாழ். லியோ கழக சேவைக்கு உதவுங்கள்

யாழ். லியோ கழகத்தினர் ஜெய்ப்பூர் கால் நிதிக்காகவும், தமது சேவை நிதிக்காகவும் பணம் சேர்ப்பதற்காக நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் ஒரு சேவைநிதி நிலையத்தைத் திறந்துள்ளார்கள்.

இவர்களால் விற்கப்படும் அதிர்ஷ்ட லாபச்சிட்டுகளையும் ரீசேட், திறப்புக் கோர்வை, ஸ்ரிக்கர் போன்ற பொருள்களையும் வாங்கி நீங்களும் இவர்களது சேவைகளுக்கு உதவுங்கள்.

★ சேவைகளிற் சிறந்தது
★ மக்கள் சேவையே

HORIZON Enterprises

## குவைத் KUWAIT குவைத்

குவைத் நாட்டிற்கு குறுகிய நாட்களுள் அனுப்பிவைக்கக்கூடிய ஓர் அரியசந்தர்ப்பம். நாம் மேற்கொள்ளும் அனைத்து நாடுகளுக்கான வேலைவாய்ப்பும் உதவிமுகவர் நிலையமின்றி நேரிலேயே அனுப்பும் (Main) தலைமை முகவர் நிலையம் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே சந்தேகத்தை தவிர்த்து எவ்வித அச்சமுமின்றி விரையுங்கள்.

கீழ்க்காணும் குவைத் நாட்டிற்கான ★ வெற்றிடங்கள் ★

1. கூலியாட்கள் — Labourers
2. மேசன் — Masons
3. தச்சுவேலை — Carpenter
4 சுத்திகரிப்பாளர் — Cleaners
5. இலெக்ரீசியன் — Electricians
6. மேற்பார்வையாளர்— Supervisors
7. வீட்டு சாரதிகள் — House Driver
8. கனரக சாரதிகள் — H. V. Drivers
9. வின்ச் ஒப்பரேட்டர் — Winch Operator
10, மெக்கானிக் — Mechanic
11. தையல்காரர் — Tailor
12 பணிப்பெண்கள் — House Maids
13. ஆஸ்பத்திரி தாதிகள்— Nurse

## ● றியாட் - பன்ரா சுப்பர் மார்க்கெட்

## Panta Super Market-Riyadh

(ஓரளவு ஆங்கில அறிவு தேவை)

ஹாபர் - டமாம் - Harbour - Damam

1. வின்ச் ஒப்பரேட்டர் — Winch Operator
2. கனரக உபகரண மெக்கானிக் Heavy Equipment Mechanic
3. கனரக உபகரண இலெக்ரீசியன் Heavy Equipment Electrician
4. மாப்பண்ட தயாரிப்பாளர் Pastry Cook

★ உணவு இருப்பிடவசதி இலவசம்
★ பாஸ்போட் 16 புகைப்படங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்
★ முற்பணம் அறவிடப்படமாட்டாது. வயதெல்லை 18 முதல் 45 வரை

### சாரதி அனுமதிப்பத்திரம்

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கும் வாகனம் செலுத்தத் தெரியாதவர்களுக்கு வாகனம் செலுத்தப் பழக்கியும் 3 நாட்களில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும், எமது முகவர் நிலையத்தினால் வெளிநாடு செல்டவர்களுக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகளுக்கான பிரயாண ஒழுங்குகள் மட்டுமே நாம் மேற்கொள்கிறோம்
★ பிரதிவாரமும் பிரயாணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடும் ஒரே ஒரு பிரயாண முகவர் நிலையம்
★ கடிதமூலம் எமது முகவர் நிலையத்தைப் பற்றிய விவரங்கள் பெற விரும்புவோர் சுயவிலாசமிட்ட முத்திரைக் கவருடன் தொடர்புகொள்ளவும்.

# A. பத்மதாஸ்

97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு:
யாழ்ப்பாணம்-

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 22-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Saturday August 22 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org